Free Website :
for Matrialmonial Website

micheaijulian@facebook.com
www.indianadarmurasu.com

ஜூன் - 2023
நாடார் :13
முரசு :6



# இந்தியன் நாடார் முரசு

INDIAN NADAR MURASU

விலை ரூ.15/-

கல்வி எழுச்சி மலர்


# ANNAI VEILANKANNI'S
## GROUP OF EDUCATIONAL INSTITUTIONS



**Courses Offered**

**COLLEGE FOR WOMEN (Arts & Science)**
Affiliated to University of Madras | Accredited by NAAC

**UG Courses**

- **B.Com.**
  - General
  - Accounting & Finance
  - Computer Applications
  - Information Systems Management
  - Corporate Secretaryship
- **B.A.**
  - English Literature
- **B.B.A.**
- **B.C.A.**
- **B.Sc.**
  - Bio-Chemistry
  - Mathematics
  - Computer Science

**PG Courses**

- **M.Com.** • **MHRM** • **M.Sc.** : Comp. Science, Bio-Chemistry

**COLLEGE OF ENGINEERING**
Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai

**B.E.**

• Civil • Mechanical • EEE
• ECE • Computer Science

SC / ST / SCA / BCC மாணவர்களுக்கு கல்வி மற்றும் பேருந்து கட்டணம் கிடையாது

DIRECT SECOND YEAR LATERAL ENTRY SEATS AVAILABLE

ANNA UNIVERSITY COUNSELING CODE:
**1133**

**Other Professional Courses**

• B.Ed. • D.T.Ed.
• B.Pharmacy • M.Pharmacy
• B.Sc. Nursing
Diploma in Nursing (GNM)









Dr. S. Devaraj
Chairman



Dr. D. Dev Anand
Secretary



Dr. D. Johny Christopher
Director

#81, VGP Salai, West Saidapet, Chennai-600 015
Tel.: 044-43523712, 24710820

#33, Gandhi Road, Near Perungalathur Railway Station
Nedungundram, Chennai-127
Tel.: 044-22794192, 22794155, 22794064

Helpline : 9282144444 | Email : mail4avc@gmail.com | www.annaiveilankannis.com

# NELLAI NADAR
## Matric. Hr. Sec. School

(Belonging to Nellai Thoothukudi Nadar Magamai Paripalana Sangam)

**(BELONGING TO NELLAI THOOTHUKUDI NADAR MAHAMAI PARIPALANA SANGAM)**

**3/590, LAKSHMANA PERUMAL NAGAR, KOTTIVAKKAM, CHENNAI-600041.**

**PH:044-24511984, 24512571. website:www.nellainadarschool.com**




# NELLAI NADAR
## MATRIC. HR. SEC. SCHOOL


(BELONGING TO NELLAI THOOTHUKUDI NADAR MAHAMAI PARIPALANA SANGAM)
3/590, LAKSHMANA PERUMAL NAGAR, KOTTIVAKKAM, CHENNAI-600041.

PH: 044-2451 1984,2451 2571 Website: www.nellainadarschool.com

*Congratulations*

## GLORIUOS ACHIEVEMENT IN STD - XII BOARD EXAM - 2023

## OUR SCHOOL TOPPERS



**RANK-I**
591/600
**SYED AHMED FARMAAN**

PHYSICS: 100
CHEMISTRY: 100
COMP.SCIENCE: 100



**RANK-II**
586/600
**PADMAPRIYA.P**

COMMERCE: 100
COMP.APPLICATION: 100



**RANK-II**
586/600
**DIVYA.D**

ACCOUNTANCY: 100



**RANK-III**
581/600
**PREETHI.B**

COMMERCE: 100
ACCOUNTANCY: 100

**NUMBER OF CENTUM SCORERS : 42**

**NUMBER OF STUDENTS WHO SECURED ABOVE 500 : 84**

அகில உலக நாடார்களின் செய்திக்களஞ்சியம்

R.Dis.NO.1434/09

இந்திய நாடார் முரசு

சமுதாய பல்சுவை மாத இதழ்

கௌரவ ஆசிரியர்: **விஜய்வசந்தகுமார்.**

*பேராசிரியர்:* **திரு.ஜூலியன் நாடார்**

ஆசிரியர்: டாக்டர்.J.*அர்னால்ட் அரசு ஜூலியன்*

துணை ஆசிரியர்:திருமதி.எல்மாமதி.,எம்.ஏ.பி.எட்

இணை ஆசிரியர்:ரேஷ்மாமதி M.Sc.,(U.S.A)

இலக்கிய ஆலோசகர்: கலைமாமணி திரு.தாமரை செந்தூர்பாண்டியன்

சட்ட ஆலோசகர்:

Dr.தே.தேவ் ஆனந்த். MBA.,M.Com.,MHRM.,MSW., ML., Ph.D.,

செயலாளர்,அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.

ஆலோசனைக் குழு:

திருமதி.ராணிவெங்கடேசன் முன்னாள் MLA

டாக்டர்.S.தேவராஜ் Chairman

Annai Veilankanni's Group of Educational Institutions

R.K.காளிதாஸ் தலைவர்.தெக்ஷணமாற நாடார் சங்கம், மாவட்டதலைவர்: தென்காசி, திருநெல்வேலி மாவட்ட வர்த்தக கழகம், தலைவர், பெருந்தலைவர் காமராஜர் தினசரி மார்கெட் பாவூர்சத்திரம்., அமைப்பாளர்: தென்காசி மாவட்ட அனைத்து சமுதாய ஆலோசனை கமிட்டி.

திரு.பி.சின்னமணி நாடார் தலைவர், சென்னைவாழ் நாடார் சங்கம்

டாக்டர் வி.ஜி.சந்தோஷம்

டாக்டர்.குமரேசன்

போரூர் ஆனந்தராஜ் தலைவர் நெ.தூ.நா.மகமை பரிபாலன சங்கம்.

தலைமை அலுவலகம்:

**புதிய எண்:1, ப.எண்:21, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு, மேட்டுப்பாளையம்,மேற்கு மாம்பலம், சென்னை-600 033.**

**போன்:044-23810610 (வீடு)**

**E-mail:nadar10_2000@yahoo.com, indianadarmurasu@yahoo.com**

தலைமை வியாபார அலுவலகம்:

**30, தேரடி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.**

**போன்: 044-23811087,**

**அலுவலக நேரம்:10.00am to 9.00pm**

இந்திய நாடார் முரசுக்காக அச்சிட்டு வெளியிடுபவர்
டாக்டர்.திரு.K.M.J.A.அரசு, ஜூலியன்.

அலுவலக நிர்வாகம், கம்ப்யூட்டர்: திருமதி.G.சத்தியாபுருஷோத்தமன்,M.A.,B.Ed

ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION CHENNAI CITY COURTS ONLY. NOTHING INDIANADAR MURASU IS INTENED TO DEFAME ANY PERSON. BUT EXPRESSED IN GOOD FATH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.

எந்த வகையிலும் மறுபதிப்பு செய்தல் தடை செய்யப்படுகிறது. கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை முதலியன எதையும் தபால் அல்லது மின் அஞ்சல் மூலமாக அனுப்பவும். அவற்றை திருத்தி அமைக்கவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. வெளியூர் சந்தாதாரர்கள் தபால் மூலமாகவோ, காசோலையாகவோ அனுப்பி வைக்கவும். அறிமுகம் இல்லாதவர்களிடம் சந்தா மற்றும் விளம்பரத் தொகையை கொடுத்து ஏமாற வேண்டாம்.

விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| வெளி முன் அட்டை | (17X24 CMS) | ரூ. 25,000 |
| வெளி பின் அட்டை | (17X24 CMS) | ரூ. 15,000 |
| உள் அட்டை | (17X24 CMS) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | (17X24 CMS) | ரூ. 5,000 |
| அரைப்பக்கம் | (17X12 CMS) | ரூ. 2,500 |
| கால்பக்கம் | ($8^{1/2}$X12 CMS) | ரூ. 1,500 |
| அரைக்கால்பக்கம் | ($8^{1/2}$X6 CMS) | ரூ. 900 |

ஆண்டு சந்தா- ரூ.550, 2ஆண்டு சந்தா-ரூ.1100
ஆயுள் சந்தா ரூ.15,000, 5 ஆண்டு சந்தா- ரூ.5000.
மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, கனடா,
தென் ஆப்பிரிக்கா மற்றும் அயல் நாடுகளுக்கு
ஆண்டு சந்தா/ ரூ.3000 அல்லது அமெரிக்கா டாலர்,$100
ஆயுள் சந்தா/ரூ.20,000 அல்லது அமெரிக்கா டாலர் $600

சந்தா அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு எண்:
The Karur Vysys Bank Saidapet Branch: MR.K.M.Julian
IFSC Code: KVBL0001651.

**A/c No: 1651173000000900**

**Google Pay : 9382172884 paytm 9382172884**

# ஆசிரியர் உரை

## சேர, சோழ, பாண்டியர் மற்றும் காமராஜர் வழி வந்த நாடார்களே!!!



கல்விக்கு கண் திறந்த கர்மவீரர் காமராஜரின் வழி வந்த சொந்தங்களே நாடார் முரசு நாடார்களால், நாடார்களுக்கான பத்திரிகை இந்த இதழ் ஆசிரியர் உரை பேராசிரியர். முனைவர் ஜா.அருள்பிரகாஷ் அவர்களின் ஆசிரியர் உரையாக வெளிவருகிறது. தமிழ்நாடு, இந்திய திருநாடு மட்டுமல்லாமல் உலக முழுவதும் தமிழர்கள் சிறப்பு வாய்ந்தவர்களாக கருதப்படுவதற்கு காமராஜர் அவர்கள் வகுத்த ஏற்படுத்திய கல்வித் துறையில் சீர்மிகு சீர்த்திருத்தங்கள் தான் காரணமாக விளங்குகிறது.

கல்வித்தந்தை எனப் போற்றப்படும் கர்மவீரர் காமராஜர் அவர்களால் பெரும் போராட்டங்களுக்குப் பின் கொண்டு வரப்பட்ட பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி உதவித் தொகை அனைத்து வகையான படிப்புகளுக்கும் (பள்ளித்துறை மற்றும் கல்லூரித்துறை) ஏற்படுத்தியதன் மூலமாகத்தான் தமிழ்நாடு மற்றும் இந்தியா, உலக நாடுகளிலும் தமிழர்கள் அதிலும் சான்றோர்களாகிய நாம் மற்றும் நம்மைச் சார்ந்தவர்கள் பள்ளிகள், கல்லூரிகள் தொழிற்கூடங்கள் அமைத்து அனைத்து ஜாதி மதம் சார்ந்தவர்கள் பயன் பெறும் வகையில் இன்று வரை சாதித்து காட்டி உள்ளனர்.

காமராஜர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மதிய உணவுத்திட்டமும் பிற்படுத்தப்பட்ட நமது குலம் சார்ந்த மாணவர்கள் படிப்பின் மீது ஈர்ப்பு வரகாரணமாகவும் மாணவர்களுக்கான தங்குமிட வசதி அமைத்துக் கொடுத்ததின் மூலம் சான்றோர்களாகிய நாம் கிராமங்களில் இருந்து கிளம்பி நகரங்களுக்குச் சென்று தங்கி கல்வி பயில உறுதுணையாக இருந்தது.

இந்த திட்டங்களால் பயன் பெற்றவர்களில் நானும் ஒருவன் என்று சொல்லிக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். நான் பள்ளிப்படிப்பு மற்றும் கல்லூரிப் படிப்பை முடித்திட இத்திட்டங்கள் எனக்கு பெரும் உதவியாகஇருந்தது என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்வதோடு நம் சான்றோர் அனைவரும் நமது பிள்ளைகளை நன்கு படிக்க வைக்க இந்த திட்டங்களை பயன்படுத்தவும் மாணவர்களை ஊக்கப்படுத்தவும் அன்பு பெற்றோர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இதேப் போல நம் சான்றோர் குலத்தினை பெருமைப்படுத்தும் நம் குலத்தொழிலான பனைமரம் சார்ந்த விவசாய தொழிலை மேம்படுத்தி தற்போது உள்ள நமது தமிழ்நாடு அரசு பெரும்பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது. அதற்கு சான்றாக பனைமரத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்திட தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவராக அண்ணன் முன்னாள் சட்டமன்ற உறுபினர் மற்றும் சான்றோர்களுக்கு சிறப்பு சேர்த்துள்ளார் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

கல்வித்தந்தை காமராஜர் அவர்களின் கல்விக் கொள்கை திட்டத்தின் மூலம் நான் பயன் பெற்றது போல இந்த கல்வியாண்டில் 2024 +2 வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு மாணவ மாணவிகள் தாங்கள் தொடர்ந்து கல்வி பயின்று கல்விப்பணி மற்றும் தொழில் தொடங்கி நம் நாட்டிற்கு பெரும் வளர்ச்சி எட்டிட தொடர்ந்து சான்றோர்களாகிய நாம் முயன்றிட வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

சான்றோர் குல மாணவர்கள் தங்கள் கல்வி பயில தமிழ்நாட்டில் உள்ள நம் சான்றோர்கள் நிர்வகித்து வரும் கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் நம் மாணவர்கள் பயில வேண்டும் என்றும் இதன்மூலம் கேட்டுக்கொள்கிறேன். பெற்றோர்கள் ஒவ்வொருவரும் சான்றோர்கள் நிர்வகிக்கும் பள்ளிக் கல்லூரிகளைக் கேட்டுத் தெரிந்து அதில் நம் பிள்ளைகளை பயில ஏற்பாடு செய்யுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

நான் இன்று பேராசிரியராக வளர்ந்து வர எனக்கு கல்விக் கொள்கை மூலமாக எனக்கும் மற்றும் சான்றோர்களுக்கும் உதவிய கர்மவீரர் காமராஜருக்கும் மற்றும் என்னை உருவாக்கிய எனதுதந்தை மற்றும் தாய்க்கும் நன்றி கூறுவதோடு என்னை வாழ்க்கைக்கு உகந்தவனாக செதுக்கிய பள்ளி கல்லூரி ஆசிரிய பெருமக்களுக்கும் நன்றியை கூறிக் கொள்கிறேன். நன்றியுடன். பேராசிரியர் முனைவர்.ஜா.அருள்பிரகாஷ் அன்னை வேளாங்கண்ணி கலைக்கல்லூரி சைதாப்பேட்டை, சென்னை-15. இணைச் செயலாளர் தென்னக சான்றோர் சங்கம்.

அம்பத்தூர்: 9840287570
திருமுல்லைவாயில்: 9840948727



# அமிர்தகனி
# திருமண தகவல் மையம்

(நாடார் சமூகத்திற்கு மட்டும்)

எண்:5, 3வது தெரு, வள்ளலார் நகர், திருமுல்லைவாயில், சென்னை-62.



உவரி ஸ்ரீ சுயம்புலிங்க சுவாமி துணை

## ஸ்ரீ மகாலட்சுமி ஜோதிட நிலையம்

**நாடார் திருமண தகவல் மையம்.**

எண்:17, டாக்டர் அம்பேத்கர் சாலை, பெரியார் நகர் விரிவு, மடிப்பாக்கம், சென்னை-91.
நெல்லை எம்.ஆர்.இராமச்சந்திரன்நாடார்., M.Sc., Astrology.
E-mail:yogamaster.chandran@gmail.com Ph:9786722267. 9444062989.
வாட்சஆப்பில் தொடர்பு கொள்ளவும்.

**இல்லத்தரிசிகளின் இனிய தேர்வு........**

# SURIYAN

**SPICES-MASALA-OIL**

**CHENNAI**

**CUSTOMER CARE**
**Ph-9361999639**

**நாட்டு சர்க்கரை, SURIYAN விளக்கு ஏற்றும் எண்ணெய்-**
**200ml500ml மற்றும்1litter**

**Wanted Distributoes : 9361999639 . suriyanmasala@gmail.com**

# +2க்கு பிறகு என்ன படிக்கலாம்? எப்படி படிக்கலாம்?



தற்போது கற்றல்முறையில் பெரிய அளவில் மாற்றம் கண்டுள்ளது. வேலை வாய்ப்பு சந்தையில் போட்டிகள் அதிகரித்துள்ளன. இந்த நிலையில் பிளஸ்டூ படிக்கும் மாணவ மாணவிகள் உயர்கல்விக்கு செல்லும் போது சிந்தித்து முடிவெடுக்க வேண்டியது அவசியமாகிறது. தற்போது பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு உயர் கல்விக்கான வாய்ப்புகளையும், எதிர்கால வேலை வாய்ப்புகளையும் வழிகாட்டும் வகையில் என்ன படிக்கலாம்? எங்கு படிக்கலாம்? எப்படி படிக்கலாம்?.

மாணவர்கள் உயர்கல்வி குறித்து யோசிக்கும் போது மருத்துவம், பொறியியல், அறிவியல், பி.காம், சட்டம், விஷுவல் கம்யூனிக்கேஷன் என ஏராளமான வாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன. இதில் மாணவர்கள் ஆர்வத்திற்கும், திறமைக்கும் சவாலாக உள்ள படிப்புகளை தேர்ந்தெடுக்கலாம். மாணவர்களின் ஆர்வத்தை ஆக்கப்பூர்வமாக மாற்றும் வல்லமை படைத்து கல்லூரிகள். கல்லூரி படிப்பையும், கல்லூரியையும் எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதில் ஆரம்பித்து ஒவ்வொரு படிப்பிலும் உள்ள வேலை வாய்ப்புகள் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

+2 வில் Maths, Physiscs, Chemistry, Computer Science, Maths Biology, எடுத்து படிக்கும் மாணவர்கள் Engineering BE/B.Tech., Science group ல் B.Sc Physisc, Chemistry, Maths, Computer Science, Botany, Zology, Biotech, Agriculture, Fisheries/

Mechanical, Civil, Electronics, eletrical, Computer Science, B.Tech IT, Artificial Intelligence Data Science (AIDS), Artificial Intelligence Machine Learning (AIML), Cyber Security, போன்ற புதிய புதிய படிப்புகள் உள்ளன.

மருத்துவ துறையில் MBBS, BVSC, Sidha, Ayurvedic, Naturopathy, Unani, பாராமெடிக்கல் படிப்பு, Nursing, Physiotherapy, Pharmacy, Diploma,

+2 வில் Business Maths படித்த மாணவர்கள் அதாவது மூன்றாவது குரூப் என சொல்லப்படும் Commerce, Accounts, Economics, Computer Science - CA, ICWA, ICS, B.A Economics, law, Visual Communication, Social Work, Caterings, Hospitality, Food and Nutritions, ITI, Literature, Design, Fashion Technology, Journalism, Geography, Geology, Polytechic Courses.

பிளஸ் டூ முடித்தவுடன் கல்லூரியில் சேர்ந்து விட்டால் போதும் நிச்சயம் வேலை கிடைத்து விடும் என்ற நம்பிக்கையுடன் மாணவர்கள் கல்வியை உள்வாங்கி இருக்கிறார்கள் என்பதும், கல்லூரி படிப்பு மாணவர்களை எந்தளவுக்கு மேம்படுத்தி இருக்கிறது என்பதும் தான் அடுத்த நிலை உயர்வுக்கான அளவு கோல், கல்லூரியில் சேர்ந்து படிப்பில் கவனம் செலுத்திட வேண்டும். அரியஸ் இல்லாமல் ஒவ்வொரு செமஸ்டரிலும் அதிக மதிப்பெண்கள் பெற்றிட வேண்டும்.

நீங்கள் அடுத்தடுத்து முன்னேற வேண்டுமெனில் உங்களது படிப்பில் கவனம் செலுத்திட வேண்டும்.. படித்து முடித்தவுடன் வேலை வாய்ப்பை பெற என்ன செய்ய வேண்டும் என்று யோசியுங்கள். டிஜிட்டல் தொழில்நுட்ப காலத்தில் வாழ்வதால் உங்களது துறை சார்ந்த தகவல் தொழில் நுட்ப விஷயத்தை கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுங்கள். உங்களது படிப்பு சார்ந்த விஷயங்களில் அதிக கவனம் செலுத்துங்கள்.

பெற்றோர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு உங்களைப் படிக்க வைக்கிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். நீங்கள் கல்லூரியில் படிக்கும் போது மத்திய மாநில அரசுகள் உங்களுக்காக ஏராளமாக செலவு செய்கிறது. குறிப்பாக SC/ST/BC/ Christian Adi Dravider தகுதியான மாணவர்களுக்கு பொறியியல் கல்லூரியில் நான்கு ஆண்டுகள் இலவசமாக படிக்க அரசு ஊக்கத் தொகை வழங்குகிறது குடும்ப ஆண்டு வருமானம் 2 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். நீங்கள் எடுத்துக்காட்டாக கலை அறிவியலில் B.SC Computer படிப்பை முடித்துவிட்டு, M.Sc Computer Science படிக்கும் 5வருட படிப்பிற்கும் இணையானது B.E Computer Science படிப்பு ஆகும். முதல் தலைமுறை மாணவர்கள், இராணுவ துறையை சேர்ந்த மாணவர்கள், மாவட்ட அளவில் படிப்பு, விளையாட்டு துறையில் சிறந்து விளங்கிய மாணவர்கள், தாய் அல்லது தந்தையை இழந்த மாணவர்கள் வெளிமாவட்டங்களை சேர்ந்த மாணவர்களுக்கு தங்கும் இடம் அன்னை வேளாங்கண்ணி பொறியியல் கல்லூரி பெருங்களத்தூரில் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த கல்வி நிறுவனம் சென்னையில் பிரபலமான கல்வி நிறுவனங்களில் ஒன்று தனது கல்வி சேவையில் 36 ஆண்டுகள் படிப்புடன், பொது சேவைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் நல்லொழுக்கத்தையும் வளர்க்கப்படும் நிறுவனமாகும்., இது உங்களுடைய வாழ்க்கையை முன்னேற்றுவதற்காக மட்டுமே முன்னேறுவோம். சமூகத்தையும் நாட்டையும், முன்னேற்றுவோம். பொது சேவையில் ஈடுபடுவோம்.

**என்றும் கல்விப் பணியில் Dr.தே.தேவ் ஆனந்த்.** MBA.,M.Com.,MHRM.,MSW., ML., Ph.D.,
செயலாளர், அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள்,சென்னை-15.
www.annaiveilankannis.com E-mail:devanand222@gmail.com Help line:9282144444. 044-43523712.



எப்போதும் வென்றான் ஸ்ரீ சோலையப்ப சுவாமி துணை

**அடையார் ஆனந்த விநாயகர்**

**காய்கனி & பழங்கள் அங்காடி**

(எங்களிடம் தரமான காய்கனி அனைத்தும் கிடைக்கும்)

**அடையார் முருகன் டிராவல்ஸ்**

நெ. 69/14, 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையார்,
சென்னை-20 செல்: 9840038140, போன்: 24416633, 42116663,



உரிமையாளர்:
த.பரமசிவன்

24 மணி நேர சேவை

P.R. Dinakaran ஸ்ரீவனங்காத்த பார்வதி அம்மன் துணை Ph: 044-2440 1255
Mobile: 9884447771



**THIYAGARAJAN Bros**

Waste Paper & LED, LCD T.V, Lap Top, All Computer Items,
Mobile Phones, A/C.Refrigrator, Washing Machine, All
Metals & All kinds of Scrap Dealers

New No:20, 2nd Cross Street, Kasthuribai Nagar, Adyar, Chennai-20.



**உரிமை:T.DURAI, T.KUMAR. Cell:9444316813**

**பேபி. புரோட்டீன்ஸ்**

**WHOLESALE & RETAIL**

**2/37, 4th Lane, 1st Street Main Road, Shasthri Nagar,
Adyar, Chennai-20. Ph:24465921. FREE HOME
DELIVERY.**

காமராஜர் புகழ் வாழ்க! **கோட்டூர் வியாபாரிகள்** நாடார் குலம் வளர்க!



**சங்கம்**

கோட்டூர் சென்னை-85.

செயலாளர் ஆர்.பாஸ்கரன், செல்:9384875525





**REVATHI LABEL PRINTERS**

**R.DHEVI 98414 41111, 99415 51111**

**Barcode Sticker, Multi Colour Sticker, Trolley Tags,
Thermal Ribbons, Barcode Printers, Consumables, &
Software Support.**

2/645, Habeeba Street, Chinna Neelangarai, Chennai-115.
Emaill: dhevi_rlp@yahoo.co.in




ஆர்.சித்தர்ராஜ் நாடார்
குட்வில் ரியல் எஸ்டேட்
136, ஆநீகாடு ரோடு, வளசரவாக்கம்,
சென்னை-87. செல்:9444083769



T.Bernet Johnson M.E.,MBA., Managing Director. 72009 06699 / 90032 86677
7200506699.



JEHOVAH
GROUP OF COMPANIES
•Lab Ezuipments Manufacturing •Industrial Lunricant Distributor
•Automotive Lubricant Distributor •Industrial Equipments & Spares
E-jehovahjirehengineering@gmail.com / W: www.jehovahengg.com
No:60. 4th Main Road, L&T Colony, CRR Puram, Manapakkam, Chennai-125



C.மதியழகன்
செல்:9789095625.
வாழ்க வளமுடன்
ஸ்ரீ கணேஷ் பவன்
SGB



எண்:6, முத்துலிங்க ரெட்டி தெரு, (எம்.ஆர்.தியேட்டர் பில்டிங்) மேற்கு தாம்பரம், சென்னை-45. போன்:M.சுரேஷ். செல்:9840945243.

எண்:1, வள்ளலார். தெரு, சேலையூர், கேம்ப்ரோடு, சென்னை-73.







சென்னை குரோம்பேட்டை சுகம் மருத்துவமனையில் அதிநவீன இருதய சிகிச்சை மையம் துவக்கம்.

திருவொற்றியூர் மே20 வட சென்னையை தலைமையிடமாகக் கொண்டு திருவொற்றியூரில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக செயல்பட்டு வரும் சுகம் மருத்துவமனை தற்போது குரோம்பேட்டையிலும் செல்பட்டு வருகிறது.

அந்த மருத்துவமனையில் புதிதாக அதி நவீன இருதய சிகிச்சை மையத்தை மருத்துவமனை நிர்வாக இயக்குனர்கள் டாக்டர் டி.பி.டி சத்தியகுமார், டாக்டர் ஷீலா சத்யகுமார் டாக்டர் இமானுவேல் அருண்குமார் ஆகியோர் தொடங்கி வைத்துள்ளனர்.

இங்கு அனைத்து இருதய நோய்களையும் குணப்படுத்தக்கூடிய உலக தரம் வாய்ந்த இருதய சிகிச்சை கூடம் மற்றும் இருதயத்தில் உள்ள இரத்த குழாய்களில் அடைப்பு ஏற்பட்டால் அறுவை சிகிச்சையின்றி ஸ்டெண்ட் மூலமாக இரத்த ஓட்டத்தை சீர் செய்யக்கூடிய அதி நவீன கேத் லேப் மற்றும் புதுப்பிக்கப்பட்ட இருதய தீவிர சிகிச்சை பிரிவு ஆகியவை இந்த மையத்தில் உள்ளடங்கியுள்ளது.




**நாடார் வரன்கள்:** R.C, CSI, **இந்து நாடார்களுக்கு அணுகவும்,** IAS, IPS, IFS, IRS, MD,MS, B.E, M.E, MBA, MCA., **மற்றும் தொழிலதிபர்கள், கம்பெனி, பில்டர்ஸ், கல்லூரி மற்றும் அரசு பணி மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஆண் பெண் வரன்களும், வி.ஐ.பி. டாக்டர் வரன்கள் ஏராளமாக உள்ளன**

தொடர்புக்கு: K.K.M.மரிய ஜாண்சன் போன்: வாட்சப் எண்: 7373627729, 8148887767.

**முகவரி:எம்.மரியஜாண்சன், எண்:8/3பி, கீழ்தளம், நேரு தெரு, சீனிவாசன்நகர், பாடி, சென்னை-600 050,**

# 7 லட்சம் திருமணங்களை இனிதே நிறைவேற்றிய

வெற்றி

# வெற்றி திருமண மையம்

## பதிவு கட்டணம் இலவசம்

காலை 10 to இரவு 8 மணிவரை
எல்லா நாட்களும்

அனைத்து இனத்தவருக்கும்
லட்சகணக்கான வரன்கள் உள்ளன

**புரோக்கர் கமிஷன் கிடையாது**

**இலவச ONLINE பதிவிற்கு**
**www.vetrimatrimony.com**

பிளாட் நம்பர் 5, லேக் ஏரியா,
மாட்டுத்தாவணி பஸ் நிலையம் அருகில்,
மதுரை - 625 107.

**73971 13833, 73970 43396**
**73970 94709, 73971 52597**



செல்: 98405 57997, 98415 49955

V.S.குமார் ரியல் எஸ்டேட்

வீடு, மனை, வாங்க விற்க அணுகவும், வீடு, ஆபிஸ், கடை, குடோன் கம்பெனி வாடகைக்கு அணுகவும்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, வளசரவாக்கம், சென்னை-87


# கேள்வி? பதிலில்?...... முதியோர் நல மருத்துவம்


பத்மஸ்ரீ டாக்டர்.வி.எஸ்.நடராஜன், மூத்த முதியோர் நல மருத்துவம்.044-26412030.


## மகளிர் நலம்

**கேள்வி:**

எனது தாயார் சமீபத்தில் மார்பகப் புற்றுநோயால் இறந்து விட்டார். எனக்கும் அந்நோய் வந்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது. அதை வராமல் தடுக்க நான் என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்?

**பதில்:**

நாற்பது வயதைக் கடந்த ஒவ்வொரு பெண்ணும் தங்கள் மார்பகத்தில் கட்டி ஏதேனும் உள்ளதா என்பதை சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். சந்தேகம் இருந்தால் மருத்துவரின் உதவியை நாடவேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது மெமோகிராம் என்ற பரிசோதனையை செய்து கொள்வது நல்லது (முக்கியமாக குடும்பத்தில் யாருக்காவது மார்பகக் கட்டி வந்திருந்தால்). உங்கள் தாயாருக்கு இத்தொல்லை வந்திருப்பதால், நீங்கள் காலம் தாழ்த்தாது உடனே மெமோகிராம் பரிசோதனையை செய்துகொள்ளுங்கள். மார்பகப் புற்றுநோய் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டால் அறுவை சிகிச்சை மட்டுமே போதுமானது. காலம் தாழ்த்தாது எனது யோசனையை செயல்படுத்துங்கள். நல்லதே நடக்கும். கவலைப்பட வேண்டாம்.

**கேள்வி:**

எனக்கு வயது 40. மாதா மாதம் ஏற்படும் பீரியட்ஸினால் எந்த தொந்தரவும் இல்லை. கர்ப்பப்பை வாய் புற்றுநோயால் அவதிப்படும் பெண்களில் மூன்றில் ஒருவர் பரிதாபமாக உயிரிழக்கிறார்கள் என்பதையும், 45 வயது முதல் 60 வயதினரிடையே இது அதிகமாக காணப்படுகிறது என்பதையும் அறிந்தேன். இந்நோய் வராமல் தடுக்க நான் (மற்றும் என்னை போன்ற பெண்கள்) என்ன செய்யவேண்டும்?

**பதில்:**

கர்ப்பப்பை வாய் புற்றுநோய் வராமல் தடுக்க:

21முதல் 65வயது வரை உள்ள பெண்கள், ஒவ்வொரு 3 வருடங்களுக்கு ஒரு முறை பேப்ஸ்மியர் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் அல்லது 5வருடங்களுக்கு ஒருமுறை பேப்ஸ்மியர் பரிசோதனை மற்றும் ஹெச்.பி.வி.பரிசோதனை ஆகியவற்றை செய்து கொள்ள வேண்டும். 65வயது வரை சீராக பேப்ஸ்மியர் சோதனை செய்திருந்தாலோ தொடர்ந்து மூன்று முறை செய்த பரிசோதனை நார்மலாக இருந்தாலோ, கடந்த பத்து வருடங்களில் எடுத்த பரிசோதனையில் எந்த மாற்றமும் இல்லாமல் இருந்தாலோ 65வயது தாண்டிய பெண்கள் அதன் பின் பேப்ஸ்மியர் சோதனை செய்யத் தேவையில்லை. இந்தச் செய்தியை உங்கள் பெண்கள் வட்டாரத்தில் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**கேள்வி:**

நான் மெனோபாஸ் அடைந்து ஒரு வருடமாகிறது. இதுவரை எந்த தொந்தரவும் இல்லாமல் நன்றாகவே இருந்தேன். சமீபகாலமாக இருமினாலோ, தும்மினாலோ, சிரித்தாலோ சிறுநீரை அடக்க முடியவில்லை. சிறுநீர் கசிந்துவிடுகிறது. இதனால் வெளியில் நடக்கும் திருமணம் போன்ற விழாக்களுக்குச் செல்வதைத் தவிர்க்கிறேன். இது எதனால் வருகிறது? இதற்கு எந்த டாக்டரைப் பார்க்க வேண்டும்.

**பதில்:**

பெண்களுக்கு கர்ப்பம், குழந்தை பேறு மற்றும் மாதவிடாய் நின்று போவது என உடல்ரீதியான மாற்றங்களின் விளைவாக சிறுநீர்க் கசிவு ஏற்படுகிறது. உடற்பருமன், நீரிழிவு நோயாளிகள், நரம்புக்கோளாறு உள்ளவர்கள் மற்றும் புகைப்பழக்கம் உள்ளவர்களுக்கு இத்தொல்லை அதிகம் வரலாம். இதற்கு பல சிகிச்சை முறைகள் உள்ளன அவை:

❖எடை அதிகம் உள்ள பெண்கள் தங்கள் எடையை குறைக்க வேண்டும்.

❖நாள்பட்ட மலச்சிக்கலைத் தவிர்க்க வேண்டும்.

❖ஆஸ்துமா நோயாளிகள் அதற்கான சிகிச்சையைப் பெற வேண்டும்

❖வயதான பெண்களுக்கு ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் களிம்பை காலையிலும் மாலையிலும் நீர்த்தாரையிலும் மற்றும் பிறப்பு உறுப்புகளில் தடவ வேண்டும்.

❖ அடிவயிற்றுத் தசை வலிமையடைய சிறப்பு உடற்பயிற்சியை தவறாமல் செய்யவேண்டும்.

மேற்கூறிய வாழ்வியல் மாற்றங்களால் தக்க பலன் இல்லாமல் இருப்பின் மாத்திரைகளை மருத்துவர்கள் பரிந்துரை செய்வார்கள். சிலருக்கு அறுவை சிகிச்சை தேவைப்படும். ஸ்லிங் எனும் எளிய அறுவை சிகிச்சை மூலம் நல்ல பயன் பெறலாம். உங்களின் தொல்லைக்கு தீர்வுக்கான பல வழிமுறைகள் உள்ளன. கவலைப்படத் தேவையில்லை. இதற்கு இத்துறையில் சிறப்பு பயிற்சி பெற்ற சிறுநீரக மருத்துவர் மற்றும் மகளிர் நல மருத்துவரின் ஆலோசனை பெற்று நீங்கள் நலமுடன் வாழ விரும்புகிறேன்.!

தொகுப்பு: - எல்மாமதி..

SSS

அய்யா துணை

Cell:9884687675, 9488491671.



# திருமண தகவல் மையம்

அமைப்பாளர்: P.சக்திவேல் நாடார்.

பூர்வீகம் நாடார் உவரி எண்:42, அன்னை கமலா நகர், வீராபுரம் மெயின் ரோடு, நியூ காலனி பஸ் ஸ்டாப், ஆவடி, சென்னை-600 055.

# Velan Kraft House (P) Ltd.



**Raw Material Suppliers To Paper Mills - Since 1972**

**R.Santhana Krishnan Director**

Ad.off:2-C, First Main Road, Shastri Nagar, Adyar, Chennai-600 02

Mobile: 9840817442, 99625 17442, 80123 17442 E-mail:Velankraft@yahoo.com Web:www.velankraft.com



**Prop.S.Vijayan,** **Cell: 98403 53031. (0)044/ 26623031.**

# SRI LAKSHMI ENTERPRISES

Scaffollding & Shed contractor / School, College, Church & Construction Company / All Type Shed Works

28/54, Cooks Road, P.B. Chennai, Chennai-12.


# நாடார் மறுமலர்ச்சி

### நாடார்களுக்கு எதிரான கலவரங்கள்

ஐரோப்பியர் மற்றும் ஆங்கிலேயர்களின் வருகையை ஒட்டி நாடார்கள் மறுமலர்ச்சியடைந்தனர். தங்களுக்கு எதிரான சமூகச் சீர்கேடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். இதனால், பொறாமை கொண்ட உயர்ஜாதி இந்துக்கள், நாடார்களைத் தாக்கினர். நாடார்களை அடக்குவதற்கு அவர்களின் பொருளாதாரம் வீழ வேண்டும் என்று கருதினர். அதனால், அவர்களின் பொருளாதார தலங்களான விளைநிலம், வீடு, கால்நடை, வியாபாரக் கூடம், முதலியவற்றை ஆள்சேர்த்து, திட்டமிட்டு அழித்தனர். அழிவுக்குள்ளானாலும் நாடார்கள் ஒற்றுமையாக நின்று ஆங்கிலேயரின் துணை கொண்டு தொடர்ந்து பொருளாதாரத்தில் முன்னேறினர். சமூகப்போராட்டங்கள் நிகழ்த்தினர். இதனால், நாடார்களுக்கு எதிரான கலவரங்கள் தொடர்ந்து நீடித்தன.

### அருப்புக்கோட்டை கலவரம்

நாடார்களின் திருமண ஊர்வலத்தில் பல்லக்கில் ஏறக்கூடாது. கொம்பு ஊதக்கூடாது என்ற தடை வழக்கத்திலிருந்தது. 1860இல் அருப்புக்கோட்டை நாடார்கள், தங்களின் திருமண ஊர்வலத்திலும் பல்லக்கில் அமர்ந்து செல்ல அனுமதி வேண்டி மதுரை மாவட்ட மாஜிஸ்ரேட்டுக்கு விண்ணப்பித்தனர், அனுமதியும் கிடைத்தது. இதனால் உயர்ஜாதி இந்துக்கள் கோபம் அடைந்தனர். நாடார்களுக்கு எதிராக 10000 பேர் ஒன்று திரண்டு அருப்புக்கோட்டையிலும் சுற்றுக் கிராமங்களிலும் கலவரம் செய்து நாசம் விளைவித்தனர். நாடார்களுக்கு சாதகமான அரசு உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்பதுதான் கலவரத்தின் நோக்கம்.

அதே ஆண்டு, அருப்புக்கோட்டை நாடார்களின் திருமண ஊர்வலத்தில் மற்றவர்கள் கலவரம் செய்ய இருப்பதாகச் சொல்லி மதுரை மாவட்ட மாஜிஸ்ரேட்டிடம் நாடார்கள் பாதுகாப்பு வேண்டினர். கலகக்காரர்களை கைது செய்து நாடார்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும்படி போலிஸூக்கும், ராமநாதபுர ஜமீனுக்கும் மாஜிஸ்ரேட் உத்தரவிட்டார். உயர்ஜாதிகளைச் சேர்ந்த போலீஸ் அதிகாரிகளும், ஜமீன் அதிகாரிகளும் இதனை மதிக்கவில்லை. இவர்களின் பேரில் சுற்றுப்புறக் கிராமங்களில் நாடார்களின் தோட்டங்களும், கிணறுகளும் அழிக்கப்பட்டன.

அடுத்து சில தினங்களில், பட்டப்பகலில் அனைவரும் பார்த்திருக்க உயர்ஜாதியைச் சேர்ந்த கிராம முனிசீப்பும், மெட்டுப்பியூனும் தர்னாவில் அமர்ந்திருக்க, அருப்புக்கோட்டையில் முகமதியர்கள் நவாபின் கொடி ஏற்றி, நாடார்களின் வீடுகளையும், கடைகளையும் கொள்ளையிடப்போவதாகப் பறையறிவித்து, 110 கடைகளை அழித்து ரூ.30000 பெறுமான பொருட்களை எடுத்துக் கொண்டு, மீண்டும் பறையறைந்து கொள்ளை முற்றுப்பெற்றதைத் தெரிவித்தனர். எந்த உதவியும் கிடைக்காமல் எதிர்ப்புத் தெரிவிக்க ஆள் பலமின்றி, நாடார்கள் மனம் பதைக்கப் பார்த்திருந்தனர். இதை விசாரித்த மாஜிஸ்ரேட் இது ஜாதிப் பூசல் அல்ல, பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடார்களுக்கு எதிராக மற்ற ஜாதியினர் கொண்டுள்ள பொறாமை, பகை உணர்வு காரணமாக, வேண்டுமென்று திட்டமிட்டு, மாஜிஸ்ரேட்டின் ஆணையை மீறி நாடார்களின் வளர்ச்சியைத் தடுக்கும் முகமாக நடந்திருக்கிறது என்றார். ஆங்கிலேயரின் வருகைக்கு முன்பு தமிழ்நாட்டிலும் இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் முகமதியகள் ஆட்சி புரிந்ததால், முகமதியர்கள் வணிகத்தில் சிறந்து விளங்கினர். ஆங்கிலேயரின் வருகைக்குப் பின், நாடார்கள் வணிகத்தில் தலை தூக்கவும், முகமதியரின் வணிகம் நலிவுற்றது. அதனால் இவர்களுக்கு நாடார்களின் மீது பொறாமை இருந்தது.

இதே மாதிரியான கலவரச் சூழ்நிலை ராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்களிலும் பரவியிருந்தது. தமிழ்நாட்டில் பல ஜாதிகளுக்குள் ஒற்றுமை இல்லை. தனக்கு சமூக அந்தஸ்து வேண்டுமென்று போர்க்கொடி தூக்கும் ஒரு ஜாதியானது, இதேபோல போர்க்கொடி தூக்கிய மற்ற ஜாதியை எதிர்த்தது. பிராமணர் வீதிவழி ஊர்வலம் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று அம்பா சமுத்திரத்தில் கோரிய வேளாளர், வேளாளர் வீதிவழி ஊர்வலம் செல்ல அனுமதிக்க வேண்டும் என்ற நாடார் மற்றும் தாழ்த்தப்பட்டோரின் கோரிக்கையை முழு மூச்சாக எதிர்த்தனர். (தொடரும்)



# SVS நாடார் திருமண தகவல் நிலையம்

(அரசு அங்கீகாரம் பெற்றது.பதிவுஎண் 1004/2013)

No.105, நல்ல தம்பி சாலை அண்ணாநகர், பம்மல், சென்னை-75.

எங்களிடம் இந்து சி.எஸ்.ஐ, ஆர்.சி நாடார் ஆண்/பெண் வரன்கள் (டாக்டர், இன்ஜினியர், வியாபாரிகள் மற்றும் உள் நாடு, வெளிநாட்டில் பணிபுரிபவர்களின்) விவரங்கள் நிறைய உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு **தொடர்புகொள்ளவும்.ஆலோசகர்:D.சுந்தர்சிங் நாடார்B.A அரசு இணைச் செயலாளர் (ஓய்வு) செல்:9840093000, 9445093000 9698793000, 8248707424 E.mail:sundarsinghnmb@gmail.com / website: www.svsnadarmatrimony.com**




அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்களின் நிறுவனர் / தலைவர் முனைவர் ச.தேவராஜ் அவர்கள் ஏழை மாணவனுக்கு நான்கு வருட இலவச பொறியியல் படிப்புக்கான சேர்க்கை கடிதம் வழங்கினார்.


## உங்கள் தொழிலை ஆன்லைன் மூலம் எளிய வழியில் விளம்பரபடுத்த/சந்தைப்படுத்த உங்கள் ஊரில்

CREATIVE TECHNOLOGIES
SINCE 2016

# CREATIVE TECHNOLOGIES

எனும் மென்பொருள் நிறுவனம் (Software Company) 2016 முதல்

- உங்கள் தொழிலுக்கு என புதிய வெப்சைட்
- தொழிலை மேம்படுத்த டிஜிட்டல் மார்க்கெட்டிங்
- கிராஃபிக் டிசைனிங், விளம்பர வீடியோ உருவாக்கம்
- உங்கள் தொழிலை கூகுள் மேப் உடன் இணைப்பது

உள்ளிட்ட அனைத்து சேவைகளும் உங்கள் சென்னையில் சிறந்த சேவையாக வழங்க காத்திருக்கிறோம்.

## +91 8248 325 234

Chennai / Nagercoil / Kodaikanal | www.creativetec.in

# மானாரும் மானாட்டாரும்: கி.பி.1600 விடியலிலிருந்து...

-டாக்டர் ஆ.தசரதன். செல்:9444169603.

மானாட்டுச் சுந்தராச்சி அம்மன் கோவிலருகே கிடக்கும் கல்லாலான தண்ணீர்த் தொட்டியில் கி.பி.1600இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் அத் தொட்டியைத் தருமமாக அப்பகுதி ஆட்சியாளனான செம்பிராப் பணிக்கன் எனும் போர்க்கலை மரபு ஆசான் அளித்தது பற்றிய கட்டுரையின் தொடர்ச்சியாகும் இது.

இந்திய நாடார் முரசின் 2023 ஆம் ஆண்டு மே மாத இதழில் அக் கட்டுரை தொடங்கிற்று.

செண்பகராம பணிக்கனின் (செம்பிராப் பணிக்கன்) முன்னோன் ஒருவன், நல்லூர்ப் பகுதியினன், சிங்களத்தை ஏழாம் புவனேகபாகு என்ற பெயரில் ஆட்சி செய்த வரலாறு வேறு இடத்தில் ஆராயப் பெற்றுள்ளது. இப்பணிக்க மரபுச்சான்றோர்குல ஆசான்களின் முன்னோரும் பின்னோரும் போர்க்கலை மரபினர் ஆவர். இக்காலத்திலும் செல்வாக்குடன் உள்ளனர்.

சங்ககால முதலே தானைத் தலைவர்களாக இருந்து வந்த சான்றோர்குல இப் பணிக்கன் மரபு நாடார்களின் சமூகப் பண்பாட்டு வரலாறு இக்காலம் வரை சிறப்பாக எழுதப் பெற வேண்டியதாகும். இதற்கான சான்றாதாரங்கள் இலக்கியங்களிலும் கல்வெட்டுகள், செப்பேடுகள் மற்றும் ஓலைச்சுவடி ஆவணங்களிலும் சமூகப் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களிலும் நிறைய உள்ளன.

செம்பிராப் பணிக்கனின் பிற்காலத் தோன்றலாகக் கருதப் பெறும் கோவிந்தப் பணிக்க நாடன் என்பவன் குதிரைமொழித் தேரியில் கி.பி.1639ஆம் ஆண்டு நாட்டப்பெற்ற சாசனக்கல்லில் உள்ள ஆணைப்படி, மானவீரவளநாட்டு வடபற்று ஆட்சியாளர்களான பத்து நாடாதி நாடாக்களில் ஒருவனாகக் கண்டறியப்பட்டுள்ளான். இவர்கள் வரலாற்றை இத்தொடர்க் கட்டுரைகள் ஒன்றில் இனிக் காணலாம்.

கோவிந்தப் பணிக்க நாடனின் பின்தோன்றல்கள் எவரேனும் சாசனங்களிலோ பட்டயங்களிலோ பிற ஆவணங்களிலோ இடம்பெற்றுள்ள செய்திகள் கண்டறியப்படவுள்ளன. நாட்டுப்புறக் கதைப் பாடல்களான வில்லுப்பாடல்களில் இவர்களின் வரலாறு இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது. ஆனால் பணிக்கன் மரபுச் சான்றோர்குல நாடார்கள் சில ஊர்களில் திரளாக வாழ்ந்து வருகின்றமை அறியப்பட்டுள்ளது.

பணிக்கன் மரபு போர்க்கலை ஆசான்மார்களான, வீரர்களான ஆட்சியாளர்களுக்கும் அவர்களைப் போன்ற தொன்மையும் தோற்றமும் போர்க்கலைத் தொடர்பும் ஆட்சித் தொடர்பும் சமூகப் பண்பாட்டு வரலாறும் கொண்டுள்ள ஏனாதி மரபுச் சான்றோர்குலத்தினர்க்கும் உறவுள்ளதாகத் தொல்லியல் அறிஞர் நெல்லை நெடுமாறன் அவர்கள் தம் ஆய்வில் பதிவிட்டுள்ளார்.

செம்பிராப் பணிக்கனின் கல்தொட்டிக் கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலத்திலோ அதற்குச் சற்றுமுன்போ பின்போ சான்றோர்குலத்தினரில் சிறப்பாகக் கருதப்பெறுகின்ற ஏனாதிகுல உய்யக் கொண்டார் மற்றும் வலங்கை உய்யக் கொண்டார்கள் அடங்கிய எழுநூற்றுவர் படைப்பிரிவினர் முதலில் பத்திரகாளிக்காவும் பின்பு சோழர்களுக்காகவும் பல இடங்களில் போரிட்ட நிகழ்வுகளும் அவை தொடர்பாக அவர்கள் சிறப்பிக்கப்பட்டமையும் இன்னும் பல செய்திகளும் அடங்கிய வலங்கை மாலை எனும் அரசகுல மாலை என்ற முதல் வரலாற்றுக் கதைப் பாடலான வில்லுப்பாட்டு இச்சுந்தராச்சி அம்மன் கோவிலில் அரங்கேறிற்று.

கீழக் குடுவைக் கிணற்றைச் சேர்ந்த அரங்கன் செம்பிராப் பணிக்கனின் கல்தொட்டி தர்மத்தைப் போன்று, மேலைக் குடுவைக் கிணற்றைச் சேர்ந்த சுந்தரம் என்பவரே இவ் வில்லுப்பாட்டைப் பாடி அரங்கேற்றியுள்ளார். வலங்கை மாலை அரங்கேறிய நாள் திட்டவட்டமாகத் தெரியாத நிலையில் இது கி.பி.1600 விடியலிலே இயற்றப்பட்டுப் பாடப்பெற்றிருக்கவேண்டும் என இப்பொழுது கூறிக் கொள்ளலாம்.

தொல்லியல் அறிஞர் எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சின்னய்யா டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்கள் தம்பெயரில் அங்கு நிறுவியுள்ள அறக்கட்டளையின் ஆறாம் சொற்பொழிவை 13.8.2004 ஆம் நாளில் நிகழ்த்திய அன்றே வெளியிட்ட அச்சொற்பொழிவு நூலான வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும் என்ற ஆய்வு நூலில் ஆறாம் பக்கத்தில் செம்பிராப் பணிக்கனின் கல்தொட்டிக் கல்வெட்டுக் காலக்கட்டத்திலே வலங்கைமாலையும் எழுத்து வடிவம் பெற்றிருக்க வேண்டும் எனப் பதிவிட்டுள்ளார். சான்றோர்குலத்தினரின் வரலாற்றுக்குப் பணிக்கன் மரபினரும் ஏனாதி குலமரபினரும் ஆற்றியுள்ள பங்களிப்பு இந்த 1600 ஆம் ஆண்டிலே சிறப்பிடம் பெற்றுள்ளது.

வலங்கை மாலையைப் பாடி அரங்கேற்றிய மானவீரவளநாட்டுச் சுந்தரம் என்ற பாட்டாளி ஏனாதி ஆனந்தன் என்ற அண்ணாவியையே தம் குருவாகவும் தந்தையாகவும் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். வேறு சான்றுகள் கிடைக்கும் வரை சுந்தரத்தின் தந்தை ஏனாதி ஆனந்தன் எனக் கூறிக்கொள்வது தவறாகாது. இந்த ஏனாதி ஆனந்தன் செட்டி ஆனந்தன் எனவும் தம் சீடர்களாலும் அழைக்கப்பட்டுள்ளார். செட்டி என்பது நாடார்கள் சிலர்க்குரிய பட்டமாகும். வணிகம் தொடர்பாகவோ செட்டிகளின் தோளேறிய நிகழ்வாலோ ஏனாதிகுலச் சான்றோர்சிலர்க்கு இப்பட்டம் கிடைத்திருக்கலாம். “செட்டி” எனும் பட்டம் இட்டுக் கொள்ளும் சான்றோர்குல நாடார்கள் இப்போதும் உள்ளனர்.

மானாட்டுச் சுந்தரத்தின் ஒருசாலை மாணாக்கர்களாகச் சிலர் அறியப்படுகின்றனர். இவர்களும் ஏனாதி ஆனந்தனையே தம் குருவாகப் போற்றியுள்ளனர். அகத்தீசுவரம் ஆறுமுகம் புலவர் கி.பி.1606இல் வெங்கலராஜன் என்ற தெலுங்குச் சோழ மகாமண்டலேசுவரனின் வரலாற்றை வில்லிசையில் பாடியுள்ளார். கி.பி.1600 விடியலில் அதற்குச் சற்றுமுன் அதாவது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த இவ்வெங்கலராஜன் தொடர்பான வரலாறுகள் இப்பொழுது துலக்கம் பெற்று வருகின்றன.

மானவீரவளநாடன் எனக் கூறிக்கொள்ளும் மற்றொரு சீடர் அருதனக்குட்டிப் புலவர் ஆவார் (கி.பி.1575-1675) இவர் தம் மூதாதையரான செண்பக நாச்சியார் கூட்டத்தினர் பற்றிய வரலாற்றைக் கி.பி.1617இல் பாடி, தாங்கையூரில் அந்த அம்மையார் கோவிலில் அரங்கேற்றியுள்ளார். நாச்சியார் கூட்டத்தினர் பல ஆயிரம் உள்ளனர்.

நம்மாழ்வாருக்குப் பின் தென்னாட்டில் சான்றோர் குலத்தில் அறியப்படுகின்ற வைணவப் பெரியாரான பெருமாள் சாமி தம்பிரானின் வரலாற்றை அருதனக்குட்டிப் புலவர் கி.பி.1623இல் பாடி அரங்கேற்றியுள்ளார். இத்தம்பிரானின் கூட்டத்தாரும் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர்.

இவரே அந்திரமுடையார் என்ற சான்றோர்குலவீரரின்

வரலாற்றை அதே காலக்கட்டத்தில் பாடியுள்ளார். வேறு சில வரலாற்றுக் கதைப்பாடல்களையும் இப்புலவர் பாடியதன் மூலமாகச் சான்றோர் குலத்தினில் ஒரு பெரிய கூட்டத்ததாரின் வரலாறு விளக்கம் பெறவாயிற்று அந்திரமுடையார் நாயக்க அரசினர்க்கு வரிதண்டியவர் ஆவார்.

இப்புலவரின் சீடர்கள் ஏராளம்பேர் கண்டறியப்பட்டுள்ளனர். இப் புலவர் காலத்தவரான இராமன் என்பார் வலங்கை மாலையிலும் வெங்கலராசன் கதையிலும் வரும் பத்திரகாளி அம்மன் கதையைத் தனிப்பாட்டாகப் பாடி வைத்துள்ளார். இவர் வள்ளியூர்க்காரர்.

தமிழ் வில்லுப்பாட்டு முன்னோடிப் புலவர்களான இவர்கள் கி.பி.1600லிருந்து 1625வரை வரலாற்றுக் கதைப்பாடல்களைப் பாடி வைத்ததன் மூலமாகச் சான்றோர் குலத்தவரின் பகுதி வரலாறு இப்பொழுது தெரியவந்துள்ளது.

சான்றோர் குலத்தினரின் வரலாற்றை நூற்றாண்டு தோறும் எழுதுவது சாத்தியமே எனும் அடிப்படையில்தான் இத்தொடர் கட்டுரைகள் எழுதப்படுகின்றன. கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடி ஆவணங்கள் போன்றவற்றின் அடிப்படையில் இவ்வரலாறு அமைவதன் மூலம் சான்றோர் குலத்தினரின் தொன்மை முதல் ஆண்மை வரையிலான சமூகப் பண்பாட்டு வரலாறு வெளிச்சத்திற்கு வரும் என நம்பலாம்.

கி.பி.1984 ஆம் ஆண்டு வலங்கை வாழ்த்து என்ற பெயரில் நாடார்களின் திருமணங்களில் சில ஊர்களில் வாழ்த்திப் பாடப் பெறும் பாடல்கள் அமைந்த ஓலைச்சுவடியைச் பதிப்பித்து வெளியிட்டேன். அதில் வலங்கை மாலையின் சுருக்க வரலாறு 25 வரிகள் பாடப்பெற்றுள்ளது.

வலங்கை வாழ்த்து நூலுக்குப் பின் வலங்கை மாலையைத் தேடி அலைந்த நான் சுவடியியல் அறிஞர் மு.கோ.ராமன் அவர்கள் தந்த தகவல் அடிப்படையில் சென்னை பிரம்ம ஞானசபை நூலகத்தில் 1988ஆம் ஆண்டு வலங்கை மாலையின் சுவடியைக் கண்டறிந்து திரு.த.பூமிநாகநாகன் துணையுடன் படியெடுத்தேன். பின்பு தட்டச்சுச் செய்து வலங்கைச் சான்றோரும் சோழரும். தமிழ்க் கதைப்பாடல் சுவடிகளில் வரலாற்றாய்வு என்ற தலைப்பில் 1995, 1996ஆம் ஆண்டுகளில் இருமுறை அச்சிட்டு வெளியிட்டேன்.

இந்த நூலின் எழுத்துருவைப் படித்த அருமை அண்ணாச்சி நெல்லை நெடுமாறன் அவர்கள், விடாப்பிடியாக முயன்று 1904 ஆம் ஆண்டு அச்சாகிய வலங்கை மாலையின் மூலத்தின் நகலைப் பெற்று என்னிடம் காட்டினார். 1079கொல்லம் ஆண்டு (கி.பி.1904) ஐப்பசி மாதம் 2ஆம் நாள் வாகைக்குளம் மா.ராமசாமி நாடார் மகன் முத்துமாலை நாடார் சிவந்திபுரம் பலவேசநாடார் மகன் தவசிநாடாரின் ஏடு பார்த்துச் சரவெழுதியபின்னர் கருவந்தா ஆர்.துரைப்பாண்டிய நாடார், ஆறுமுகம்பட்டி ஏ.தர்மக்கண் நாடார் இருவரும் தாளில் எழுதினர். பூவனூர் சாமி நாடார் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

ஏறத்தாழ 120 ஆண்டுகளுக்கு முன்பே வலங்கை மாலை அச்சாகிப் புழக்கத்தில் இருந்துள்ளது. அதன் ஏட்டுப்பிரதி சிவந்திபுரத்திலும் சரவெழுதிய ஏட்டுப் பிரதி வாகைக்குளத்திலும் அதன் காகிதச்சுவடிப்பிரதி கருவந்தாவிலும் பூவனூரிலும் இருந்துள்ளன. அச்சுப் பிரதிகள் ஆயிரக்கணக்கில் பரந்துள்ளன. அச்சுப் பிரதியைப் பார்த்து ஓலைகளிலும் தாளிலும் எழுதி வைத்துக் கொண்டோர் பலராவர். இவர்களில் வில்லுப்பாட்டாளிகள் பெரும்பான்மையினராக இருக்கலாம்.

மானாட்டில் அரங்கேற்றம் செய்யப்பட்ட வலங்கை மாலை இவ்வாறு தென்காசிப் பகுதிகளில் அச்சாகி, குமரிமாவட்டம் போன்ற பகுதிகளில் வில்லுப் பாட்டாளிகளிடையே புழங்கப்பட்டு வருகிற சுவடி வரலாற்றை நான் இவ்வாறு மீட்டுருவாக்கம் செய்துள்ளேன். மானாட்டில் வழக்கொழிந்து போன வலங்கைமாலையின் முதல் பாகம் பத்திரகாளி அம்மை தொடர்பானது. இரண்டாம் பாகம் சோழரின் கிளைக்குலமாகிய ஈழகுல ஏனாதி மரபுச் சான்றோர் வீரரின் படைப்பிரிகள் மற்றும் சாகசங்கள் பல நிகழ்வுகளாகப் பதிவாகியுள்ளன.

கி.பி.1600 விடியலில் மானாட்டில் சரித்திரம் படைத்த வலங்கை மாலையின் அரங்கேற்றமும் அதன் பரவலும் ஏனாதி மரபுச் சான்றோர் வீரர்களின் குறிப்பாக, வலங்கை உய்யக்கொண்டார் போன்றோர்களின் சமூகப் பண்பாட்டு வரலாற்றைப் பதிவுசெய்ய அடிப்படைத் தரவாகும்.

அதன் சுருக்கத்தைக் கொண்டுள்ள வலங்கை வாழ்த்து எனும் திருமண வாழ்த்துப் பாடலில் இவ் ஏனாதிகளில் சிலர் வரிசை வியாபாரிகளாக பேட்டை தலங்கள், பெரிய பட்டணங்கள், திருச்சிராப்பள்ளி போன்ற பகுதிகளில் திட்டமாய்ச் சரங்கேற்றிக் கொண்டு விற்றோர் என வருவதால் மானாட்டார்களில் ஏனாதிகுலச் சான்றோரும் அடங்குவர் எனத் தெரிகிறது. தொடரும்.......



# கண்ணீர் அஞ்சலி

## நாள்:28.5.2023

வடக்கன்குளம் கிராமணியார்
குடும்பத்தை சேர்ந்த
திருமதி.மதுரம் அவர்கள்
இறைவனடி சேர்ந்தார் என்பதை
ஆழ்ந்த வருதத்துடன்
தெரிவித்துக்கொள்கிறோம்

# ஜூன் 21 2023 65வது
# பிறந்த நாள் வாழ்த்துக்கள்!!!



நாடார்
இளைஞர்களின்
விழிப்புணர்ச்சி
சரித்திர நாயக்கன்
புழல்.தர்மராஜ்
அவர்களுக்கு
பிறந்த நாள்
வாழ்த்துக்கள்!



# பாஞ்சாலி

எஸ்.விஜயராஜ்



**திருமண பேச்சு..**

சரி சொல்லுங்கள்.. குந்தி சொன்னாள்..

பிரச்சினை என்று பார்த்தால்.. நம் இருவருக்குமே இருப்பது ஒரே பிரச்சினைதான்..

புரியவில்லை துருபதனுக்கு.. ஆனாலும் அவன் அவசரம் காட்டவில்லை.. நிதானமாக கேட்டான்..

என்ன பிரச்சினை..

நாட்டு பிரச்சினை..

நாட்டு பிரச்சினையா..

ஆமாம் மகாராஜா.. நீங்களும் உங்கள் ராஜ்ஜியத்தில் பாதியை இழந்து நிற்கிறீர்கள்.. துரோணரிடம்..

நான் மொத்தத்தையுமே இழந்து நிற்கிறேன்.. திருதராஷ்டிரனிடம்..

இப்போது புரிந்து விட்டது துருபதனுக்கு.. எனவே.. லேசான புன்னகையோடு சொன்னான்..

ஆமாம் மகாராணி.. நம் இருவருக்குமே இருப்பது ஒரே பிரச்சினைதான்.. அந்த வகையில் நாம் இருவரின் யுத்த பூமியும் ஒன்றுதான்.. அஸ்தினாபுரம்..

ஆமாம்.. அந்த யுத்த பூமிக்குள் நுழைய.. நீங்கள் அர்ச்சுனனை நம்பி இருக்கிறீர்கள்..

ஆமாம்..

ஆனால் நான் அப்படி இல்லை.. எனது ஐந்து பிள்ளைகளையுமே நம்பி இருக்கிறேன்..

உண்மைதான்..

அர்ச்சுனன் எனக்கு மகன்தான்.. என்றாலும்.. உங்களுக்கு இப்போது மருமகன்..

ஆகவே.. எந்த நிபந்தனையுமே விதிக்காமல்.. அவனது ஆதரவை உங்களுக்கு அவன் கட்டாயம் தருவான்..

ஆனால் மகாராஜா.. நான் இப்போது சொல்லப் போகும் எனது யோசனைக்கு நீங்கள் ஒப்புக் கொண்டால்..

அர்ச்சுனனின் ஆதரவு மட்டும் அல்ல.. எனது ஐந்து பிள்ளைகளின் ஆதரவுமே உங்களுக்கு கிடைக்கும்..

என்ன யோசனை.. சொன்னாள் குந்தி..

திரவுபதி என் மகன் அர்ச்சுனனை மட்டுமே மணந்தால் போதாது..

வேறு என்ன செய்ய வேண்டும்..

அவள் எனது பிள்ளைகள் ஐந்து பேரையுமே மணக்க வேண்டும்..



ஐந்து பிள்ளைகளையுமா..

அப்படியானால் ஐந்து கணவர்களா..

ஆமாம்..

ச்சேசே..

எவ்வளவு அழுக்கான வார்த்தை அது..

முகம் வியர்த்து விட்டான் துருபதன்..

ஆனால் குந்தியோ..

அமைதியாக அமர்ந்திருந்தாள்..

**ஒப்புதல் கிடைத்தது..**

துருபதன் அருவருத்தான்.. காறி உமிழ்வது மாதிரியான ஒரு குறிப்பு.. அவனது முகத்தில் இருந்தது..

அதை கவனித்தாள் குந்தி.. ஆனாலும் திகைக்கவில்லை.. அப்போதும் நிதானமாக சொன்னாள்..

தயது செய்து உங்களுக்கு கோபம் வேண்டாம் மகாராஜா..

கோபம் உங்களை கேட்க விடாது.. சிந்திக்க விடாது.. நல்லது கெட்டதைக் கூட பகுத்துப் பார்க்க விடாது என்றாள்..

சரி நீங்கள் சொல்ல வந்ததை சொல்லுங்கள்..

சொல்லுகிறேன்.. துரோணரோடு மோதித்தான் ஆக வேண்டும் என்ற முடிவை நீங்கள் எடுத்து விட்டீர்கள்..

அதற்கு அர்ச்சுனன் ஒருவன் மட்டுமே போதும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.. ஆனால் நானோ.. அவன் மட்டுமே போதாது என்கிறேன்..

என்னுடைய ஐந்து பிள்ளைகளுமே உங்களுக்காக யுத்தம் செய்ய இன்று தயாராகத்தான் இருக்கிறார்கள்.. உங்கள் வெற்றியை அது உறுதிப்படுத்தும்..

ஆகவே.. ஒரு தந்தையாக மட்டுமே இருந்து.. நான் சொல்லுவதை யோசிக்காதீர்கள்..

ஒரு மன்னனாக இருந்தும் யோசியுங்கள்.. ராஜ தந்திரத்தோடு ஒரு நல்ல முடிவை எடுங்கள்..

பாண்டவர்களை பொருத்தவரையில்.. அவர்களுடைய குழந்தை பருவத்திலிருந்தே ஒரு விசயத்தை நான் ஊட்டி வளர்த்திருக்கிறேன்..

இன்றைய தேதி வரைக்கும்.. அவர்கள் அந்த கொள்கையை கடைபிடித்தே வருகிறார்கள்..

எது கிடைத்தாலும் சரி.. அதை எனக்கு மட்டுமே என்று யாருமே சொந்தம் கொண்டாட மாட்டார்கள்.. ஐந்து பேருமே சமமாக பங்கிட்டு கொள்வார்கள்.. (தொடரும்)

# உலகம் சுற்றினோம் சந்திரிகா ராஜமோகன்.

## 5.எகிப்து சுற்றுலா

உலகின் மிகப் பெரிய பிரமிட்டை அமைத்தவரின் சிலை மிகவும் சிறிய விரல் அளவு பெட்டியில் வைக்கும் அளவுக்கு இருந்தது கண்டு வியந்தோம். அக்காலத்தில் அரச குடும்பத்தினர் தங்க உலோக காலணிகளைப் பயன்படுத்தினர். ஏழைகள் பாபிரஸ் புற்களால் செய்யப்பட்ட செருப்புகளை அணிந்திருந்தனர். இவற்றைப் பார்த்தோம். அவர்கள் மெத்தைகள், தலையணைகளைப் பயன்படுத்தவில்லை அதற்குப் பதில் தலை அணை போல உலோகத்தால் செய்யப்பட்டிருந்தது. சின்னதும் பெரிதுமாக ஆயுதங்கள் பொருட்கள் செய்யப்பயன்படுத்தப் பட்டிருந்தன. இரும்புக் கடாய்கள், தண்ணீர்ப் பானைகள், தூக்குச் சட்டிகள், அக்காலத்தின் இசை கருவிகள், சதுரங்கப் பலகை ஆகியவற்றைப் பார்த்தோம். அக்காலத்தில் மக்கள் பயன்படுத்திய பெட்டிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

எங்கு பார்த்தாலும் மணல்வெளி, கொளுத்தும் வெயில். இங்குள்ள மக்கள் மழை பெய்து பார்த்ததில்லையாம். வற்றாத நைல் நதி தண்ணீர்ப் பஞ்சமின்றி மக்களைப் பாதுகாக்கிறது. படகுப் போக்குவரத்து மக்களுக்கு பெரிதும் பயன்படுகிறது. நெல், வாழை, மிளகாய், வெண்டைக்காய், பச்சை மிளகாய், தக்காளி இங்கே விளைகின்றன. தென்னைகள் அதிகமில்லை பனை மரங்கள் நிறைய இருந்தன. லட்சக்கணக்கான பேரீச்சை மரங்களும் இருந்தன. மாம்பழம் போல இனிக்கும் நுங்கு வகைகளும் இங்கு கிடைக்கின்றன. மாம்பழமும் இங்கே தாராளமாய் கிடைக்கிறது. பேரீச்சை மூலம் அந்நிய செலாவணி கிடைக்கிறது. மணல்வெளிகளில் சுண்ணாம்புப் பாறைகளும் கற்பாறைகளும் பளிங்குக் கற்களும் கிடைக்கின்றன.

விலை உயர்ந்த கற்களைக் கொண்ட மலைகளும் வற்றாத நைல் நதியும் எகிப்துக்கு வாய்க்கப் பெற்ற மிகப் பெரிய சொத்துகள் ஆகும். இவ்வூர் மக்கள் நிறைய பேர் கையேந்தி நிற்கின்றனர். அழுக்காகக் காட்சி அளிக்கின்றனர். பல தெருக்களும் வீடுகளும் கடைகளும் அடுக்கு மயமாய் காணப்படுகின்றன. அழகியல் ரசனை என்ற எதுவுமற்ற வீடுகளே ஏராளம். ஒட்டக இறைச்சி விற்கப்படுகிறது. நம்முடைய 10ரூபாய் அங்கே 1ரூபாய்க்குச் சமம். சாதாரண மக்கள் நீளமான அங்கிகளை அணிகின்றனர். பெண்கள் பர்தாக்கள் அணிந்துள்ளனர். சுருட்டை முடி, சிறிய காது, தடித்த உதடுகளை உடைய நீக்ரோக்கள் இங்குள்ளனர். பெரும்பாலோர் முஸ்லிம்களாக உள்ளனர். கடைகளில் மூட்டை மூட்டையாக ரொட்டி சுடும் மாவு அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. அதே கடையில் ரொட்டி சுட்டு வரிசையில் நின்று வாங்கிச் செல்லுகின்றனர். சமைத்த ஒட்டக கறியும் விற்கப்படுகிறது.

அலெக்சாண்டிரியா:

மறுநாள் காரில் அலெக்சாண்டிரியா நோக்கிப் புறப்பட்டோம். வழிநெடுக தங்க அரளிச்செடிகள், செம்பருத்தி, சவுக்கு மரங்கள் இருந்தன. இங்கு மின் பாதைகள் பூமிக்குள் செல்கின்றன. மின்வெட்டே கிடையாது. இந்திய ரூபாய்க்கு 10 ரூபாய் கொடுத்தால் 1லிட்டர் பெட்ரோல் கிடைக்கிறது. எகிப்தின் முன்னாள் தலைநகரான அலெக்சாண்டிரியா நேர்த்தியாக உள்ளது. வீடுகளும் மாடிகளும் இத்தாலிய பாணியில் கட்டப்பட்டிருந்தன.

இப்போதைய எகிப்திய தலைநகரான கெய்ரோ. அழுக்கு நகரம். மக்கள் வறுமையின் பிடியில் உள்ளனர். மக்கள் நெருக்கம் இங்கு அதிகம்.

அலெக்சாண்ட்ரியாவில் எப்போதும் வெயில் அதிகம் இருப்பதில்லை. கெய்ரோவில் ஜூன், ஜூலையில் 46 டிகிரி செ.இருக்குமாம். இங்கே நைல் நதி கால்வாயாக இருக்கிறது. பாலைவனப் பகுதிகளில் இந்தக் கால்வாய் நீரைப் பயன்படுத்தி அரிசி, வெண்டை, வாழை, கரும்பு விளைவிக்கப்படுகிறது. இது மிகவும் தூய்மையான நகரம்.

பிறகு மியூசியம் சென்றோம். இங்கே தலை இல்லாத சிலைகளே அதிகம். அதற்கு காரணம் கிறிஸ்துவர்கள் என்கிறார்கள். இறந்தவர்களைப் பெரும் கல் தொட்டிகளில் போட்டு கல் பலகை வைத்து மூடி மம்மியாக்கி விடுகிறார்கள். அத்தொட்டியில் ஆங்காங்கே சிங்கத்தின் தலைகள் உள்ளன.

பெரிய துறைமுகம் இங்குள்ளது. அன்று எகிப்து அதிபர் நாசர் தேசிய மயமாக்கிய சூயஸ் கால்வாய் எகிப்தின் பொறுப்பில் உள்ளது. மத்திய தரைக் கடல் பகுதியிலிருந்து செங்கடலுக்குச் செல்ல சூயஸ் கால்வாய் குறுக்கு வழி இந்தப் பாதையின் மூலம் எகிப்து அரசுக்கு கோடிக்கணக்கில் வருவாய் கிடைக்கிறது.




மியூசியத்தில் அலெக்சாண்டர் சிலை வைக்கப்பட்டுள்ளது. பொம்மைகள் கிரேக்க, ரோமானிய பாணி உடை உடுத்துதலைத் தெரிவிக்கின்றன. இந்த மியூசியத்தில் கண்ணாடிப் பெட்டிக்குள் மம்மிகள் வைக்கப்பட்டுள்ளன. மம்மியின் மீது மெல்லிய மஸ்லின் துணி சுற்றப்பட்டிருந்தது. மம்மிகளைக் கெடாதபடி பக்குவம் செய்யப்பட்டிருந்தது.

- தொடரும்............




ஜெயம் ரியல் எஸ்டேட்&
ஜெயம் ஸ்வீட் ஸ்டால்

வீடு மனை வாங்க விற்க அணுகவும்.

கே.கே.நகர் அனைத்து வியாபாரிகள் முன்னேற்ற சங்கம் பதிவு எண்:473

செயல் தலைவர்.

கே.கே.நகர். எஸ்.தேவதாஸ்

நெ.20/1, திரு.ராமசாமி ரோடு, கே.கே.நகர், சென்னை-78. செல்:9840369569. 9600005458

# காமராஜர் ஒரு சகாப்தம்

### வரலாற்றில் விருதுபட்டி

தங்கள் இனத்திற்கு ஏற்பட்ட இழிவையும் அவமானத்தையும் துடைத்து எறிய விரும்பிய நாடார் இன மக்கள் 'நாங்கள் ஷத்திரியர்கள்! வீரமுள்ளவர்கள்! விவேகம் நிறைந்தவர்கள்! காலத்தின் கோலத்தால் வீழ்ந்த நாங்கள், உழைப்பால் உயர்வோம்' என உலகு அறியச் சபதம் கூறி, தங்கள் தளராத, உண்மையான உழைப்பால் பெரும் பொருளீட்டி, மகமைகள் பலவற்றை ஏற்படுத்தி, தங்கள் சமுதாயத்தைக் கல்வியிலும் வாணிகத்திலும் தொழில் துறைகளிலும் முன்னேற்றி, நிமிர்ந்து நிற்க வழி வகுத்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடார் சமூகத்தவர் பொருளாதார வளத்தில் முன்னேறி இருந்தார்கள். குறிப்பாகச் சிவகாசி நாடார்கள் நல்ல முன்னேற்றம் கண்டிருந்தார்கள். அந்தஸ்தில் உயர்ந்த பிற சமூகத்தவர் சிலர், இந்த முன்னேற்றத்தால் எரிச்சல் அடைந்து, ஊர்தோறும் தமுக்கு அடித்துத் தங்கள் இனமக்களைத் திரட்டி, நாடார்களை எதிர்த்துக் கலவரம் செய்ய, ஒரு திட்டமிட்ட படை எடுப்பு நிகழ்த்த முடிவு செய்திருப்பதாகச் செய்தி பரவியது.

சிவகாசியைச் சூறையாடிய பிறகு விருதுநகர், சாத்தூர், அருப்புக்கோட்டை முதலிய பகுதிகளையும் சூறையாடத் திட்டமிட்டு இருப்பதாகப் பேச்சு பரவியது. இதன் விளைவு விருதுநகரிலும் கலக்கத்தை உருவாக்கியது. நாடார் அல்லாத பிற சமூகத்தவர்கள் கூட, தங்கள் பணத்தையும் நகைகளையும் பள்ளம் தோண்டிப் புதைத்து வைத்துக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுக் கண்ணுறங்காது இருந்தார்கள். சிவகாசி நாடார்கள் தங்கள் பாதுகாப்புக்காக, மனவலிமையுடன் தெருக்களில் அரண் அமைத்துக் காவல் புரிந்தார்கள். இதைப் பற்றி அறிந்த சென்னை கவர்னரின் உத்தரவுப்படி, ஜில்லா கலெக்டரும் போலிஸ் சூப்பிரண்டெண்டும் சுமார் 300 குதிரைப் படை போலிஸோடும் துப்பாக்கிப் படை போலிஸோடும் சிவகாசி விரைந்தனர். போலிஸ், எச்சரிக்கையோடு செயல்பட்டதால், நாடார் இன மக்களின் உயிரையும் உடைமைகளையும் கலகக்காரர்களிடமிருந்து காப்பாற்றியது. சிவகாசியிலும் பிற இடங்களிலும் அமைதி நிலவியது. அங்கே இரண்டு போலிஸ் நிரந்தரமாகத் தங்கவும் உத்தரவு இடப்பட்டது. வெள்ளையர் தக்க நேரத்தில் இந்த உதவியைச் செய்திருக்காவிட்டால் தங்கள் சமூகமே சீரழிந்து இருக்கும் என்கிற நம்பிக்கை, நாடார் சமூகத்தில் இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு வலுப்பெற்றது.

வெள்ளையர் ஆட்சி தங்கள் சமூகத்திற்கு அளித்த பாதுகாப்பை நாடார் சமூகப் பெரியவர்கள் எப்போதும் நினைவு கூர்ந்தார்கள். ஆகவே, தங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர் எவராவது ஆங்கில ஆட்சிக்கு எதிராகச் செயல்படுவதையோ, எதிராகச் செயல்படுவோருக்கு உதவுவதையோ வரவேற்பதில்லை. வெள்ளையர் ஆதிக்கத்திற்கு எதிராகத் தோன்றிய சுதேசி இயக்கம் நாடு முழுவதும் பரவிக் கொண்டிருந்தது. அதன் பாதிப்பு விருதுநகரிலும் இருந்தது. இந்தக் கால கட்டத்தில்தான் பிராமணர் அல்லாதவர் முன்னேற்றத்திற்குப் பாடுபட 'ஜஸ்டிஸ் கட்சி' தோன்றியது. கீழைத் தெரு பிரமுகர்களான செந்தில் குமார நாடார், சண்முக நாடார் ஆகியோர் அதில் சேர்ந்தனர். விருதுநகரில் ஜஸ்டிஸ் கட்சியின் வளர்ச்சிக்குத் தடை ஏற்படுமென அக்கட்சிப் பிரமுகர்கள் எண்ணினார்கள். எனவே, கதர் அணிந்தவர்களைக் கண்டால் கேலி பேசினார்கள். காங்கிரஸ் கூட்டங்களில் கல்லெறிந்து கலைக்க முயன்றார்கள். தெற்கு ரத வீதி சங்கிலி கருப்பசாமி கோயில் அருகில் இருந்த 'இந்து மனிதாபிமான சங்க' நிர்வாகிகள் இந்து தர்ம பிரச்சார வேலைகளிலும் தேசிய இயக்கப் பணிகளிலும் துடிப்போடு ஈடுபட்டார்கள்.

பொருள் வசதியும் கல்வி வளர்ச்சியும் பெற்ற விருதுநகர் மக்கள், தங்கள் ஊர் பலவகை வசதிகளையும் பெற்றுச் சிறந்து விளங்க வேண்டுமென எண்ணினர். மக்களின் அறிவுப் பசிக்குத் தீனி போட நூலகம் அமைக்க முடிவு செய்தனர். தெப்பக்குளத்தின் தென்கிழக்கு மூலையில், ஊர் மகமைக்குச் சொந்தமான பெரியவண்டிப் பேட்டை (மஞ்சள் பேட்டை) கட்டிடத்தில், 'நாடார் மகாஜன சபை' மூலமாக நாடார் சமூகத்திற்கு மகத்தான சேவை புரிந்த ராவ்பகதூர் ரத்தினசாமி நாடார் பெயரில் நூலகத்தை நிறுவினர். ஊர்ப் பிரமுகர்கள் தத்தம் பெயரில் அலமாரிகளை வாங்கித் தந்தார்கள். புத்தகங்கள் வந்து குவிந்தன. கல்கத்தாவிலிருந்து வெளிவந்த 'மாடர்ன் ரெவ்யூ', இந்து, சுதேசமித்திரன் முதலான பத்திரிகைகளும் வரவழைக்கப்பட்டன. (தொடரும்)



# பிறந்த நாள் வாழ்த்து

## 1.6.2023

அன்று பிறந்த காணும் நாடார் முரசு ஆசிரியர் ஜே.அர்னால்டுமுரசு அவர்களுக்கு வாழ்த்துக்கள்!!!

# கிட்னி -- துப்புரவு தொழிற்சாலை

*இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் சிறுநீரகங்களின் பணி, வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் சிறுநீரக நோய்கள் பற்றி பிரமிப்பான கட்டுரை*

-டாக்டர் பி.சௌந்தரராஜன்.

## 22.புகை அரக்கனைப் பொசுக்குங்கள்!

புகைப்பது சிறுநீரகத்துக்குப் பகை. ஆச்சர்யமாக இருந்தாலும் இது உண்மை. புகை நுரையீரலுக்கு மட்டும் பகையில்லை. சிறுநீரகத்துக்கும் தான். தவிர, இதயத்தையும் பாதிக்கும். வாய், சிறுநீர்ப்பை சிறுநீரகம், கணையம் போன்ற இடங்களில் கான்சர் வர வைக்கும். ஆஸ்துமா, அல்சர் வர வழிவகுக்கும். அமெரிக்காவில் வருடா வருடம் 1.3 மில்லியன் பேர் புகைப்பதை நிறுத்துகிறார்கள் என்கிறது ஒரு சர்வே. அங்கு புகைப்பவர்களின் எண்ணிக்கையும் 1965ம் வருடத்திலிருந்து 1991-ம் வருடத்துக்குள் 52 சதவிகிதத்திலிருந்து 28 சதவிகிதமாக குறைந்திருக்கிறது. நம் நாட்டில் அப்படி ஏதாவது சர்வே எடுத்தால் புகைப்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்துதான் இருக்கும்.

சிகரெட் புகை நுரையீரலைப் பாதிக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால்... சிறுநீரகத்தையும் இதயத்தையும் அது எப்படி பாதிக்கும்?

சிகரெட் புகையில் நிகோடினுடன் டார்,கார்பன் மோனாக்ஸைடு, க்ரேசால், ஃபீனால் போன்ற நான்காயிரம் விதமான வேதிப் பொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. வாய்க்குள்ளே போகிற சிகரெட் புகை நுரையீரலுக்கு மட்டும் செல்வதில்லை. எச்சிலோடு கரைந்த ரத்தத்தில் கலக்கிறது. ரத்தத்தில் வருகிற இந்த உபரிப் பொருள்களைச் சிறுநீரகம் தான் வடிகட்டி வெளியே அனுப்புகிறது. இந்தக் கூடுதல் வேலையைச் செய்வதால் சிறுநீரகம் பாதிப்படைகிறது. இந்தப் பொருட்களைச் சுமந்து வர வேண்டியிருப்பதால் ரத்தக் குழாய் சுருங்குகிறது. சுருங்கிய ரத்தக் குழாயின் வழியே ரத்தம் அதிக அழுத்தத்துடன் பாய வேண்டி உள்ளதால் உயர் ரத்த அழுத்தப் பிரச்சனை ஏற்படுகிறது. இதயத்திலும் தொந்தரவுகள் வருகின்றன.





சிகரெட் பழக்கத்தால் சிறுநீரகத்துக்கு உடனடி, நீண்ட கால என்று இரண்டு விதமான பாதிப்புகள் ஏற்படுகின்றன.

| 6 | தூத்துக்குடி | 33 | MCA | டிகிரிபடித்தகுணமுள்ள | 5 | 9841088531 | மகரம்-உத்திராடம் | P464 | 30பவுன் |
| 7 | நாகர்கோவில் | 24 | B.Arch | அரசு பணி | 154 | 9444153571 | மிதுனம்-புனர்பூசம் | P466 | 75பவுன் |
| 8 | திருநெல்வேலி | 28 | MCA | படித்துவேலை | 5.5 | 9840104146 | சிம்மம்-உத்திரம்1 | P467 | 30பவுன் |
| 9 | கரிசல்குளம் | 26 | B.Tech | நன்குபடித்தநல்லகுடும்பம் | 5.7 | 9884429497 | ரிஷபம்-ரோகிணி | P468 | 70பவுன் |
| 10 | தூத்துக்குடி | 27 | M.Sc | படித்துவேலை/தொழில் | 163 | 9443027044 | கடகம்-பூசம் | P469 | 50பவுன் |
| 11 | தூத்துக்குடி | 31 | MBBS | டாக்டர் | 5.6 | 7299666703 | கேட்டை-விருச்சிகம் | P470 | 80-100+5 |
| 12 | திண்டுக்கல் | 32 | B.Tech,M.Res(UK) | நல்லகுணமுள்ள | 5.3 | 9442772356 | மீனம்-ரேவதி | P471 | 80-100 |
| 13 | திருச்செந்தூர் | 28 | MBA | படித்துவேலை | 5.5 | 9962436963 | விருச்சிகம்-அனுஷம் | P472 | 50பவுன் |
| 14 | தூத்துக்குடி | 32 | MBBS, MS | MBBS,BE,MBA | 5.5 | 9884441065 | திருவோணம்-மகரம் | P473 | 100பவுன் |
| 15 | தூத்துக்குடி | 31 | B.Com,MBA | படித்துவேலை | 5.5 | 9283107377 | கன்னி-சித்திரை | P474 | 50பவுன் |
| 16 | நாகலாபுரம் | 26 | BA,B.Ed,M.Sc | படித்துநல்லவேலைவருமானம் | 5.3 | 7904837981 | மேஷம்-அஸ்வினி | P475 | - |

## C.S.I.நாடார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நாசரேத் | 26 | MBA | படித்துவேலை/தொழில் | 5 | சென்னை | 9444881455 | 443G | நேரில் |
| 2 | சாத்தான்குளம் | 28 | BCA | பக்தியுள்ள | 5.5 | சென்னை | 9444863510 | 444G | 25பவுன் |
| 3 | நாகர்கோவில் | 30 | BE | நன்குபடித்துவேலை | 5.6 | சென்னை | 7708786869 | 435G | - |
| 4 | தூத்துக்குடி | 27 | B.P.T | அரசு வேலை | 5 | சென்னை | 9791433605 | 436G | நேரில் |

R.C.நாடார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி | 27 | B.E | அரசு வேலை/ஐ.டி | 5.3 | சென்னை | 8122835249 | 349G | - |
| 2 | தூத்துக்குடி | 27 | M.Sc,B.Ed | படித்துவேலைசென்னையில் | 5.1 | சென்னை | 9444375403 | 350G | 50+2 |
| 3 | திருநெல்வேலி | 23 | BA | படித்துவேலை/தொழில் | 5.4 | சென்னை | 8903461787 | 351G | 50+4 |
| 4 | சென்னை | 28 | B.Com | படித்துவேலை/தொழில் | 5.6 | சென்னை | 9840425192 | 352G | மறுமணம் |


நாடார் வாரிசுகளுக்கான நம்பிக்கையான இடம்

இமயம்
திருமண தகவல் மையம்

என்றென்றும் நமது பாரம்பரியத்தின் அடையாளம்....

இந்து / கிறிஸ்தவ நாடார்கள் தங்கள் வட்டார பழக்க வழக்கத்திற்கேற்ப வரன்கள் பார்த்து தருகிறோம்.
மறுமணமும் உண்டு.



மின்னல் H.ஸ்டீபன் உரிமையாளர்

எண்.1, ஸ்டேசன்ரோடு, சானடோரியம், சென்னை - 600 047.

தொடர்புக்கு: 7299 55 65 91 / 8939 500 381 / 955 16 16 103

# நாடார் நவீன சுயம் வரம்



## இந்து நாடார் (டாக்டர் MBBS/ MS/ MD) மணமகன் தேவை

சொந்தஊர்: சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-காஞ்சிபுரம், பிறந்ததேதி-29.10.1999, உயரம்-5.5அடி, ராசி-மிதுனம், நட்சத்திரம்-மிருகசீரிடம், படிப்பு-MBBS., இந்த மணமகளுக்கு, MBBS/MD/ MS மணமகன் தேவை. தொடர்புக்கு: 7708611066, 9382177793.

| | | | |
|---|---|---|---|
| | குரு சனி | | சந் |
| | இராசி | இராசி | ராகு |
| கேது | இராசி | இராசி | சுக் |
| செவ் | | லக்சூ புத | |

| | | | |
|---|---|---|---|
| | புத | குரு கே | |
| | அம்சம் | அம்சம் | சனி |
| சூரி | அம்சம் | அம்சம் | |
| | சந்சுக் ராகு | லக் | செவ் |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:வாழவல்லான் கீழுர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-30.1.1993, நிறம்-மாநிறம், உயரம்-5.5, ராசி-மேஷம், நட்சத்திரம்-அசுபதி 3ம் பாதம், படிப்பு-B.Tech., M.E., School Teacher., மாதவருமானம்-28,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9444842061, 7550133931. File No:M-120-G.

| | | | |
|---|---|---|---|
| சுக் | சந் | கேது | செவ் |
| | இராசி | இராசி | |
| லக்சூரி புதசனி | இராசி | இராசி | |
| | ராகு | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | | சூரி | சந் சனி |
| செவ் ராகு | அம்சம் | அம்சம் | லக்குரு சுக் |
| | அம்சம் | அம்சம் | கேது |
| | | | புத |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:சாத்தான்குளம்;, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-கடாட்சபுரம், சாத்தான்குளம் தாலுகா, முதலூர் வழி, தூத்துக்குடி மாவட்டம், வயது-29, நிறம்-மாநிறம், உயரம்-5.3, ராசி-கடகம், நட்சத்திரம்-பூசம், படிப்பு-M.Tech., வேலை பார்க்கும் இடம் சென்னை, மாதவருமானம்-25,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள தூத்துக்குடி மாவட்ட மணமகன் தேவை. 7010884941, 9514440257. பொருந்தும் நட்சத்திரங்கள்:அசுவதி,புனர்பூசம்,அஸ்தம்,சுவாதி, மிருகசீரிடம், உத்திராடம்,ரேவதி,திருவாதிரை,ரோகிணி File No:M-131-G.

| | | | |
|---|---|---|---|
| | | கேது | சுக் |
| | இராசி | இராசி | சூசந் புத |
| சனி | இராசி | இராசி | |
| | லக் ராகு | | செவ் வியா |

| | | | |
|---|---|---|---|
| கே செவ் | சுக் | கேது | |
| புத | அம்சம் | அம்சம் | வியா |
| லக் | அம்சம் | அம்சம் | சனி |
| | ராகு | சந் | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:அஜிதா. சொந்தஊர்-நாதன்கிணறு, திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை-42, பிறந்ததேதி-24.6.1995, உயரம்-5.6அடி, நிறம்-மாநிறம், ராசி-மேஷம், நட்சத்திரம்-கார்த்திகை 1ஆம் பாதம், படிப்பு-B.Arch., M.Arch., வேலை-M.Arch., Management, Chennai, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து சென்னையில் பணிபுரியும், நல்ல வருமானம் பெறும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444452749, 9444317372.9790805050 File No:P-519-G.

| | | | |
|---|---|---|---|
| | சந் கே | புத சுக் | சூரி |
| சனி | இராசி | இராசி | |
| | இராசி | இராசி | செவ் |
| | குரு | ராகு | லக் |

| | | | |
|---|---|---|---|
| | சனி | | கே |
| | அம்சம் | அம்சம் | புத சுக் |
| | அம்சம் | அம்சம் | |
| சூசந் ராகு | குரு | செவ் | லக் |

## R.C.கிறிஸ்துவ நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:திருநெல்வேலி, சாந்தி நகர், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-21.8.1996, வயது-26, நிறம்-மாநிறம், உயரம்-173, ராசி-துலாம், நட்சத்திரம்-விசாகம், படிப்பு-B.E., Accenture., மாதவருமானம்-70,000 பெறும் இந்த மணமகளுக்கு, டிகிரி படித்து நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9841315005, 7305862469, File No:RC-348-G.

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:திருச்செந்தூர் மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-19.9.1991, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-மகரம், நட்சத்திரம்-திருவோணம், படிப்பு-B.E., (ECE), Private Company, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9600701927, 7358260567. File No:P-307-G.

| | | | |
|---|---|---|---|
| | | லக் | கே |
| | இராசி | | |
| சந் | | | சுக்பு குரு |
| சனி ராகு | | | சூரி செவ் |

| | | | |
|---|---|---|---|
| லக் | கேசந் சுக் | | குரு செவ் |
| | அம்சம் | | |
| சூரி | | | |
| சனி புத | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:திருநெல்வேலி, இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-7.2.1996, வயது-26, நிறம்-மாநிறம், உயரம்-5அடி, ராசி-சிம்மம், நட்சத்திரம்-பூரம், படிப்பு-B.E., ectrical Communication., IT Company., மாதவருமானம்-40,000/- இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள நல்ல பழக்கம் உள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9444425998, 9444125136, File No:P-764-G.

| | | | |
|---|---|---|---|
| சுக் கேது | மாந் | லக் | |
| சனி | இராசி | | |
| சூரி செவ் | | | சந் |
| புத வியா | | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சனி |
| | அம்சம் | | |
| லக் | | | சூரிசு வியா |
| புத மாந் | சந் | | செவ் ராகு |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:மடத்தூர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-2.11.1998, நிறம்-சிவப்பு, உயரம்-5.3, ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, படிப்பு- B.Com.,MBA., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள அல்லது பெரிய அளவில் தொழில் செய்யும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444416716, 9445073249, File No:-P-989-G

| | | | |
|---|---|---|---|
| சனி சந் | | | |
| வியா கேது | இராசி | | |
| | | | செவ் ராகு |
| லக் | புத | சூரி சுக் | |

| | | | |
|---|---|---|---|
| (வ) சனி | ராகு | (வ) வியா | |
| சூரி சுக் | அம்சம் | | |
| | | | |
| சந் | லக் | கேது | செவ் புத |

## மறுமணம் இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்: நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-13.12.1989, வயது-30, உயரம்-5.2, நிறம்-மாநிறம், ராசி-மிதுனம், நட்சத்திரம்-மிருகசீரிஷம், படிப்பு-M.A., History., இந்த மணமகளுக்கு, படித்து வேலையிலுள்ள முதல் மணம் அல்லது மறுமணம் மணமகன் தேவை.6369915067, 9940547984. File No:M-130-G

| | | | |
|---|---|---|---|
| | | | சந் குரு |
| | இராசி | | கேது |
| லக்சுக் ராகு | | | |
| புத சனி | சூரி செவ் | | |

| | | | |
|---|---|---|---|
| சூரி சுக் | | லக் | |
| குரு கேது | அம்சம் | | செவ் |
| | | | புதசனி ராகு |
| | | சந் | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:நாசரேத், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-மீஞ்சூர்-601203, பிறந்ததேதி-6.10.1996, வயது-26, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-கடகம், நட்சத்திரம்-பூசம், படிப்பு-M.Sc., (Computer Science)., Accenture, மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்த சென்னையில் பணியிலுள்ள நல்ல குடும்பம், மணமகன் தேவை. தொடர்புக்கு:9600146922, 9710296189. File No:M-129-G

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| சனி | இராசி | | செவ் சந் |
| லக் | | | சுக் |
| வியா | | | புதசூரி ராகு |

| | | | |
|---|---|---|---|
| புத | ராகு | | சனி சூசுக் |
| செவ் | அம்சம் | | லக் |
| | | | |
| | | கேது | வியா சந் |




Prop.S.Balakrishnan

(FOR HIRE CENTRING SHEET, COLUMN BOX, SPAN, PROPS ETC.,)

SELVAM TRADERS

New No : 7, Old No : 6, Medavakkam Main Road, Madippakkam, Chennai- 600 091

Ph: 9841193884, 044-22242096



## இந்து நாடார் (டாக்டர்) மணமகன் தேவை

சொந்தஊர்:காட்டுநாயக்கன்பட்டி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சூளை, சென்னை-112, பிறந்ததேதி-17.9.1984, நிறம்-சிவப்பு, உயரம்-5.5, 165செ.மீ, ராசி-ரிஷபம், நட்சத்திரம்-ரோகிணி, படிப்பு-MDS., (Orthodonlic) Doctor, பல்மருத்துவர், மாதவருமானம்-3,60,000 பெறும், இந்த மணமகளுக்கு, டாக்டர் மணமகன் தேவை. தொடர்புக்கு:ஆர்.செல்வராஜ், வாட்சப்கால்மட்டும்:+919003154608.

| | | | |
|---|---|---|---|
| | | ரா சந் | |
| | இராசி | | |
| | | | புத |
| வியா | செ கேது | சனி | சுக்சூ லக் |

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | சந் |
| சனி ரா | அம்சம் | | லக் |
| சூரி | | | சுக்குரு கேது |
| | | | புத |

## ராகு கேது தோஷம் உள்ள மணமகளுக்கு இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:தொட்டியான்குடியிருப்பு, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை. நிறம்-மாநிறம், பிறந்ததேதி-13.8.1993, உயரம்-5அடி, ராசி-ரிஷபம், நட்சத்திரம்-மிருகசீரிஷம், படிப்பு-B.E., (Information Techinology), வேலை-Team Lead (Accenture) (குறிப்பு கல்யாணத்திற்கு பின் வேலைசெல்லும் விருப்பம் இல்லை), மாதவருமானம்-60,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்குபடித்து நல்ல வசதியான குடும்பத்தை சேர்ந்த மணமகன் தேவை. 9551551794, 7904658931. File No:P-574-G.

| | | | |
|---|---|---|---|
| | | கேது சந் | சுக் |
| சனி | இராசி | | சூரி புத |
| | | | |
| | லக் ராகு | | குரு செவ் |

| | | | |
|---|---|---|---|
| செகூ சுக் | | கேது | குரு |
| | அம்சம் | | |
| | | | |
| | லக்ரா சனி | புத | சந் |

## மறுமணம் மணமகளுக்கு இந்து நாடார் முதல் (அ) மறுமணம் மணமகன் தேவை

சொந்தஊர்: சீர்காட்சி, திருச்செந்தூர், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-10.8.1993, உயரம்-5.1, நிறம்-சிவப்பு, ராசி-மேஷம், நட்சத்திரம்-பரணி, படிப்பு-M.SC., இந்த மணமகளுக்கு, நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு 9884453555, 9176959581. File No:P-796-G.

| | | | |
|---|---|---|---|
| | சந் | கேது | சுக் |
| | இராசி | | சூரி புத |
| சனி | | | |
| | ராகு மா | | செவி லக் |

| | | | |
|---|---|---|---|
| | | கேது லக் | வியா |
| சூசுக் செவ் | அம்சம் | | |
| | | | சனி |
| | புத ராகு | | சந் |

## இந்து நாடார் மணமகன் தேவை வெளிநாட்டில்வேலையிலுள்ளவர்

சொந்தஊர்:சோழவந்தான், மதுரை மாவட்டம் இருப்பிடம்-சென்னை, வடபழனி, பிறந்ததேதி-16.2.1995, நிறம்-மாநிறம், உயரம்-167செ.மீ, ராசி-சிம்மம், நட்சத்திரம்-மகம், படிப்பு-M.Arch., (SRM)., Junior Architech., மாதவருமானம்-25,000/- இந்த மணமகளுக்கு, வெளிநாட்டில் செட்டில் ஆகிய மணமகன் தேவை. (கனடா, அமெரிக்கா, UK, Europe), தொடர்புக்கு:8939516356, 8939516356, File No:M-35-G. t.raj5@yahoo.com

| | | | |
|---|---|---|---|
| | லக்கே மாந் | | |
| சூரி சனி | இராசி | | செவ் |
| புத | | | சந் |
| சுக் | வியா | ராகு | |

| | | | |
|---|---|---|---|
| செவ் சனி | புத | லக் | |
| ராகு | அம்சம் | | சந் மா |
| | | | கேது |
| வியா | சூரி | | சுக் |


**கல்யாண சுந்தரம்(வரன் ஏற்பட்டாளர்)**

**அமிர்தகனி**
**நாடார் திருமண தொடர்பகம்**

**தொடர்பு எண்: 9840287570**
**Whtsapp: 9840948727**

நகைக்கு, ரொக்கத்திற்கு எந்தவித கமிஷனும் கிடையாது. பதிவு கட்டணமும் இல்லை. ரூ.1000 மட்டும் செலுத்தினால் 5பொருத்தமான வரன்கள் அனுப்பப்படும். கள்ளிக்குப்பம், அம்பத்தூர்.
எங்களாலும் முடியும் என்ற நம்பிக்கையில் செயல்படுகிறோம்.
பதிவு கட்டணம் ரூ.1000 மட்டும். ரொக்கத்திற்கு கமிஷன், நகைக்கு கமிஷன் என எந்த வித கட்டணமும் இல்லை.

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்-பேயன்விளை, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-10.11.1995, நிறம்-சிவப்பு, ராசி-ரிஷபம், நட்சத்திரம்-மிருகசீரிஷம், படிப்பு-B.C.A., NTRUST., மாதவருமானம்-50,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9003171254, 9994419679. File No:P-985-G.

| | | | |
|---|---|---|---|
| | கேது | சந் | |
| சனி | இராசி | | |
| | | | |
| லக் | செகுரு சுக் | சூரிபு ராகு | |

| | | | |
|---|---|---|---|
| | சூரிபு கே | | |
| குரு சனி | அம்சம் | | |
| செவ் | | | சந் |
| | லக் | சுக் ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:திருச்செந்தூர், குடியிருப்புவிளை, இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-25.10.1998, வயது-24, நிறம்-சிவப்பு, உயரம்-5.4, ராசி-தனுசு, நட்சத்திரம்-மூலம் 2ம் பாதம், படிப்பு-M.Tech.,I.T., Software Devaloper., மாதவருமானம்-70,000/- இந்த மணமகளுக்கு, படித்த சென்னையில் சொந்தவீடு பணியில் உள்ள மணமகன் தேவை. 9791092777, 7448347777, File No:M-135-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | லக் | மாந் |
| வியா கேது | இராசி | | |
| | | | செவ் ராகு |
| சந் | புத | சூ சுக் | |

| | | | |
|---|---|---|---|
| சனி | ராகு | லக்வி சந் | |
| | அம்சம் | | புத |
| மாந் | | | செவ் |
| சூரி | சுக் | கேது | |

e-mail:selvam77777@yahoo.in

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:மதுரை, இருப்பு:பெங்களூர், 1990/ 5.4, B.E.,MBA., IT- பணி. உயர் கல்வி படித்து, வெளிநாடு/ பெங்களூரில் பணிபுரியும் இந்து நாடார் மணமகன் தேவை. PH: 98941 10305.

பிறப்புகால தசாஇருப்பு:கேது:2வ/0மா/8நாள். நடப்பு தசா:சந் புத்தி சனி 17-07-2024 வரை. பிறப்புநட்சத்திரம்-அசுவினி 3ம் பாதம். ராசி-மேஷம்.

| | | | |
|---|---|---|---|
| | சந் லக் | செவ் | |
| | இராசி | | குரு கேது |
| ராகு | | | சூரிபுத சுக் |
| சனி | | | |

| | | | |
|---|---|---|---|
| | செவ் ராகு | | சந் சுக் |
| | அம்சம் | | |
| | | | |
| | சனி | சூரிபு குகேலக் | |

# பிறந்த நாள் வாழ்த்துக்கள்!







27.5.2023 அன்று விஜிபிராஜதாஸ் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

வி.ஜி.பி.சந்தோசம் அண்ணாச்சி அவர்கள், திரு.என்.ஆர்.தனபாலன் மற்றும் மல்லைசத்யா ஆகியோர் வாழ்த்து தெரிவித்த போது.

குட்டம் கஸ்பா சென்னை வாழ் மார்த்தாண்டம் உறவின் முறை நலசங்கம் ஆண்டுவிழா 28.5.2023 அன்று மிக சிறப்பாக நடைபெற்றது.





காலை பெருந்தலைவர் காமராஜர் ஐயாவின் திரு உருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பிறகு நமது சங்க அமைப்பாளர் S.S.திரு.பகிரதன்மார்த்தாண்டன் அவர்கள் தலைமை தாங்கி குத்து விளக்கு ஏற்றி வைத்தார்கள்.

சங்கதலைவர் V.ஜெயராஜமார்த்தாண்டன் அவர்கள் முன்னிலை வகித்தார்கள். நமது செயலாளர் A.M.ராஜேஷ்குமார் மார்த்தாண்டன்(9840846266) அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். அதனை தொடர்ந்து குழந்தைகள் மற்றும் பெரியோர்களுக்கான பொழுது போக்கு நிகழ்ச்சி நடைபெற்றது.

12.30 மணிக்கு நமது சிறப்பு அழைப்பாளர் திரு.V.ஆனந்தராஜ் நாடார், திரு.R.தனம் என்கிற ராமச்சந்திரன் நாடார் அவர்கள் மற்றும் திரு.N.S.தனபதி மார்த்தாண்டன் அவர்கள் சங்கத்தின் முக்கியத்துவம், சங்கத்திற்கான இடம் வாங்க வேண்டிய அவசியம் போன்றவற்றை சிறப்பாக எடுத்துரைத்தார்கள். மதியம் 2மணிக்கு அறுசுவை உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது மற்றும் வருகை தந்திருந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் 500ரூபாய் மதிப்புள்ள (5 வகை) பரிசு பொருள் கொடுக்கப்பட்டது.

இவை அனைத்தும் நமது நிர்வாகிகளின் முழு பங்களிப்போடு நடைபெற்று உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பாக சங்க உறுப்பினர்களான திரு.D.S.முருகானந்தம் நாடார் மற்றும் திரு.D.S.சண்முகானந்தன் நாடார், திரு.M.சகாதேவன் மார்த்தாண்டன், திரு.A.தனச்செல்வன் நாடார், திரு.N.S.சரவணன் (காவல் ஆய்வாளர்) திரு.C.J.தினேஷ் ராஜா மார்த்தாண்டன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்றோம். நிகழ்ச்சியினை செயற்குழு உறுப்பினர் திரு.பொன்.சண்முகநாதன் மார்த்தாண்டன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

நிறைவாக கௌரவதலைவர் திரு.A.A.காசி மார்த்தாண்டன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

# முதுமையில்......இனிமை...................

புதிய தொடர்கதை. எழுத்து.புலவர்.இரா.சண்முகம் அவர்கள்.

நாடார் வரலாறு என்பது அமிழ்தம் போன்றது. அப்படிப்பட்ட வரலாற்றை நாடார் சமூகம் சரியான முறையில் அடுத்த தலைமுறைக்கு கடத்துதல் என்பது மிக முக்கியப் பணியாகும். ஆனால், நம் சமுதாயத்தில் ஒரு சிலரே சமுதாய வரலாற்றை படிப்பதிலும், அதை சேகரித்து அடுத்த தலைமுறைக்கு கடத்துவதிலும் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அதிகமான பெருமைமிகு வரலாறுகள் இருப்பதால் என்னவோ சொந்த சமுதாயத்தினருக்கே அதன் அருமை தெரிவதில்லை. நாடார் சமூகத்தின் வரலாறுகளை ஆவணப்படுத்தும் வரலாற்று ஆய்வாளர்களும் நம் சமூகத்தில் மிக குறைவு தான். அப்படியான சிற்சில வரலாற்று ஆய்வாளர்களும் அவர்கள் எழுதிய வரலாறுகளும் கூட எளிதில் மறக்கப்படுவது வருத்தமான ஒன்றுதான். அப்படி மறக்கப்பட்ட ஒரு நாடார் சமுதாயம் பற்றாளரும் வரலாற்று ஆய்வாளருமான புலவர் சண்முகம் அவர்கள் பற்றி அண்மையில் கேள்விப்பட நேர்ந்தது. அவரது இனிமையான வாழ்க்கைப் பயணங்களையும் அவர் நாடார் சமுதாயத்திற்கு ஆற்றிய சில அரும்பணிகளையும் சற்றுத் திரும்பிப் பார்க்கலாம்.

புலவர் இரா.சண்முகம் அவர்கள் இயற்கை எழில் கொஞ்சும் கன்னியாகுமரி மாவட்டத்தில் காரங்காடு எனும் ஊரின் அருகே நெட்டாங்கோடு என்ற கிராமத்தில் 21.2.1937ஆம் தேதி இராமசாமி நாடார் - நாடாச்சி அம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவர் பி.லிட் வரை படித்தார். படிப்பை முடித்த பின் நூல் கம்பெனி ஒன்றில் சில காலம் பணியாற்றினார். பின்னர் சில வருடங்களாக தனியார் வங்கி ஒன்றில் வேலை செய்து வந்தார். அதன்பின், 1960 காலகட்டத்தில் மதுரையில் நாடார் மகாஜன சங்கம் நடத்திய "மஹாஜனம்" பத்திரிக்கையில் எழுத்தாளராக பணியில் சேர்ந்தார்.

அடுத்த இதழில் தொடரும்......




அரிசி மொத்த வியாபாரம்.

செல்:9840994451, 26380752 / 73.

சிவசக்தி ரைஸ் டிரேடர்ஸ்



286, சி.டி.எச்.ரோடு, செல்வராஜ் காம்ப்ளக்ஸ், ஆவடி, சென்னை-54.

செல்வராஜ் சூப்பர் மார்க்கெட்

286/1, சி.டி.எச்.ரோடு, ஆவடி, சென்னை-600 054.selvarajsupermarket@gmail.com

M.ஆறுமுகசாமி
9524124960


ஸ்ரீ பெரியாண்டவர் துணை





காலத்தின் கண்ணாடி
திருமண தகவல் மையம்
N.R.T.மஹால், செங்கல்பட்டு - 603 001.
M.ஆறுமுகசாமி நாடார் தலைவர் மானாம்பதி வட்டார நாடார்கள் சங்கம்.
ஆமூர் கிராமம், மானாம்பதி அஞ்சல் காஞ்சிபுரம் மாவட்டம்.
செல்:9790745412, 044-37419396, 044-27491643.

நம்பிக்கை! நாணயம்!! கைராசி நிறுவனம்!!!
ஸ்ரீ திருச்செந்தூர் முருகன் துணை
B.S.J
ரியல் எஸ்டேட்
B.செல்வம்
9840727121 / 9380559370
bsjselvam@gmail.com
B.ஜெயக்குமார்
9840760338 / 9380552496.

தனிவீடு, மனை, நிலம்,அப்பார்ட்மெண்ட், தோட்டம்,
வாங்க விற்க வீடு கடை வாடகை & லீசுக்கு
அய்யப்பன்தாங்கல், போரூர் காட்டுபாக்கம், மாங்காடு,
கோவூர் ஆகிய இடங்களில் வாங்க விற்க அணுகவும்.




நெ.1/2, பிள்ளையார்கோயில் தெரு, முருகன் கோவில் அருகில், பெரியகொளுத்துவாஞ்சேரி ரோடு, அய்யப்பன்தாங்கல், சென்னை-56.


# சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம்

தந்தையைப் போல தனயன்

-கவிஞர் காசி ஆனந்தன்

**இலட்ச ரூபாய்**

சிவந்திக்கு எனது கவிதைகள் மிகவும் பிடிக்கும். நான் அடிக்கடி அவரை சந்திப்பேன். அவர் எனக்கு சடையப்ப வள்ளலாக விளங்கினார்.

நான் எழுதிய "நறுக்குகள்" என்ற கவிதைத் தொகுதியை அவருக்குக் கொடுத்தேன். அதைப் புரட்டிப் பார்த்தவர், "அடுத்த வாரம் வாருங்கள்" என்று சொன்னார். அடுத்த வாரம் போய்ப் பார்த்தேன். கவிதைத் தொகுதியிலிருந்த ஒவ்வொரு பாடலையும் படித்து ரசித்து ருசித்துச் சொன்னார். எனக்கு வியப்பாக இருந்தது.

"வைத்துக் கொள்ளுங்கள்" என்று எனக்கு இலட்ச ரூபாய் கொடுத்தார்! நான் அதிர்ந்து போனேன்!! இப்படி ஒரு வள்ளலா? சங்க கால மன்னர்களையும் மிஞ்சி விட்டார், சின்னய்யா!

காலத்தால் செய்த உதவி

-பி.விசுவநாதரெட்டி (விஸ்வம்)

"அம்புலி மாமா" (சந்தமாமா) குழந்தைகளின் இதழை வெளியிடுகிறவர், விசுவம். அவருக்கு திடீர் என்று இதழை வெளியிட முடியாத ஒரு நெருக்கடி. அப்போது டாக்டர் சிவந்தி ஆதித்தனார் கைகொடுத்து உதவினார். எப்படி? புகழ் பெற்ற படத் தயாரிப்பாளர் பி.நாகி ரெட்டியின் மகன், விசுவம்.

'சந்தமாமா' பத்திரிகையின் நிறுவனர் என் தந்தையார் பி.நாகிரெட்டி, அதன் ஆசிரியர் சக்கரபாணி ஆகிய இருவரின் விருப்பப்படி 'சந்தமாமா' இதழ்களுக்குப் பயன்படுத்தப்படும் நியூஸ்பிரிண்ட் காகிதம் தாங்கிய கப்பல், பின்லாந்தில் இருந்து வரவேண்டியது, வரவில்லை. காகிதம் இறக்குமதியாவதில் சிக்கல் ஏற்பட்டு தாமதமாகிவிட்டது. எங்கள் கைவசம் இருந்த காகிதத்தைக் கொண்டு அந்த மாத இதழ்கள் அச்சிடப்பட்டு விட்டன. அடுத்த மாதத்திற்கு நிலைமையை எப்படிச் சமாளிப்பது?

'பத்ராவதி பேப்பர் மில்ஸ் காகிதம் இறக்குமதி செய்யப்படும் பேப்பர்களுடன் ஓரளவுக்கு ஏற்கும்படியாக இருக்கிறது' என்று எங்களது அச்சகப் பிரிவினர் சொல்ல, உடனே நான் பத்ராவதி பேப்பர் மில்லின் தலைமையகத்துக்கு - பெங்களூருக்கு சென்றேன்.

டெல்லிக்குப் போ!

அந்த நிறுவனத்தின் இயக்குனர்களில் ஒருவரைச் சந்தித்து, நிலைமையை விளக்கி தாமதமில்லாமல் பத்திரிகை காகிதம் தரச்சொன்னேன்.

என் நிலையைக் கண்டு மிகவும் பரிதாபப்பட்ட அவர், உடனே விற்பனை மேலாளரிடம் என்னை அறிமுகம் செய்வித்து எனக்குத் தேவையான உதவியைச் செய்யச் சொன்னார். ஆனால், அவரோ என்னிடம் 'பத்ராவதி மில்லுக்குப் போய் அங்கே இருக்கும் விற்பனை அதிகாரியைச் சந்தியுங்கள்' என்று ஆலோசனை சொன்னார்.

நானும் மிகுந்த நம்பிக்கையுடன் உடனே பத்ராவதிக்குப் புறப்பட்டேன். அந்த அதிகாரியைச் சந்தித்து நிலைமையைச் சொல்லி உதவும்படி கேட்டுக்கொண்டேன்.

'நீங்கள் சிரமப்படுவதைப் பார்த்தால் - அதுவும் பிரபல குழந்தைகள் இதழுக்கு பத்திரிகை காகிதம் வாங்க சிரமப்படுவதை பார்த்தால் - மிகவும் சங்கடமாகத்தான் இருக்கிறது. இப்போது எங்களால் வாடிக்கையாளர்களுக்குத்தான் பேப்பர் சப்ளை செய்ய முடியும். எதற்கும் நீங்கள் டெல்லியில் இருக்கும் 'ரிஜிஸ்ட்ரார் ஆப் நியூஸ்பேப்பர்' அவர்களிடம் இருந்து ஒரு கடிதம் வாங்கி வாருங்கள்' என்று 'முடியாது... இல்லை' என்பதை நாசூக்காகத் தெரிவித்து விட்டார்.

எங்களது டெல்லி அலுவலகத்துக்கு செய்தி தந்து, உடனே ஆவன செய்யச் சொன்னேன். 'இதற்கெல்லாம் அங்கே ஒரு நடைமுறை இருக்கிறது. அதன்படிதான் உத்தரவு பிறப்பிப்பார்கள்' என்று டெல்லி அலுவலகத்திலிருந்து பதில் வந்தது.

சரி.. அடுத்த மாத 'சந்தமாமா' இதழ்களுக்கு விடுமுறை விட வேண்டியதுதான்... இதைத்தவிர வேறு என்ன செய்வது என்று தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தேன். (தொடரும்)

# வழக்கமான வகுப்பறைச் சிரிப்புகள்:

வழங்குபவர்: - திருமதி.லீலாஸ்டீபன், மும்பை-78, செல்:022-40142398

1.மயிலு:- அம்மா, நான் பனிரெண்டாம் கிளாஸ் பாஸாயிட்டேன். டீச்சருக்குப் படிக்கணும்மா!
அம்மா:- படிச்சது போதுமடி, சமையல நல்லாக் கத்துக்கோ, அப்பதான் மாமியார் வீட்ல நல்ல பேர் வாங்க முடியும்!

2.ஆசிரியர்:- பால் எத்தனை வகைப்படும்?
மாணவன்:- ஆரோக்கியா பால், ஆவின்பால், அமுல் பால்
ஆசிரியர் :ஏண்டா, வீட்ல பால் வியாபாரமோ?
இலக்கணத்தைப் படி புரியும்.

3.(காது கேளாத தாத்தா) பேரனிடம்:- உனது உயிர் நண்பன் யாருடா?
பேரன்:- செல்போன் தாத்தா.
தாத்தா:- செல்வனா, அவன் ரெம்ப நல்ல பையன் ஆயிற்றே!

4.வகுப்பாசிரியர்: மாணவர்களே, கோடைவிடுமுறை முடிந்து முதல் நாள் வந்துள்ளீர்கள். என்ன எதிர்ப்பார்க்கிறீர்கள்?
மாணவர்கள்- அடுத்த கோடை விடுமுறை.
எப்போது வரும் என்று! சார்!
ஆசிரியர்:,??????

5.வேணு:- எங்க அக்காவைப் போலீசுக்குப் படிக்க வைச்சது தப்பாப் போச்சு!
சுகுமார்: ஏன்? என்னாச்சி?
வேணு:- நடு இரவில் திருடன், திருடன் என்று தூக்கத்தில் கத்துகிறாள்.

6.முட்டை வியாபாரி (வகுப்பாசிரியரிடம்) சார்! என் மகன் கணக்கில் எப்படி மார்க் வாங்குகிறான்?
ஆசிரியர்:- நீர் விற்பதை அவன் வாங்குகிறான்.
வியாபாரி:- வாத்தியார் சொன்னது புரியலையே!
வீட்ல போய் யோசிக்கணும்!

7.ஆசிரியை:- மாலா, முக்கிய வைட்டமின்கள் நான்கினைக் கூறு.
மாலா:- வாளை, சாளை, அயிரை, நெத்திலி மீன்கள் தான் கேள்விப்பட்டிருக்கேன். வைட்ட மீன் கேள்விப்படலையே டீச்சர்.



ஆசிரியை:- மீனுக்கும், வைட்டமின்னுக்கும் வேறுபாடு தெரியாத உன்னைக் கேட்டேன் பார்?
மாலா:- கேள்வி சரியாக புரியலை டீச்சர்?

8.திருடன் (மகனிடம்) இன்று பள்ளியில் முதல் நாளாயிற்றே, என்ன விளையாட்டு விளையாடினீர்கள்?
மகன்:- திருடன் போலீஸ் விளையாட்டு அப்பா.
திருடன்:- போங்கடா, வேறு விளையாட்டே உங்களுக்குத் தெரியாதா.

9.அப்பா:- நவீன், பாரதியார் தனது "ஓடி விளையாடு பாப்பா" பாடலில் "மாலை முழுதும் விளையாட்டு" என எழுதியுள்ளாரே, நீங்கள் விளையாடுவதே இல்லையே ஏன்?
நவீன்: யார் சொன்னது விளையாடவில்லை என்று இரவு வரை செல்போனில் விளையாடுகிறோமே, தெரியாதா?

10.தமிழாசிரியர்:உயிரினும் மேலானது என்று திருவள்ளுவர் கூறுவது எதை?
மாணவன்:- செல்போனை ஸார்!

11.சாரதா பாட்டி:- உன் வகுப்பில் முதல் மாணவி யார்?
பேத்தி:- நான் தான் பாட்டி:- என் பெயர் அபிநயா இல்லையா? எனவே வருகைப் பதிவு ஏட்டில் என் பெயர்தான் முதலிடம்!
பாட்டி: நீ யாரு, சாரதா பேத்தி இல்லையா!

12.மாமா:- வருண் உங்க வகுப்பாசிரியர் பெயர் என்ன?
வருண்:- இன்று தானே முதல் நாள். இன்னும் பட்டப் பெயர் வைக்கல மாமா!

13. சிறுவன் கோடி (வீட்டுக்கு வந்த நண்பர்களிடம்) எங்க ஆடு பேசுமே!
நண்பர்கள்:- எங்கே பேசச் சொல் பார்க்கலாம்?
கோடி:- (தழையைக் காட்டி) கோடை விடுமுறை மாதத்தின் பெயரென்ன?
ஆடு:== மே..........மே......மே.....
நண்பர்கள்:- உண்மைதான்டா- ஆடு பேசுதே.







S.K.இராகவன் இராஜா ஏஜென்சி
asianpaints
Dealers in: Hardwares, Paints, Cements, Steel, Sanitarywares & All Building Materials
பிளாட் எண்:1, ஆண்டவர்நகர், பாரதிசாலை மெயின் ரோடு, இராமாபுரம், சென்னை-89
Ph:044-22491790, 22492340 ,Cell: 9841169098, 70100 00824

# உறவுகள்!

**ஜெருசலேம் - யாத்திரை ஓர் ஆன்மிக உறவு**

ஏசுகிறிஸ்துவின் முகம் பதிந்த துணி, பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. நாங்கள் அங்கே பிரார்த்தனை செய்துவிட்டு வெளியே வந்தோம். அருமை அம்மாவோடு அந்தப் புனிதத் தலத்துக்கு வந்தது பெரிய மனநிறைவைத் தந்தது. வெளியே நின்றுகொண்டிருந்த யூதர் ஒருவர், நாங்கள் எங்கிருந்து வருகிறோம் என விசாரித்தார். இந்தியாவிலிருந்து வந்துள்ளதாகச் சொன்னோம். அவர் ஆங்கிலத்தில் உரையாடியதால் அதைப் புரிந்து கொள்ள முடிந்தது. அவருக்கு நாங்கள் எங்களோடு கொண்டு சென்றிருந்த சந்தன சாவி அமைப்பினை அன்பளிப்பாகக் கொடுத்தோம். அவர் எங்களுக்கு அங்குள்ள அனைத்து இடங்களையும் சுற்றிக் காண்பித்தார்.

பலகாலம் எங்களோடு பழகியவர் போல நட்புப் பாராட்டினார். இது ஆன்மீக உறவா? அன்பின் உறவா? மனித உறவா? அங்கு வந்த பலவித மக்களையும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. உறவுகளை நாமும் உருவாக்குகிறோம். உறவுகளும் நம்மை நாடி வருகின்றன. மனிதனின் உறவுகளுக்கு மனதின் உள்ளுணர்வுகள் முக்கியம். உள்ளுணர்வுகளின் உன்னதத்தால் உன்னதமான உறவுகள் விளைகின்றன. கவிஞனின் உள்ளுணர்வில் கவிதை பிறக்கிறது. கலைஞனின் உள்ளுணர்வில் கலைகள் பிறக்கின்றன. படைப்பாளியின் உள்ளுணர்வால் படைப்புகள் உருவாகின்றன. விஞ்ஞானியின் உள்ளுணர்வில் கண்டுபிடிப்புகள் நிகழ்கின்றன.

இயக்குநர் இமயம் பாரதிராஜா ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். தனது உதவியாளர்களுடன் கதை விவாதத்தில் ஈடுபடும்போது சில சமயம் தனக்குக் குழப்பம் ஏற்படும். அதுபோல படப்பிடிப்புக்கான இடத்துக்குச் சென்றதும். கையில் இருக்கும் ஸ்கிரிப்டை அப்பால் போட்டு உள்ளுணர்வுகள் தோன்றும். என் உடலில் ஓர் அதிர்வு (வைபிரேஷன்) ஏற்படும். அது சொல்லும் பாணியில் காட்சிகளைப் படம்பிடிக்கத் தொடங்குவேன். எனது உதவியாளர்களுக்கு நான் என்ன எடுக்கிறேன் என்று புரியாமல் குழம்புவார்கள்.

ஸ்கிரிப்டில் சொன்னவாறு எடுக்காமல் மாற்றி, மாற்றி எடுப்பேன். முதலில் எனக்குத் தோன்றுவதை முதலில் எடுப்பேன். அடுத்துத் தோன்றுவதை அடுத்து எடுப்பேன். உள்ளுணர்வுகள்தான் எனக்குவழிகாட்டும் என்றார். ஆங்கிலக் கவிஞர் டி.எஸ்.எலியட் அவர் எழுதிய "தி வேஸ்ட்லேண்ட்" என்ற கவிதைக்கு, இலக்கியத்துக்கான நோபல் பரிசு கிடைத்தது. அந்தக் கவிதைக்கு ஒரு சிறப்பு உண்டு என்று சொல்வார்கள். அதனைத் தொடக்கத்தில் இருந்து வரிகளை வரிசையாகப் படித்தால்தான் அந்தக் கவிதை புரியும் என்று இல்லை. மாறாக, அதனை எந்தப் பக்கத்தில் படிக்கத் தொடங்கினாலும் அர்த்தம் புரியும். மத்தியில் இருந்து மேல் நோக்கிப் படிக்கலாம். கீழிருந்து மேல் நோக்கிப் படிக்கலாம். எந்தப் பக்கத்தில் தொடங்கினாலும் அர்த்தம் விளங்கும் என்பார்கள். இதைத்தான் பாரதிராஜா என்ற படைப்பாளி வேறு விதமாகச் சொன்னார். படப்பிடிப்பு வரிசையில் காட்சிகளை மாற்றி, மாற்றி எடுப்பேன் என்று இதைத்தான் அவ்வாறு சொன்னார்.

**எழுத்தாளர் ஜெயகாந்தனின் தமிழ் உறவு**

ஒரு கல்லூரி விழாவில் எழுத்தாளர் ஜெயகாந்தன் பேசியதைப் பத்திரிகையில் படிக்க நேர்ந்தது. அவர் பேசியதாக வந்த செய்தி இதுதான். வழக்கமாக இதுபோன்ற விழாக்களில் பேச எனக்கு ஒரு தலைப்பைக் கொடுப்பார்கள். இந்த விழாவில் எனக்கான தலைப்பு எதுவும் தரவில்லை. எனவே நான் என்னைப் பற்றிப் பேசப்போகிறேன். நான் ஜெயகாந்தனைப் பற்றிப் பேசப்போகிறேன். ஜெயகாந்தன் ஒரு தனி மனிதன் என்ற அர்த்தத்தில் அல்ல. ஜெயகாந்தன் ஒரு மனிதன் என்ற அர்த்தத்தில் பேசப் போகிறேன். நான் இந்த விழாவுக்கு வந்தபோது மாணவர்கள் எல்லாம் விசில் அடித்து என்னை வரவேற்றார்கள். விசில் அடிப்பது அவர்களின் நோக்கம் அல்ல. அது அவர்களின் சுவாபம். பள்ளி விட்டதும் பள்ளிக் குழந்தைகள் எல்லோரும் துள்ளிக் குதித்தும் வெளியே ஓடிவருவார்கள். அது அவர்களின் விருப்பம் அல்ல. குணாதிசயம். இப்படிப் பொதுவான நிகழ்வுகளில் இருந்து சிறப்பான உண்மைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். நான் அதிகம் படித்ததில்லை. ஆனால் இந்த உலகைப் பார்க்கிறேன். நான் எழுதுகிற விஷயங்களெல்லாம் ஒன்றுதான். கொடுக்கிற தலைப்புகள்தான் வேறு.

'அக்கினிப் பிரவேசம்' என்ற தலைப்பில் ஜெயகாந்தன் எழுதியதைக் குப்பை என்று ஒதுக்கியவர்கள் அதை, 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்ற தலைப்பை மாற்றி வெளியிட்ட போது சாகித்ய அகாடமி விருதினைத் தந்தார்கள். (தொடரும்)




AB

**Dr.M.Sundaralingam** B.SC.,B.VSC.,

PH:24895266 CELL: 9444015277

**ஆர்த்தி பிராய்லர்ஸ்**

77, Nedunchezhian Street, (opp. M.G.R. Nagar Market) M.G.R.Nagar, Chennai-78.





செல்:9444484977, 9962454977, 044-25980239.

**ஸ்ரீ மகா கணபதி ஜோதிட நிலையம்**

ஜோதிடர்.த.பெ.சுந்தர் நாடார்

ப.எண்:8, பு.எண்:15, நல்லப்பவாத்தியார் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021.

**ஜாதகம் திருமண பொருத்தம் வாஸ்து பார்க்கப்படும்.** நேரம்:காலை8.00மணி முதல் மதியம்2.00 மணி வரை



S.ராஜையா நாடார்

**சக்தி டிப்போ & சக்தி ஹார்டுவேர்ஸ்**

எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி,செங்கல்,கட்டுமானத்திற்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும்

168,புதியஎண்,123,எம்.எம்.காலனி, அண்ணாநகர், 3வது அவென்யு, (அமைந்தகரை காவல்நிலையம் அருகில்), அமைந்தகரை, சென்னை-29

போன்:9840036745, 9841085745, Ph:26214852, 26267101.



R.S.SANTHANAM

Sri Brammasakthi Amman Thunai Sri Sudalaimadaswami Thunai

**R.S.SANTHANAM**

# ரேவதி ஹார்டுவேர்ஸ்

Dealers in: Cement, Steel Quality Bricks, Sand, Blue Metal and Building Material Suppliers.

Stockist : Coramandel, ultra Tech, Zuari / Priya Cement

38/24-A, Poonamallee Road, Ekkattuthangal, Chennai-32. Ph:22252948, 22250015 Cell: 9840042948.



நாடார் முரசு அலுவலகத்திலிருந்து சந்தா, விளம்பரம் சேகரிப்பதற்காக சேலத்திற்கு சென்ற நாடார் முரசு நிருபர் சரவணன் அவர்கள் மரியாதை நிமித்தமாக சேலம் மாவட்டம் ஜலகண்டபுரம் பிரமுகர் தமிழ்தென்றல் அவர்களை நாடார் முரசு பத்திரிகைக்கு அவர் செய்த சேவையை பாராட்டி பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தார் திரு.தமிழ்தென்றல் அவர்களுக்கு எங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

கோயபுத்தூர் பகுதி மக்களுக்கு வேண்டுகோள் செய்தி: ஜூன் மாதம் எங்கள் அலுவலகத்திலிருந்து சந்தா விளம்பரம் சேகரிப்பதற்காக கோயம்புத்தூர் பகுதிக்கு வருகை தர உள்ளோம். உங்களது மேலான ஆதரவை தந்து நாடார் முரசு வளர்ச்சிக்கு உதவ வேண்டுகிறோம்.

நாடார் முரசு வாசகர்களே உங்கள் மகன்-மகளுக்கு வரன் தேடுகிறீர்களா? உள்களுக்கு ஒரு நற்செய்தி நாடார் முரசு website:www.indianadarmurasu.com என்ற இணையத்தளத்தில் பதிவு செய்து பயன்பெறுங்கள்.

## கண்ணீர் அஞ்சலி

## 17.5.2023



கடந்த 40ஆண்டுகளாக நாடார் முரசு அலுவலகத்திற்கு முன் பானை வியாபாரம் செய்து கொண்டு நாடார் முரசுக்கு உதவியாக இருந்த திருமதி.ராணி அவர்களின் திடீர் மரண செய்தி கேட்டு அதிவுருகிறோம். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்.

**விலைகுறைவு!** **R.Suresh** **Ph: 2226 6961, 22266962** **மனநிறைவு!**

# AMUTHA & CO



**Sony, L.G, TCL, SamSung, Onida,Sun sui, Akai, Philips, Panasonic, IFB, WhirlPool, Godrej, Kenstar,Kelvinator,Hitachi, Carrier, Voltas, Videocon, Electrolux, Tatasky, Big Tv, Aritel, Sun Direct, ULTRA, Sowbaghya, Amirtha, Akshaya, Lakshmi, Preethi, ButterFly, Usha, Khaitan, Crompton, Orient, Almonard, Havells**

**1, Venkatesan Street, Shanmugam Road, Tambaram West, Chennai-45.**



# விருதுநகர் இந்து நாடார் வியாபாரிகள் சங்கம் திருமண தகவல் மையம்

**இந்து நாடார்களுக்கு மட்டும்.**(மணமகன்/மணமகள்) செயல்படும் திருமண தகவல் மையம் பதிவு கட்டணம் 200 மட்டும். வேறு எந்தவித கட்டணமும் கிடையாது. மணமகன்/மணமகள் தேவைப்படுவோர் பதிவு செய்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்கிறேன். (வசதி குறைவானவர்களுக்கு பதிவுகட்டணம் கிடையாது).

**மா.பட்டாணி நாடார் நினைவு டிரஸ்ட்,** 156,மெயின்பஜார், விருதுநகர், செல்:9486555373, 8610212126.

கலைமாமணி விருது பெற்ற திரு.தாமரை செந்தூர்பாண்டி எழுதும் சமூக தொடர்கதை.

# நிலவுக்குத் தென்றல் பகையானால்!

கலைமாமணி தாமரைசெந்தூர்பாண்டி, செல்:8838477377.



19.தனிமையிலமர்ந்திருந்த நிறுவனர் சாவித்திரி உள்ளே வந்ததும் சுழல் நாற்காலியில் சுழன்று அவளை நேராகப் பார்த்தார்.

"குட்மார்னிங்! டூட்டியில் சேர்ந்து விட்டீர்களா மிஸஸ் சாவித்திரி?"

"ஆமாம் சார்! மிக்க நன்றி!

"வேலை பிடித்திருக்கிறதா?"

"இப்பொழுதுதானே சேர்ந்திருக்கிறேன்..... பிடித்த வேலையாகத்தானிருக்கும் என நம்புகின்றேன்"

"பிடிக்கும். பிடிக்க வேண்டும்..."

"தாங்க்யூ சார்..." நன்றியுடன் முறுவலித்தாள்.

"சரி, வேலையைக் கவனியுங்கள். சாயங்காலம் வீட்டிற்கு போகுமுன்பு என்னை வந்து பார்ப்பீர்களா?"

"நீங்கள் சொல்வதை நான் செய்வதுதானே சார் முறை?"

"குட்! ஈவ்னிங்வாருங்கள்.."

விடை பெற்றுப் போனாள்.

தன் இருக்கையில் வந்தமர்ந்தாள். டைப்பிஸ்ட் ஒரு இளம் பெண். இணக்கமாகச் சிரித்தாள்.

"நீங்கள் எம்.ஏ., பி.எட் படித்த சர்வீஸ் கமிஷன் எழுதி வேலை பார்த்துவிட்டு ரிசைன் பண்ணினீர்களாமே?"

"ம்ம்... ஆமாம்." முறுவலித்தாள் சாவித்திரி.

"நம் ஆபீசில் அதிகம் படித்தவரே நீங்கள் தான்"!

"அப்படியா? சந்தோசம். ஆமாம். என் க்வாலிஃபிகேசன் பற்றியெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"மேனேஜர் சொன்னார். கவர்ன்மெண்ட்டில் சர்வீஸ் பண்ணிய நீங்கள் திரும்பவும் அந்த வேலைக்குப் போகமுடியாதா?"

"போகலாம். ஆனால் நான் போக விரும்பவில்லை."

"ஆச்சர்யமாக இருக்கிறது. இதற்குமேல் கேட்டால் நாகரீகமும் இல்லை. ஆமாம். எம்.டி.அறைக்குப் போனீர்களா?"

"உங்கள் எம்.டி.எப்படிப்பட்டவர்?"

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?"

"அவரைப்பற்றித் தெரிந்து கொள்ளலாமே என்றுதான்..."

"அவரைப் பார்த்தீர்களல்லவா..? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"எதுவுமே சொல்லத் தெரியவில்லையே..."

"நாளாக நாளாக நீங்களே புரிந்துகொள்வீர்கள். ஆமாம். உங்களிடம் என்ன சொன்னார்?"

"வாழ்த்துக்கள் சொன்னார். நன்றாக வேலையைப் பார்க்கச் சொன்னார்...."

"வழக்கமாய் எல்லோர்க்கும் சொல்லத்தான் செய்வார். ஆனாலும் உங்கள் மீது எம்.டி.க்கு சற்று அதிக நல்லெண்ணம்தான்..."

"எதை வைத்துச் சொல்கிறீர்கள்?"

"இன்டர்வியூ நடந்து கொண்டிருக்கும் போதே உங்களுக்கு ஆர்டர் டைப் பண்ண என்னிடம்தானே வந்தது? இதுவரை எம்.டி யாருக்கும் இவ்வளவு கரிசனத்தோடு உத்தரவு தந்ததில்லை. எனக்கொரு சந்தேகம்..."

"என்ன?"

"நிங்கள் எம்.டிக்கு உறவா?"

"நோ..........நோ! இல்லை!"

"ஏற்கனவே பழக்கமா?"

இல்லை".

"அப்படீன்னா, உங்கள் மேல் இவ்வளவு அக்கறை ஏன் வருகிறது?" பென்சிலை முன் நெற்றியில் தட்டித்தட்டி யோசித்தாள்.

சாவித்திரிக்கு நிலைமை புரிந்தது. இவளிடம் இன்னும் கொஞ்சம் வாயைக் கொடுத்தால் வம்பில் கொண்டுதான் விடுவாள் என்பதும், நாமாகப் பேச்சுக் கொடுக்கபோய் அது வீணான கற்பனைகளை இவள் மத்தியிலும், இவள் மூலம் மற்றவர்களிடமும் வளர்க்க ஆரம்பித்துவிடும் என்றும் புரிந்தது.

பேச்சை மாற்றினாள்.

"எனக்கு என்ன வேலை என்று யார் சொல்ல வேண்டும்?"

"மேனேஜர் உங்களுக்காகத்தான் காத்திருக்கின்றார். உங்கள் வேலையை அவர்தான் தருவார். நீங்கள் வந்ததும் அவரைப் பார்க்கச் சொன்னார்..."

"தாங்க்ஸ்..." எழுந்தாள்.

மேனேஜர் மிகவும் நல்லவர். இனிமையாகவும், எளிமையாகவும் பேசினார். சாவித்திரியின் பணியை அவளுக்கு விளக்கினார். ஏற்கனவே அவளின் பழைய அலுவலகத்தில் செய்து வந்திருந்த அதே அக்கௌண்ட்ஸ்தான் என்பதால் அவரிடம் தன்னால் அதைப்பார்த்துக்கொள்ள முடியும் என்று சொல்லிவிட்டு இருக்கைக்குத் திரும்ப உத்தரவு கேட்டாள்.

"மிஸஸ் சாவித்திரி..."

"என்ன சார்?"

"எம்.டி.உங்களுக்கு இதுவரை யாருக்குமில்லாத படி எல்லாவற்றிலும் ஃபெஸ்ட் சான்ஸ் தருகிறார். அவரின் நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் காப்பாற்றுவீர்கள் என்று நம்புகிறேன். விஷ் யு ஆல் த பெஸ்ட்!"

"நன்றி. வரட்டுமா சார்?"

"நல்லது"

தன் இருக்கைக்குத் திரும்பினாள்.

லெட்ஜரைப் புரட்டினாள். அதில் ஆழ்ந்து போனாள். சாயங்காலப் பொழுதுதான் எழுந்தாள் சாவித்திரி.

பியூன் வந்து நின்றான்.

"எம்.டி.உங்களைக் கூப்பிடுகிறார் மேடம்.."

"சரி. போங்கள்.. நான் வருகிறேன்."

அவன் போய்விட்டான்.

நெஞ்சு படபடத்தது அவளுக்கு. "இந்த எம்.டி. எப்படிப்பட்டவர்...? ஏன் என்னை மட்டும் அழைக்கிறார்...?" மனம் அலைக்கழித்தது.. ரகுவரனின் கடிதம் மனதில் வந்தது.

சட்டெனத் தலையை உலுக்கிக் கொண்டாள்.

"துரோகி ... துரோகி...நீ என்ன எழுதியிருந்தாய்...? நான் தற்கொலை செய்துகொள்ளவேண்டும் என்றா? அதுவும் எப்படி...?கசங்கி... வாசமிழந்து.... அல்லல் பட்டுத்தானே...? பார்க்கிறேனடா... அதையும் நான் பார்க்கிறேன்..." மனதிற்குள் சங்கல்பித்துக் கொண்டு எம்.டி.அறை நோக்கி நடந்து போனாள்.

எம்.டி.யின் ஏ.சி. ரூம் கதவை மெல்லத் தட்டினாள்.

"எஸ்....கமின்..."

உள்ளே போனாள். கரம் குவித்தாள்.

"வாருங்கள் சாவித்திரி. உட்காருங்கள்..."

"நோ! தாங்க்யூ சார்... நான் நிற்கிறேன்..."

"பரவாயில்லை.... உட்காருங்கள்." கட்டாயப்படுத்தினார்.

உட்கார்ந்தாள்.

"உங்கள் கணவர் இப்பொழுது எங்கே?"

நேராகத் தன் குடும்ப விஷயத்திற்குள் தடங்கலேயில்லாமல் நுழைந்துவிட்டாரே இந்த மனிதர் என்பதில் அதிர்ச்சிதான். சமாளித்துக்கொண்டாள்.

"..................."

"பதில் சொல்ல வேண்டாமென்று தோன்றினால் சொல்ல வேண்டாம்."

"எங்கோ... டெல்லி போயிருப்பதாய்க் கேள்வி. நிச்சயமாய் எனக்குத் தெரியாது..." தலை கவிழ்ந்தவாக்கில் சொன்னாள் சாவித்திரி,

"த்சொ...த்சொ..."

.................

"உங்களைப் பார்த்தபோதே நினைத்தேன்."

"என்ன நினைத்தீர்கள்?"

"எந்த மனிதன் உங்களை விட்டுவிட்டுப் போனானோ அவன்மேல் எத்தனை நம்பிக்கை... அன்பு.. நேசம் வைத்திருந்தால் பார்த்துக் கொண்டிருந்த வேலையை உதறிவிட்டு வந்திருப்பீர்கள்...? உங்களுக்கு இந்த வேலை தருவதனால் உங்களுக்கு ஒரு பாதுகாப்பு... நிற்க ஒரு இடம்,... ஒதுக்கிவிட்டு ஓடினவன் பொறாமைப்படும்படியாய் வாழ்ந்து காட்ட வாய்ப்பு தந்தாக வேண்டும் என்ற நல்லெண்ணம் எனக்குள்.."

"சார்...."

"என்னம்மா?"

"நீங்க நினைத்ததெல்லாம் சரிதான் சார்! உங்கள் உதவிக்கு நான் ரொம்ப கடமைப்பட்டிருக்கிறேன் சார். சார்....."

"சொல்லுங்கள் சாவித்திரி..."

"நான் இந்த சென்னை வீதியில் அவமானப்பட்டு, அவஸ்தைப்பட்டு, கசங்கி மணம் மங்கி.. தற்கொலை செய்து இறந்து போவேனாம். அதை அவர்... அவன்! அந்த அயோக்கியனின் வெற்றி என் மரணத்திலேதான் அமையப் போகிறதாம். அவனை நான் ஜெயித்தாக வேண்டுமென்ற என் நியாய உணர்வுக்கு நீங்கள்தான் முதல் கோடு போட்ட உயர்ந்த மனிதர்! தாங்க்யூ ஸோ.. கைண்ட் ஆஃப்யூ!" நன்றிப் பெருக்குடன் சொன்னாள்.

"அடடே... என்னம்மா இது...? நான் உங்களுக்கு உதவினது உங்களுக்காக மட்டுமில்லை."

"பின்பு.............?!

"என் சுய நலத்திற்காகவும் தான்..."

"................"

"ஒரு போஸ்ட் கிராஜீயேஷன் முடித்து புரொபஷனல் கோர்சும் முடித்த உயர் கல்வியாளரை வைத்திருப்பதில்... அதுவும் வேலை அனுபவம் உள்ள உங்களை வேலைக்கு வைத்துக் கொள்வதில் எங்களுக்குத்தானேம்மா சௌகரியம்...?"

"தாங்க்யூ சார்..."

"இன்னொன்றையும் சொல்லிவிடலாமா?"

"என்ன அது? சொல்லுங்கள்...."

"எனக்கு வயது என்ன இருக்கலாம்...? சும்மா... ஒரு அபிப்பிராயம் சொல்லுங்களேன்..."

"நாற்பது...?"

"நான்கு வயது அதிகம் கடந்து விட்டிருக்கிறது. அதாது நாற்பத்து நான்கு..."

"உங்களைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை."

"தாங்க்ஸ். நான் இதுவரை கல்யாணமே செய்து கொள்ளாதவன். என் இளம் வயதில் வயிற்றிற்கில்லாமல் வாடி... வாலிபத்தில் உழைப்பு... உழைப்பு என உழைக்கவே நேரம் இல்லாமல் அலைந்து... பணம் வந்தபோது நாற்பதைத் தாண்டி.... தம்பியர் இருவரையும் படிக்கவைத்து ம்ம்......... இதுவரை திருமண நினைவே எழாத எனக்கு இப்பொழுதுதான் கல்யாண ஆசையே ஏற்பட்டிருக்கிறது. காரணம் தெரியுமா?

"சொல்லுங்கள்..."

"நீங்கள்தான்"

"சார்.....?!"

"பதறாதீர்கள் சாவித்திரி. என் எண்ணம் கொஞ்சம் வித்தியாசமானது. இதுவரை எழாத எண்ணம் எழுந்தது. அது கூட ஏனோதான் எழுந்தது. மனதில் பட்டதைச் சொல்லாமல் மறைத்தால் என் இதயம் தாங்காது. ஏன் என்றால் நான் ஒரு ஹார்ட் பேஷன்ட்! ஆமாம்... பணம் .... பவிசுவந்தபோதே இருதயத்தில் நோயும் வந்துவிட்டது." சிரித்தார். அவரின் முகத்தில் சற்றே பரபரப்பு தென்பட்டது.

மௌனமானாள் சாவித்திரி.

"சாவித்திரி..."

"................"

"என் மனதில் உள்ளதைக் கேட்கிறேன். ... ஒளிக்காமல் சொல்வீர்களா?"




ஸ்ரீ பாலாஜி
நாடார் திருமண தகவல் மையம்

நாடார் சமுதாயத்தின் கைராசியான திருமண தகவல் மையம்
எங்களிடம் குமரி மாவட்டம், நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர்

மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நாடார்களுக்கும் (இந்து, கிறிஸ்தவர்)
வட்டார பழக்கத்திற்கேற்ப வரன் பார்த்து தரப்படும்.

முகவரி: எண்:389, T.H.Road, (மெட்ரோ பில்லர் எண்-184),
திருவொற்றியூர், சென்னை-19.
ஒருமுறை பதிவு கட்டணம் ரூபாய்-3000 மட்டும்.
நகை ரொக்கத்திற்கு கமிஷன் கிடையாது.
நிறுவனர்- ஆர்.சத்தியவான், நாகர்கோவில்- 9444247847.
தொடர்பு எண்: 044-43508080, 7299989798, 9789848995.

# நாடார் சமூகப்பணியில் 40 ஆண்டுகள்

## தலைமைப்பண்பு மிக்க போரூர் வீ.ஆனந்தராஜ் நாடார்



கட்டைத் தொட்டியைச் சிறப்பாக நடத்திய வீரபாண்டிய நாடார் மதிநுட்பம் மிகுந்தவர், அக்காலத்தில் விரிவாக்கம் பெற்று வந்த சென்னையின் செல்வம் கொழிக்கும் தொழிலான ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டார். ராஜேஸ்வரி டிரேடர்ஸ் என்ற பெயரிலான அவரது ரியல் எஸ்டேட் நிறுவனம் சென்னையில் விருகம்பாக்கம், நெசப்பாக்கம், போரூர், கொளத்தூர், பெரம்பூர் பகுதிகளில் வீட்டு மனைகளை விற்பனை செய்தது. சென்னை நகரின் வளர்ச்சிக்குச் சிறந்த முறையில் பங்களிப்பு செய்த வீரபாண்டிய நாடார் தியாகராய நகர், பிரகாச முதலித் தெரு, கதவிலக்கம் 16இல் பங்களா கட்டி சிறப்பாக வாழ்ந்தார்.

காங்கிரசில் பொறுப்புகள்:-

பி.வீரபாண்டிய நாடார் கனகரத்தினம் (சிறுத்தண்டுநல்லூர்) தம்பதியருக்கு மகனாக 18.11.1960அன்று தியாகராயநகரில் பிறந்தவர் வீ.ஆனந்தராஜ், தி.நகர் ராமகிருஷ்ணா மிஷன் உயர்நிலைப்பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பை (எஸ்.எஸ்.எல்.சி) முடித்த ஆனந்தராஜ் இளம்வயதிலேயே ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டு வெற்றிகரமான தொழிலதிபர் ஆனால்

தந்தையின் வழியில் காமராஜரின் தொண்டராக காங்கிரஸ் பேரியக்கத்தில் இணைந்த ஆனந்தராஜ், 1986ஆம் ஆண்டில் போரூர் பகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஆனார். 1996ஆம் ஆண்டு மக்கள் தலைவர் ஜி.கே.மூப்பனார் தமிழ்மாநில காங்கிரசை ஆரம்பித்தபோது அதில் தன்னை இணைத்துக்கொண்டார். தற்போது தமிழ்மாநில காங்கிரசின் தலைவர்களில் ஒருவராகத் திகழும் ஆனந்தராஜ் தென்சென்னை மேற்கு மாவட்டப் பொருளாளராக உள்ளார்.

பொதுச்செயலாளர்:

நாடார் சமூகத்தின் மீது மிகுந்த பற்று கொண்ட ஆனந்தராஜ் இளம்வயதிலேயே போரூர் பகுதியில் தமிழ்நாடு நாடார் இளைஞர்பேரவையை உருவாக்கி, நாடார்களுக்குப் பிரச்சினைகள் ஏற்பட்ட போதெல்லாம் முன்னணியில் நின்று செயல்பட்டுக் கொண்டிருந்தார். அதன் மூலம் அப்பகுதியின் நாடார் சமூகக் காவலராகத் திகழ்ந்தார். அவரது துடிப்பான செயல்திறமையைக் கண்ட அப்போதைய போரூர் வட்டார நாடார் மகமை சங்கத் தலைவர் ஆர்.டி.மணி நாடார் சங்கத்துடன் இணைந்து செயல்படும் படிக்கேட்டுக் கொண்டார். அதன்படி 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு நாடார் இளைஞர் பேரவையை போரூர் வட்டார நாடார் மகமை சங்கத்துடன் இணைத்தார். அதைத் தொடர்ந்து போரூர் வட்டார நாடார் மகமை சங்க நிர்வாகம் அனுபவம் வாய்ந்த பெரியவர்களையும், ஆற்றல் மிக்க இளைஞர்களையும் கொண்டு அமைப்பாகப் பொலிவு பெற்றது. 1992ஆம் ஆண்டு ஆர்.டி.மணி நாடார் தலைவராகவும், வீ.ஆனந்தராஜ் பொதுச்செயலாளராகவும், ஏ.அன்பழகன் பொருளாளராகவும் பொறுப்பேற்றார்கள்.

போரூர் ராஜேஸ்வரி நகர் திருமண மண்டபம்:

ஆனந்தராஜின் தந்தை வீரபாண்டிய நாடாரிடமிருந்து வாங்கப்பட்ட காரம்பாக்கம், ராஜேஸ்வரி நகர் இடத்தில் திருமண மண்டபம் கட்ட முடிவு செய்யப்பட்டது. நான்கு ஆண்டுகள் சிரத்தையாகச் செயல்பட்டு, ஏலச்சீட்டுகள் நடத்தியும், நன்கொடை திரட்டியும் கல்யாண மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது. 19.3.2000அன்று மாலை 4 மணிக்கு நடந்த கோலாகலமான திறப்புவிழாவில் மாலை முரசு அதிபர் ராமச்சந்திர ஆதித்தன் கலந்து கொண்டு திருமண மண்டபத்தைத் திறந்து வைத்தார். அதன் பிறகு சங்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சி பெற்றது.

சாலவாக்கம் கூட்ரோட்டில் இரு திருமண மண்டபங்கள்:

கட்டுக்கோப்பான நிர்வாகத்தாலும், அனைவரையும் அரவணைக்கும் பண்பாலும், சீரிய சிந்தனையாலும், தோள் கொடுக்கும் துணைவர்களாக அமைந்த இதர நிர்வாகிகளாலும் போரூர் வட்டார நாடார் மகமைச் சங்கத்தை முன்னெடுத்துச்சென்ற ஆனந்தராஜ் சங்கத்தின் ஆண்டுவிழாகளை மிகச்சிறப்பாக நடத்தி அனைவரது பாராட்டுகளையும் பெற்றார். 2015ஆம் ஆண்டு செங்கல்பட்டு அருகில். சாலவாக்கம் கூட்ரோட்டில் 21000 சதுர அடி கட்டடத்துடன் கூடிய 55 சென்ட் நிலத்தை விலைக்கு வாங்கினார். நன்கொடை பெற்றும், உறுப்பினர்களிடமிருந்து கடன் பெற்றும். நண்பர்களிடம் இருந்து கடன் வாங்கியும், பெருமுயற்சி செய்து அந்த இடத்தை வாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டடத்தை புதுப்பித்து, நன்கு சீரமைத்து பெருந்தலைவர் காமராஜர் திருமண மாளிகை என்ற பெயரிலும், அன்னை சிவகாமி அரங்கம் என்ற பெயரிலும் இரு திருமண மண்டபங்களை உருவாக்கினார் அதன் திறப்பு விழா 10.7.2016 அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. பெருந்தலைவர் காமராஜர் திருமண மாளிகையை தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்புத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா திறந்து வைத்தார். அன்னை சிவகாமி அரங்கத்தை மயிலை பி.சந்திரசேகர் திறந்து வைத்தார்.

சங்கத்தலைவர்:

2020 ஆம் ஆண்டு ஆனந்தராஜ் போரூர் வட்டார நாடார் மகமை சங்கத்தின் தலைவரானார். ஆர்.டி.ராஜீ பொதுச்செயலாளராகவும், ஏ.குணசேகர் பொருளாளராகவும் பொறுப்பேற்றனர்.

சாலவாக்கம் திருமண மண்டபங்களுக்கு வாங்கிய கடன்களை நிர்வாகம் திருப்பிச் செலுத்திய பொறுப்புணர்ச்சி மிகவும் பாராட்டத்தக்கது. 31.7.2022 அன்று போரூர் வட்டார நாடார் மகமை சங்கத்தின் 47ஆவது வட்டார நாடார் மகமை சங்கத்தின் 47ஆவது ஆண்டுவிழா மிகச்சிறப்பாக கொண்டாடினார் ஆனந்தராஜ். அப்போது செங்கல்பட்டு சாலவாக்கத்தில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் திருமண மாளிகை மற்றும் அன்னை சிவகாமி அரங்கம் ஆகியவற்றிற்கு கடன் உதவித்தொகை மற்றும் நன்கொடை வழங்கியவர்களுக்கு குலுக்கல் மூலம் முதல் பரிசகாக 24 கிராம் தங்க நகை, மூன்றாம் பரிசாக ஹீரோஸ்பிளண்டர் மோட்டர் சைக்கிள், நான்காம் பரிசாக டிவிஎஸ் ஸ்கூட்டி, ஐந்தாம் பரிசாக 12 கிராம் தங்கநகை போன்ற விலை உயர்ந்த பரிசுகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் இல்லத்தரசிகள் ஐந்து பேருக்கு தங்க நாணயங்கள் வழங்கப்பட்டன. அனைவருக்கும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன.

இதர பொறுப்புகள்:

தகுதி வாய்ந்த ஒருவருக்கு பல பொறுப்புகள் தேடி வருவது இயல்பான ஒன்று. திரு.வீ.ஆனந்தராஜ் நெல்லை தூத்துக்குடி நாடார் மகமை பரிபாலன சங்கத்தின் கமிட்டி உறுப்பினராக உள்ளார். தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில துணைத்தலைவராக, தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜாவின் தோளோடு தோள் நின்று பணியாற்றுகிறார். போரூரில் உள்ள நியூ காலனி குடியிருப்போர் நலச்சங்கத் தலைவராக உள்ளார்.

குடும்பம்:

காயாமொழி கீழவீடு சுந்தரபாண்டிய ஆதித்தன் அவர்களின் மகள் திருமதி.அமிர்தலட்சுமி அம்மாளை இல்லத்தரசியாகப் பெற்றுள்ள ஆனந்தராஜ் அவர்களுக்கு பிரதீப். என்ற மகனும், ஜெயசங்கரி, நந்தினி என்ற இரு மகள்களும் மக்கட்செல்வங்கள்.

ஓர் உன்னதமான தலைவன் நல்ல நண்பர்களையும், உறுதுணையாக செயலாற்றும் தளபதிகளையும் உடையவன் என்ற பொன்மொழிக்கு உதாரணமாக ஆனந்தராஜ் சிறந்த நண்பர்களையும், சக நிர்வாகிகளையும் பெற்றிருக்கிறார் என்பதே அவரது சிறப்பு.

திருமணப்பட்டு
ஜவுளிகளுக்கு.........
ராஜ்மஹால்
வெங்கலக்கடைத் தெரு,
மதுரை-1. போன்: 2622647, 2666666.
தொட்டுத் தொடரும் ஒரு
பட்டுப் பாரம்பாரியம்.

# உன் சிந்தனை உனது வெற்றி

- முனைவர் சா.தா.நோவா **செல்:9443303456,**

**பத்துக்கட்டளை அல்ல பத்து விதிகள்**



இலக்குகளை அமைத்துக் கொண்டு அவற்றை மையமாக்கி, வாழ்க்கையை சூழலவிட்டு வெற்றி கண்டவர் ஜான் கோடார்ட் அதைப்போல நீங்களும் இலக்குகளை உருவாக்கி வாழ்வில் வெற்றி கொள்ளுங்கள்.

'அரிதரிது மானிடராய் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார்.

'மனிதப்பிறப்பு கிடைத்தற்குரிய அமிழ்தம்' என்றார் திருத்தக்கதேவர்.

இத்தகைய கிடைத்தற்குரிய மனிதப்பிறவியை, நீ வீணாக கழித்து விடலாமா?

'நல்லதோர் வீணை செய்தே அதனை நலக்கெட புழுதியில் எறிவதுண்டோ?

இலட்சிய வாழ்வு வாழ வேண்டாமா?

வரலாற்றில் நமது சாதனை முத்திரையை பதிக்க வேண்டாமா?

நீங்கள் எந்த இலட்சியத்தை தேர்ந்தெடுக்க விரும்புகிறீர்கள்?

சமூகத் தொண்டில் தலை சிறந்து விளங்க விருப்பமா? அரசியல் வித்தகராக விருப்பமா? சிறந்த தளபதி ஆக விருப்பமா? போர் வீரராக விருப்பமா? பெரிய வணிகராகி கோடீஸ்வரராக விருப்பமா? தலைசிறந்த மருத்துவராக விருப்பமா?

எந்த துறையில் உங்களுக்கு நாட்டம் இருக்கிறதோ அதைப் பற்றியே சிந்திக்க வேண்டும். அந்தத் துறையில் வெற்றி பெற்றோரது செயல்பாடுகளை கூர்ந்து கவனிக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் படிக்க வேண்டும். அதுதான் இரகசியம்.

**முடிவெடுத்தபின் குழப்பம் வேண்டாம்**

நீங்கள் மேற்கொள்ளவிருக்கும் துறையில் உள்ள சிக்கல்களை நுட்பமாக அறிந்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் வாழ்க்கையில் இலக்கை அடைந்து வெற்றி பெறலாம்.

உலகப்பிரசித்தி பெற்ற சேவைச் சிகரம் அன்னை தெரசா போல் சமூகத் தொண்டாற்றி எல்லையற்ற அன்பும் சகிப்புத் தன்மையும் கொண்டு இலங்க வேண்டும். அது மட்டுமல்ல பொறுமையும் தியாக மனப்பான்மையும் வேண்டும். இறை அன்பும் பக்தியும் வேண்டும்.

தொழுநோய்ச் சிறுவனை மடியில் கிடத்திக் கொண்டு, அவனது விரல் நகங்களைத் தம் கையால் கொஞ்சம் கொஞசமாகக் கிள்ளியெறிந்து கைக்கு மருந்திடுவாராம். இத்தகைய தொண்டுள்ளம் கோடியில் ஒருவருக்காவது வருமா? என்பது சந்தேகம் தானே!

அவரது தொண்டுள்ளத்தை நேரில் கண்ட ஓர் அறிஞர் 'என் கண் எதிரே இரண்டாவது இயேசுநாதரைப் பார்த்தேன்' என வியந்து பாராட்டியுள்ளார். ஆனால் அந்த இயேசுநாதரே தெரஸா வழிபட்ட தெய்வமான அருள்நாதர்.

அன்னை தெரசா தமக்குக் கிடைத்த விருதுகளையும், பரிசுப் பொருட்களையும், ஏழைச் சிறுவர்களுக்கே அளித்து மகிழ்ந்தார். தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஏழை மக்களுக்கே அர்ப்பணித்து விட்ட அகிலம் புகழும் அன்புத்தாய்.

நாட்டுக்காக தூக்குமேடை ஏறியவன் பகத்சிங். என் நாடு என் தேசம் என முழுவதுமாய் தன் வாழ்க்கையை இத்தேசத்திற்காக அர்ப்பணித்தவன். இப்படி நாட்டுக்காக பாடுபட்ட பலரை குறிப்பிட முடியும்.

இலட்சியத்தை இடையறாது எண்ணித் திண்மையுடன் செயல்படுவோமாயின் எண்ணியதை அடைதல் எளிது.

'உள்ளிய எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப்பெறின்'

என்ற வள்ளுவரின் வாக்கின்படி இலட்சியம் மிக உயர்ந்ததாக இருக்க வேண்டும்.

இலட்சியம் உயர்ந்ததாக இல்லையென்றால் நம்பிக்கை, விடாமுயற்சி, உற்சாகம், ஆகிய இவை அனைத்தும் செயலிழந்துவிடும்.

சர்வாதிகாரி ஹிட்லர் உலகநாடுகள் அனைத்தையும் தனது காலடியில் வீழ்த்தி, இந்த உலகையே நடுங்கச் செய்ய வேண்டும் என்று நினைத்துச் செயல்பட்டான்.

மக்களில் ஆண், பெண், குழந்தைகள் என்றுகூடப் பாராமல் குண்டுமழை பொழிந்து மக்களைக் கொன்று குவித்தவன் அவனது இலட்சியம் தவறானதாக இருந்ததால் அவனின் ஆசை ஈடேறவில்லை.

ஆகவே ஒருவனின் இலட்சியம் உயர்ந்ததாக இருந்தால் தான் அவன்தன் வாழ்வின் உன்னத இலக்கை அடைய முடியும். (தொடரும்)

# தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!!

**காலம் கனிந்தது! கஷ்டம் தீர்ந்தது!!**

நாங்கள் கஷ்டப்படுகிறோம் என்பதை மற்றவர்களிடம் கூறவோ, அதன்மூலம் அனுதாபம் தேடிக்கொள்ளவோ ஒருபோதும் நாங்கள் நினைத்ததில்லை. எங்கள் எண்ணங்களை எங்கேயும் சிதறவிடாமல் மனதை ஒருநிலைப்படுத்தி கடுமையாக உழைத்தோம். உழைப்பிற்கு ஏற்ற பலன் நிச்சயம் கிடைக்கும் என்று நம்பினோம். நாங்கள் கண்ணீரும்விட்டதில்லை. கவலையும்பட்டதில்லை. எங்களுக்கான இலக்கினை நிர்ணயித்துக்கொண்டு அதை நோக்கி ஓடிக்கொண்டே இருந்தோம். நின்று பார்க்க, திரும்பிப்பார்க்க, எங்கள் பின்னால் யார்-யார் ஓடிவருகிறார்கள் என்பதை எல்லாம் கவனிக்க எங்களுக்கு நேரமில்லை. ஓட்டப் (வாழ்க்கை) பந்தயத்தில் ஜெயிக்க வேண்டும் என்ற வெறி மட்டுமே எங்களிடம் இருந்தது.

எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டபோதும் எங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாததற்கு ஒரே காரணம், எங்கள் இருவர் குணாதிசயங்களும் ஒரே மாதிரி இருந்ததுதான். அவர் மனதில் என்ன இருக்கிறது என்று எனக்கு தெரியும். என் மனதில் இருப்பதும் அவருக்கு புரியும். அதனால் ஒருவர் நினைப்பதை இன்னொருவர் செய்து முடித்துவிடுவோம். கடவுள் எங்கள் மனதில் இருந்து கொண்டு, எங்களை ஒரே மாதிரி வழி நடத்தினார். கடவுளுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.




தஞ்சாவூரில் இருந்து நான் சென்னை வந்த புதிதில், நான் இங்குள்ள பஸ்சையும், அதில் ஏறும் கூட்டத்தையும் பார்த்து பிரமித்தது உண்டு. அதுவரை பஸ்சில் தனியாக பயணித்த அனுபவமில்லாத நான், 'சென்னை பஸ்களில் ஏறி பயணம் செய்யும் நிலை வந்துவிடுமோ?' என்று பயந்ததும் உண்டு. ஆனால் குழந்தைகளுக்கு 2, 3, வயதாக இருந்தபோது நானும் அவர்களை தூக்கிக்கொண்டு அண்ணாநகரில் இருந்து புரசைவாக்கத்திற்கு அதே பஸ்களில் பயணம் செய்தேன்.

அங்கு போய் மாமியாரை பார்த்துவிட்டு பஸ்சில் திரும்பி வருவோம். முதல் பயணத்தில்தான் அந்த பிரமிப்பும் தவிப்பும் இருந்தது. ஒருசில முறை பயணம் செய்த பின்பு அதுவும் சிரமமாக தெரியவில்லை. நாளடைவில் பஸ் பயணம் பழக்கமாகிவிட்டது.

# தொழில் மேதை.ஏ.டி.பத்மசிங் ஐசக் வெற்றிப் படிகள்



**உணவு உலகத்து அதிசயங்களும்... ஆச்சரியங்களும்...**

'வித்தியாசமான சிந்தனைகொண்ட தொழிலதிபர்களால் தான் தொடர்ந்து வெற்றிவாகை சூட முடியும்' என்கிறார்களே! அது என்ன வித்தியாசமான சிந்தனை! அதற்கு ஒரு உதாரணம் சொல்லுங்களேன்?

'பாட்டா' செருப்பு உங்களுக்கு தெரியும்தானே! அந்த நிறுவனத்தின் தலைவர் தாமஸ் பாட்டா 1929-ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்தார். அப்போது இந்தியாவில் செருப்பு அணிபவர்கள் மிக மிக குறைவு. அவர், மும்பையில் உள்ள பிரபலமான நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கினார். அங்கு பணிபுரிந்த 'வெயிட்டர்கள்' வெறுங்காலோடு நடந்து வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதை பார்த்த தாமஸ் பாட்டா, தான் 'சாம்பிள்' காட்ட வைத்திருந்த காலணிகளை அவர்களுக்கு கொடுத்து அணிந்துகொள்ள சொன்னார்.

அங்கிருந்து இந்தியா முழுவதையும் சுற்றிப் பார்க்க கிளம்பிய பாட்டா, அடுத்து கனடா செல்வதற்கு கப்பல் ஏற மீண்டும் அவரிடம் காலணிகளை பெற்ற வெயிட்டர்கள் மீண்டும் வெறுங்காலுடன் நடந்துகொண்டிருப்பதை பார்த்து விசாரித்தார்.

அவர்கள் 'நல்ல விலைக்கு காலணிகளை கேட்டார்கள். விற்றுவிட்டோம்' என்றார்கள். சாதாரண சிந்தனையாளராக அவர் இருந்திருந்தால், 'இப்படி பண்ணிட்டீங்களேப்பா!' என்று மனம் நொந்து பேசியிருப்பார். அவரோ மாற்றி யோசித்தார். 'இந்தியாவில் காலணிகளுக்கும், ஷூக்களுக்கும் நல்ல மார்க்கெட் இருக்கிறது' என்பதை வெயிட்டர்கள் மூலம் எளிதாக புரிந்துகொண்டார். அடுத்து இந்தியாவுக்கு வந்து பாட்டா ஷோரூம்களை உருவாக்கினார். இதுதான் தொழிலதிபர்களின் வித்தியாசமான சிந்தனை! - ஏ.டி.பத்மசிங் ஐசக் (தொடரும்)




கீழ ஈரால் அருள்மிகு காமாட்சி அம்மன் துணை

எம்.எஸ்.முத்துவேல் நாடார்,
போன்:9443742889. 7708701159.

**சரவணன் ரியல் ஏஜென்சிஸ்**

காமாட்சி ஸ்டோர்ஸ்

**தலைவர் மாமல்லபுரம் வட்டார நாடார் சங்கம்**



நிலம் வாங்க விற்க லேஅவுட் புரோமோட்டர் எண்:118/1, டி.கே.எம்.ரோடு, மாமல்லபுரம், பின்கோடு-603104.



N.R.N.Group

போன்:044-26790587

**பிரியா டிப்போ**

**கீத்து, மூங்கில், சவுக்கு, கட்டை, கரி, கல்போஸ்ட், தார்சீட், செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் கிடைக்கும்.**

2/166, மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு, எம்.எஸ்.எஸ்.நகர், காட்டுப்பாக்கம், சென்னை-56.






# GP கோபால் பிளாஸ்டிக்



S.இராஜகோபால்

**Dealers in :** எல்லாவகையான பிளாஸ்டிக் மெட்டிரியல் கிடைக்கும்
9, அரங்கப்பன்தெரு, (ஸ்ரீனிவாஸ்தியேட்டர்அருகில்), மேற்கு மாம்பலம்,சென்னை-33

## RS பிளாஸ்டிக்

உரிமையாளர்:S.ராஜகோபால், S.ஜெயராஜ்
நெ.16, உய்யாலிஅம்மன்கோயில்தெரு,திருநீர்மலை,சென்னை-44.
Cell:9444037465, 9840446688 Ph: 24891192. 24748148.



S.ஜெயராஜ்



# ஸ்ரீ சரவணா ஸ்டோர்ஸ்

**சூப்பர் மார்க்கெட்**

**ஈகை வியாபாரிகள் நல சங்கம் வி.சரவணராஜ் தலைவர்**
**செல்9445171819, 044-22253484.**
2/33, அம்பாள் நகர் மெயின் ரோடு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை-32.





N.R.P.செந்தில் நாடார், செல்:9841038856,

# N.R. பட்டுராஜன் டிரேடர்ஸ்

எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி, தள ஓடு, கடப்பா கல், சுண்ணாம்பு, M.Sand, P.Sand. கிடைக்கும். **Email: senthilnrp@gmail.com**

4, ஆற்காட் ரோடு, கணபதி நகர், போரூர், சென்னை-116.

# வெற்றிப்படிக்கட்டு



வசந்த் & கோ H.வசந்தகுமார்M.A., Ex.MP (Member of Parliament)

## குப்பையா கோபுரமா நிர்ணயிப்பது எது?

புத்தர் சொன்ன பொன்மொழிகளில் ஒரு உயர்ந்த தத்துவம் அடங்கி இருக்கும். அப்படி அவர் சொன்ன ஒரு விஷயம் இது, யார் கெட்டவன்? யார் நல்லவன்? என்பதற்குப் புத்தர் சொல்லும் கருத்து "பிறர் பற்றிய அக்கறை எதுவும் இல்லாதவன் கெட்டவன். பிறரைத் தன் நன்மைக்காக பயன்படுத்திக் கொண்டு பிறருக்கு மதிப்பும், மரியாதையும் தர மறுப்பவன் கெட்டவன்.

சிலர் ஒவ்வொருவரையும் தான் எப்படி பயன்படுத்திக் கொள்வது என்பதை மட்டுமே சிந்திக்கிறார்கள். இவர்கள் கெட்டவர்கள். ஆனால் பிறரைப் பற்றி அக்கறை உள்ளவன் தனக்குத்தரும் அதே முக்கியத்துவத்தைப் பிறருக்கும் தருகிறவன். தன் நன்மைக்கு மட்டும் பிறரைப் பயன்படுத்தாமல் பிறருக்குத் தன்னால் என்ன பயன் என்று நினைப்பவன் எவனோ அவன் நல்லவன். இது ஒரு வகையில் Give and Take Policy மாதிரிதான் நடைமுறை வாழ்க்கையில் வெற்றிக்கான வழிமுறைகளில் இதுவும் ஒன்று.

நல்லது, கெட்டது கலந்துதான் இருக்கும். அதில் சூழ்நிலைக்கு ஏற்ப நமது செயல்பாடுகளில் மாற்றம் செய்தால்தான் வெற்றி பெறமுடியும். மருந்துக்கடையில் பேதியாவதற்கு மருந்து இருக்கும். பேதியாவதை நிறுத்துவதற்கும் மருந்து இருக்கும். இதில் எது நல்லது, எது கெட்டது என்பதைச் சூழ்நிலைதான் நிர்ணயிக்கும். அதனால்தான் சூழ்நிலைக்கு ஏற்ப எது நமக்குத் தேவையோ அதைப் பயன்படுத்திச் செயல்படுவதுதான் புத்திசாலித்தனம். இதில் வித்தியாசம் இல்லை. எல்லாமே சமம்தான் என்று நாம் நினைத்தால் அதுவும் தவறு.

எல்லாமே சமமாகிவிடாது. அதிலும் சில விஷயங்களை நுட்பமாகப் பார்த்தால்தான் அதிலுள்ள சூட்சுமம் புரியும். 'சமம்' என்று சொன்னால் அதிலும் சில விஷயங்கள் மாறுபடும், அதற்கும் ஒரு விளக்கம் உண்டு. "ஒருவரைத் தாழ்த்திப் பேசக்கூடாது. ஆனால் உயர்த்திப் பேசலாம்! அதற்கும் சில காரணங்கள் உண்டு. "1000 ரூபாய் நோட்டைப் பார்த்து பிட் நோட்டீஸ் பேப்பர் வயிற்றெரிச்சலுடன் சொல்லியது. ரொம்ப அலட்டிக்கொள்ளாதே நீயும், நானும் சமம் தான். நீயும் காகிதம் நானும் காகிதம். அப்படி இருக்க நீ மட்டும் என்னைவிட எப்படி உயர்வு?" என்று கேட்டது. அதற்கு 1000 ரூபாய் நோட்டு "எங்கள் வாழ்நாளில் நாங்கள் குப்பைத்தொட்டியையே பார்த்ததில்லை. ஆனால் மற்றவர்களுக்குப் பயன்படும் வகையில் எங்களின் பணி எங்கள் மதிப்பை உயர்த்துகிறது. அதுதான் உனக்கும், எனக்கும் உள்ள வித்தியாசம்.

இருவரின் மூலமும் ஒன்று தான் ஆனால் கிழியும் வரை எங்களது பணி அடுத்தவரின் நலனுக்கும், பயன்பாட்டுக்குமே என்பதால், நாங்கள் கீழே விழுந்தாலும் மற்றவர்கள் உடனே எங்களை எடுத்துப் பாதுகாக்கின்றனர்" என்று 1000 ரூபாய் நோட்டு தன்னிலை விளக்கம் தர பிட் நோட்டீஸ் அதற்கு மறுப்புத் தெரிவிக்காமல் குப்பையாய்க் கீழே விழுந்தது.

இதுதான் மனித வாழ்க்கையின் அடிப்படைச் சிந்தனை. மற்றவர்கள் நலனில் அக்கறை காட்டினால். நம் நலனில் மற்றவர்கள் அக்கறை காட்டுவார்கள். உயர்ந்த சிந்தனை வெற்றிக்கு வழிவகுக்கும்.




# தமிழக வரலாற்றில் எழுச்சியும் வீழ்ச்சியும்

**சேரமான் கணைக்கால் இரும்பொறை**

இத்துணைப் பேராற்றல் படைத்த இரும்பொறை செங்கணானொடு செய்த போரில் வெற்றி பெறானாயினான் சேர நாட்டுப்புகுந்து சேரமான் கணைக்கால் இரும்பொறையை வென்ற வெற்றி காரணமாக, அவன் அந்நாட்டில் முதற்கண் கைப்பற்றிய பகுதி "செங்கணான் சேரி" என்ற பெயர் பெற்றது போலும்! இப்போது அது செங்கணாசேரி (சங்கணாச்சேரி) என்ற தாலுகாவின் தலைநகராய் விளங்குகிறது. பிற்காலத்தே முதல் இராசராசசோழன் சேர நாட்டு வள்ளுவ நாட்டிற் பெற்ற வெற்றி காரணமாக முட்டம் என்னும் ஊரின் பெயரை மாற்றி, மும்முடிச் சோழநல்லூர் எனத் தன் பெயரிட்ட செய்தியை நோக்குமிடத்து தான் வென்ற கழுமலத்துக்குச் செங்கணான் சேரி என்று தன் பெயரையே இட்டிருப்பான் என நினைத்தற்கு இடமுண்டு. குட்ட நாட்டின் வட பகுதியிலுள்ள தொண்டி நகர்க்கண் பொய்கையார் என்றொரு நல்லிசைப்புலவர் வாழ்ந்தார். அவர் சேரமான் பால் பேரன்புடையவர். சேரமான் சோழன் செங்கணானுக்குத் தோற்றுக்குடவாயிற் கோட்டத்துச் சிறையிலுள்ளான் என்பது பொய்கையார்க்குத் தெரிந்தது.

அவர் மனம் எய்திய துன்பத்துக்கு எல்லை இல்லை. அவர் பண்டு கரிகாலனொடு நிகழ்ந்த போரிற் புறப்புண் பட்டதற்கு நாணி வடக்கிலிருந்து உயிர் துறந்த சேரலாதன் வழித்தோன்றலாதலால், சேரமான் கணைக்காலிரும்பொறை என்னாவனோ என அஞ்சி அமைந்தார். மிக விரைந்து சோழநாடு அடைந்து செங்கணானைக் கண்டார். புலவர் பெருமான் வரவைக்கண்டசோழன் மிக்க சிறப்புடன் வரவேற்று அவர் மனம் மகிழத்தகுவனவற்றைச் செய்தான். அவர் செங்கணான் சேரநாட்டுக் கழுமலத்திற் செய்த போரை சிறப்பித்துக் களவழி என்னும் நாற்பது, பாட்டுக்கொண்ட நூலைச் செய்து சோழன் திருமுன் பாடினார். அமிழ்தம் பொழியும் அவரது தமிழ்நூல் வேந்தர் பெருமானுக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது. அவன் அவர்க்குக் களிறும் மாவும் பொன்னும் பொருளும் பரிசிலாக நல்கினான்.

ஆனால் பொய்கையார் செங்கணானைத் தொழுது "வேந்தே பொன்னும் பொருளுமாகிய பரிசில் வேண்டி வந்தேமில்லை; யாம் வேண்டுவது வேறு பரிசில்; அரசு காவலின்றி அலமரும் சேரநாட்டுக்கு உரிய வேந்தனைப் பெறுதலின், யாம் விழையும் பேறு வேறு இல்லை. மக்களுயிரின் இன்பவாழ்வுக்கு, நிலைமக்களாகிய நாட்டை அவர்கள் தங்கள் உயிரிழந்து வருந்தும் கொலைக்களமாக்கும் வல்லரசு ஒழிதல் வேண்டும். அதற்கு ஆவண செய்வதேயாம் பெறும் பரிசில். இதனைக் கருப்பொருளாக எமது இக்கள வழிநூல்; அந்த நாட்டிற்கு உரியவனை அரசனாக்குவதே யாம் வேண்டும் பரிசில்" என்றார் செங்கணன். பொய்கையாரது புலமை நலம் கண்டு பேருவகை கொண்டு தன் அரசியற் சுற்றத்தாரை விடுத்துச் சேரமானைச் சிறைவீடு செய்து, மீள அவனைச் சேரமானாக்கி வருமாறு பனித்தப் பொய்கையாருக்கும் மேலும் பல பரிசில் நல்கி விடுத்தான்.

தொகுப்பு:கீழக்கடை ந.ஆ.அ.மா.ஜெயபாஸ்கரன். து.அருணாசலபுரம்.

செங்கணானது சிறை வீட்டாணை உறையூரிலிருந்து குடவாயிற்கோட்டம் சென்று சேருமுன் அங்கே வேறொரு செய்தி நிகழ்ந்தது. சிறையிலிருந்த சேரமான் சிறை காவலரைச் சிறிது நீர்கொணர்ந்து தருமாறு பணித்தான். அவர்கள் அவனது ஆணை மதியாது சிறிது தாழ்த்திக் கொணர்ந்து தந்தார்கள். மானமிக்க வேந்தனாகிய சேரமானுக்கு அவர்கள் செயல் பெரு வருத்தத்தையுண்டு பண்ணிற்று. அவன் நெஞ்சு சுழலத் தொடங்கிற்று. பற்பல எண்ணங்கள் தோன்றின; வீரமும் மானமும் வீறு கொண்டெழுந்தன. "குழவி இறப்பினும் ஊன் தடி பிறந்தாலும், இவை வாள் வாய்ப்பட்டு இறந்தாலன்றி மறக்குடி பிறந்தார்க்கு மாண்பு அன்று, என்று கருதி எம்மனோர் அவற்றையும் வாளாற் போழ்ந்து அடக்கம் செய்வர். அவர் வயிற்றிற் பிறந்தயான் நாய் போலப் பகைவர் சங்கிலியாற் கட்டுண்டு சிறையிற் கிடப்பது தீது; அதன் மேலும், தம்மை மதியாத பகைவர் பால் தமது வயிற்றுத்தீயை தணித்தற்பொருட்டு உண்ணீர் இரந்துண்ணுமாறு மக்களைப் பெறுவாரோ, எம் பெற்றோர்? பெறார்காண்! என்று எண்ணினான். அப்படியே அஃதொரு பாட்டாய் வெளிவந்தது. அதனை ஒரு ஓலை நறுக்கில் எழுதிப்படித்தான்; கண்களில் நீர் துளித்தது; உடல் ஒருபால் துடித்தது. உயிரும் உடலின் நீங்கி ஒளித்தது. சிறிது போதிற்கெல்லாம் அரசியற் சுற்றத்தாரும் பொய்கையாரும் வந்தனர்; உயிர் நீங்கிய சேரமான் உறங்குவான் போலக்கிடந்தான். வந்தோர் அனைவரும் கண்டு கரை செய்ய அரியதொரு பெருந்துன்பக்கடலில் மூழ்கிக் கையற்றனர். (தொடரும்)




S.ATHISAYARAJ.B.A.,B.L.,P.G.DL.A

Correspondent

Koilpillai Mat.Hr.sec.School

65. Rayala Nagar, 2nd Main Road, Ramapuram, Chennai-89.

Ph:044-22492489. 22492286, Cell:9840715246.

Email:samuelathisayaraj@gmail.com

# நாடார் சமூகத்தின் போராட்ட வரலாறு

## 7.போர் பயிற்சிக் கலையில் நாடார்கள்

தொகுப்பு ஆசிரியர்:சு.செந்தமிழ்ச் செல்வன்
செல்:98412 26856.



உலகில் உள்ள தற்காப்புக் கலைகளிலேயே மிகவும் தொன்மை வாய்ந்தது களரியாகும். முதன்முதலில் இவற்றை உருவாக்கிப் பயிற்றுவித்தவர் அகஸ்திய முனிவரே. பண்டைய சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் காலத்தில் அரசர்களுக்கும், பின்னர் போர் வீரர்களுக்குமான பயிற்சியாகவே இருந்தது. பிற்காலத்தில்தான் எல்லோரும் கற்றுக் கொள்ளும் கலையாக வளர்ந்துள்ளது.

தற்காப்புக்கலை, பண்டைய போர்க்கலை என இரண்டும் கலந்ததாகக் களரி உள்ளது. தற்காலத்தில் தற்காப்புக்காவே களரி பயன்படுகிறது. தற்காப்புக் கலை என்றாலே யாரையாவது உதைப்பதோ, அடிப்பதோ, குத்துவதோ மட்டும் கிடையாது. இந்த உடலை முறையாகப் பயன்படுத்த என்னவெல்லாம் சாத்தியங்கள் உள்ளனவோ, அவை அனைத்தையும் கற்றுக்கொள்வது களரியாகும்.

பயன்படாத நிலத்தில் பயிற்றுவிக்கப்படும் போர் பயிற்சியே "களரி" ஆகும். களம் என்னும் சொல்லின் அடிப்படையிலும் "களரி" என்னும் சொல் உருப் பெற்றதாக எடுத்துக் கொள்ளலாம்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தளவாயாகவும், போர்ப்பயிற்சி அளிக்கும் கல்விக் கூடமான களரிகள் நூற்றி எட்டுக்கும், ஆயுதக் கிட்டங்கிகளுக்கும், பொறுப்பாளராகவும் வர்மக்கலை ஆசானாகவும் தாணுமாலய நாடார் இருந்தார் அவருடைய மகன் டச்சுக்காரர்களை தோற்கடித்த அனந்த பத்மநாபன் நாடாரும் (1698 -1750) போர்ப்பயிற்சி ஆசிரியராகவும் வர்மக்கலை ஆசானாகவும் விளங்கினார்.

சான்றோர் குல நாடார் மக்களால் போர்பயிற்சி முறை, வர்மக்கலையுடன் இணைந்த அங்கைப் போர்ப்பயிற்சியாக பயிற்றுவிக்கப் பட்டது. சான்றோர் குலத்தை சேர்ந்த சிவ பக்தரான ஏனாதி நாயனார். போர் வீரர்களுக்கு தொழில் முறையில் வாள் வித்தை பயிற்சி அளிப்பவராக இருந்தார். சேர சோழ ஆட்சி காலத்தில் போர் பயிற்சி முறை வளர்ச்சி பெற்றது.

சோழர் ஆட்சி காலத்தில் அமைக்கப்பட்ட படைப் பிரிவுகளில் "வலங்கை மகாசேனை" மிகச் சிறந்த போர்ப் பயிற்சி பெற்றப் படையாகும். இப் படைக்கு களரி மற்றும் வர்மக்கலை எனப்படும் உடலின் நுட்பமான நரம்பு மையங்களை வெறும் கையால் தாக்கும் "அங்கப் போர்முறையை"மரபு வழி வந்த ஆசான்கள் பயிற்சி அளித்தனர். இக் கலையில் சத்திரிய சான்றார் தேர்ச்சி பெற்று இருந்தனர். இவர்களே தமிழகத்தில் அரச குடும்பத்தினருக்கு போர்க்கலை மற்றும் அங்கப் போர்க்கலை கற்பிக்கும் ஆசான்களாகத் திகழ்ந்தார்கள் என்று கருதப்படுகிறது.

திருச்செந்தூர் அருகிலுள்ள அங்கமங்கலம் என்ற ஊர் வர்மக் கலையும், களரிப் பயிற்சியும் கலந்த உயரிய போர்க் கலையில் தேர்ச்சி பெற்ற சான்றோர் சமூகப் போர் வீரர்களுக்காக வழங்கப்பட்ட மானிய கிராமமாகும்.

11ஆம் நூற்றாண்டில் களரி என்னும் போர் பயிற்சி முறை ஆரம்பம் ஆயிற்று.

களரியின் பிரிவுகள்:

பொதுவாகக் களரியை இருபெரும் பிரிவாகப் பிரிக்கலாம் அவை:

வடக்கன் களரி

தெக்கன் களரி

வடக்கன் களரி: கேரளத்தின் வடப் பகுதியில் பயிற்றுவிக்கப்படும் களரிக்கு ஆசானாக நாயர் மற்றும் ஈழவர் இருந்துள்ளனர்.

தமிழகம் மற்றும் கேரளத்தின் தென்பகுதியில் பயிற்றுவிக்கப்படும் தெக்கன் களரிக்கு ஆசானாக நாடார்கள் (சான்றோர்) இருந்துள்ளனர்.

தெக்கன் களரி:

தெக்கன் களரி முறையில் ஆயுதத்தால் தாக்காமல், வெறும் கைகளால் வர்ம ஸ்தானத்தைத் தாக்கி எதிரிகளை வீழ்த்துவதாகும். சிலம்பம், தற்காப்புகலை, வர்மக்கலை போன்றவை இதன் பிரிவுகள் ஆகும்.

களரி தமிழகத்தைச் சேர்ந்ததா, கேரளத்தைச் சேர்ந்ததா? என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் ஆய்வாளர்களிடையே உள்ளன. இது மிகத் தொன்மையான கலை. இதன் தொடக்க காலத்தில் கேரளம் பண்டைய தமிழ்ச் சேர நாடாகவே இருந்ததால், இதைத் தமிழர் கலையென்று கூறுவதில் தவறில்லை. இக்கலை பற்றிய பழைய ஏடுகள் தமிழில் உள்ளதாகக் கூறுகின்றனர். ஆனால், தற்போது களரி அதிக அளவில் கேரளத்திலேயே பயிற்றுவிக்கப்படுகிறது. அது பற்றிய நூல்கள் மலையளத்திலும் ஆங்கலத்திலும் பரவலாக உள்ளன.

இக் கலையானது கன்னியாகுமரி மாவட்டத்தில் பழங்காலம் முதல் இருந்து வருகிறது. தற்போது தமிழகத்தில் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் சில இடங்களிலும் இக்கலை பயிற்றுவிக்கப்படுகிறது.



ஜெயமுருகன் சிக்கன்
& மட்டன் ஸ்டால்







89, கே.எச்.ரோடு, தி.நகர்,
சென்னை-17. போன்:2814
3642.

R.வெங்கடேசன்

# நாடார் முரசு பிறந்த கதை

நாடார்களின் நாகரீகம் அந்த காலத்தில் ஒரே மாதிரியாகத்தான் இருந்தது. ஒவ்வொரு ஊரிலும் கட்டுக்கோப்பான ஜாதிகள் இணைந்து வாழ்க்கை இயங்கிக் கொண்டிருந்தது. துணிகளை வெளுக்க வண்ணார்களும், முடிவெட்ட நாவிதர்களும், விவசாய வேலை பார்க்க ஒரு சாராரும், மாடு மேக்க மாடனும், ஏர் கலப்பை செய்ய மர தச்சனும், வீடு கட்ட மேஸ்திரியும், விறகு வெட்ட விறகு வெட்டியும், வீடுகளில் மாடு இருந்தால் பால் கரந்து கொடுக்க இடையர்களும், மளிகை கடைகளும் பெட்டி கடைகளும், டீ கடைகளும், ஜவுளி கடைகளும் இப்படி எல்லா தேவைகளுக்கும் பல்வேறு மக்கள் இருப்பார்கள். ஆனால் அந்த காலத்தில், இப்போது இருப்பது போல் பாப்பர்ஷாப்பும், லாண்டிரிகளும் கிடையாது அந்த காலத்திலும் ஜாதிகள் இருந்தது ஆனால் சாதி சண்டைகள் இப்போதைய போல் அப்போது கிடையாது. ஆனால் தேவர்கள் அதிகமான கிராமத்தை தேவர்களின் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். அதுபோல் நாடார்கள் அதிகமான கிராமத்தை நாடார்கள் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். வெள்ளாளர்கள் சிறிதளவே இருந்தாலும் அவர்களது சாதுர்யத்தால் அனைவரையும் தனக்கு மரியாதை கொடுக்கவேண்டும் என்று முயற்சித்தார்கள் பொதுவாக கிராமங்கள் சிறு சிறு பிரச்சனைகள் வந்தாலும் ஊர் பெரியவர்கள் பேசி சரி செய்துவிடுவார்கள்.

எங்கள் வடக்கன்குளத்தைப் பொருத்தமட்டில் துணிகளை அயன் செய்வதற்கு அதை பெட்டி போடுவது என கூறுவார்கள் ஒரு கடை இருந்தது அதன் உரிமையாளர் இசக்கி வண்ணாள் பெரிய இடத்து வீட்டார் அவளிடம் கொடுப்பார்கள் ஒரு உறுப்படிக்கு 5 பைசாவிலிருந்து 26 பைசாவரை ரோட்டு உண்டு ஆனால் அதிகமானோர் தன் வீட்டு வண்ணானிடம் தான் துணியெல்லாம் கொடுத்து வாங்குவார்கள் அப்படி ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு வண்ணார் குடும்பம் உண்டு. அதுபோல் எங்கள் குடும்ப வண்ணார் பெயர் வள்ளி. அவர்களை புனைப் பெயர் வைத்து முட்டி என்று தான் அழைப்பார்கள் எங்கள் குடும்பத்தோடு ஒட்டி நெருக்கமாக எங்களோடு சரி சமமாக இருப்பார்கள் அந்த காலத்தில் ஒரு இனத்தவர்களுக்கு வெளுக்கும் வண்ணார்கள் வேறு இனத்தவர்களுக்கு வெளுக்க மாட்டார்கள். ஆகவே தான் வெளுப்பாருக்கு வெளுப்பான் ஜாதி வண்ணான் என்று முதியோர் வாக்கே வந்தது. வண்ணார்களின் செயல்பாடுகள் அந்த காலத்து வாழ்க்கையோடு பிணைந்திருந்தது. பிறப்பு முதல் இறப்பு வரை அவர்கள் ஒன்றித்திருப்பார்கள். எந்த காரியங்கள் ஆனாலும் இந்த வண்ணார்கள் தான் முதன்மையாக இருந்து நல்ல காரியங்களை செய்வார்கள். குழந்தை பிறக்கும்போது அதிலுள்ள துணிகளை அவர்கள் எடுத்து செல்வர் அந்த காலத்தில் குழந்தை பிறந்து 40 நாள் வரை குழந்தையின் குரல் நன்றாயிருக்கவேண்டும் என்றும் தீக்குவாள் இருமல் போன்ற பல வியாதிகள் வராமல் இருக்கவும் கழுதைப்பால் கொடுப்பார்கள் கழுதை பால் அவர்களிடம் தான் கிடைக்கும் ஏனெனில் பொதி சுமக்க கழுதைகளை அவர்கள் தான் வளர்ப்பார்கள் அந்தகாலத்தில் தடுப்பூசிகள் கிடையாது இந்த கழுதைப்பால் தான் தடுப்பூசியாக செயல்பட்டது எனலாம். அனேகமாக எங்கள் ஊரில் அந்த காலத்தில் அனைவரும் கழுதை பால் குடித்திருப்பார்கள். அதற்கு பிரபலமாயிருந்தவர் பொருத்த வண்ணான். அவர்தான் அதிக கழுதைகளை வளர்த்தார். அது போலவே, பெண் பிள்ளைகளின் வளர்ச்சியில் மிகவும் பங்கு அவர்களுக்கு உண்டு பெண் பிள்ளைகள் பெரிய மனிச்சியாகும் போது அவர்களுக்கு பணிவிடை செய்வது இவர்கள் தான் அந்த பூப்பெய்திய பெண் உடுத்தியிருந்த ஆடைகள் சுத்தம் செய்து அவர்களே வைத்துக் கொள்ளுவார்கள். இன்னும் திருமண காலங்கள் மற்றும் வண்ணான் குறி போன்ற செய்திகள் அடுத்த இதழில்......... தொடரும்..........


உரிமை:S.MAXY

Praise The Lord

9444580976
9962843074

மெசியா பிளாஸ்டிக்

பழைய பிளாஸ்டிக் மொத்த வியாபாரம்
(பழைய பிளாஸ்டிக் மொத்தமாகவும், சில்லரையாகவும் வாங்கப்படும்)



எண்:285/2ஏ2 இந்திரா நகர்,
கனராவங்கி எதிரில், சேலையூர்,
சென்னை-73.

# பசுமை நிறைந்த நினைவுகள்(அமெரிக்க பயணம்)

-தென்னக சான்றோர் சங்க உறுப்பினர்.
எம்.கோவிந்தராஜ். செல்:9384605133



## அந்தமான்

அமெரிக்காவில் ஆண் மான், பெண் மான் உருவங்களை வியாபார ஸ்தலங்களில் வைத்து அழகு செய்திருப்பதைக் காணலாம்.

குறிப்பாக, சான் அன்டோனியோவிலுள்ள 'ஈகிள் அவுட்ஃபிட்' என்ற கடை நுழைவாயிலுக்கு முன்னால் ஆண் மானும், பெண் மானும் இரை மேய்வது போன்று உலோகத்தாலான பொம்மை இரண்டு வைத்திருக்கிறார்கள். இது, இந்த கடைக்குச் செல்பவர்களின் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்துள்ளது.

இங்கும் மான்களை வேட்டையாட அனுமதி கிடையாது. ஆனால், வாகனங்களால் அடிபட்டு இறந்த மானை, யார் வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்.

ஃபிரெட்ரிக்ஸ்பர்க் ரோட்டின் ஓரத்தில் 'பார்க் ஹில்' அடுக்குமாடி வீடுகள் அமைந்துள்ளன. இதன் முன்னால் ரோடு ஓரமாகப் 'பயணிகள் நிழற்கூடம்' இருக்கிறது. இந்த Bus Stand-™ இருக்கைகளைக் கொண்ட இரும்பாலான பெஞ்சும் மற்றும் வெயிலை மறைக்க கூடாரமும் அமைந்துள்ளது. இத்துடன் குப்பைத் தொட்டியும் வைத்திருந்தார்கள்.

அமெரிக்காவிலும் கோடைக்காலத்தில்தான் சூரியன் தாக்கம் அதிகமாக இருக்கும். அதே நேரத்தில் குளிர்ந்த காற்றும் வீசிக் கொண்டிருக்கும். இது வெயிலின் தாக்கத்தைக் குறைத்துவிடும்.

பறவைகளின் பாட்டு ஒலி கேட்டுக் கொண்டிருக்கும். பல நிறப்பட்ட, பல தரப்பட்ட கார்கள், போலீஸ் கார்கள், தீயணைப்பு கார்கள், பள்ளி மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் அங்குமிங்கும் சென்று கொண்டிருக்கும்.

இந்த பஸ் ஸ்டாண்டிற்கு எதிரே அமைந்துள்ள பெட்ரிஸ் பாக் ரோடு. இதனையொட்டி எதிரே கம்பியாலான வேலி காம்பவுண்டுக்குள் 'USAA கட்டிடம்' அமைத்திருக்கிறது.

இங்கிருந்து பார்த்தால் காம்பவுண்டுக்குள் செல்லும் கார்கள் தெரியும். பூச்செடிகள், புல் பூண்டுகள் எல்லாம் தெரியும்.

நண்பகல் 1 மணி அந்த கம்பி காம்பவுண்டுக்குள் பச்சைப் பசேலென்ற புற்கள் வளர்ந்திருப்பதையும் அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளையும் இங்கிருந்தே பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன். மதிய சாப்பாட்டிற்கு வருபவர்கள் பலர், சாப்பிட்டு வேலைக்குத் திரும்புபவர்களும் பலர்.

பகல் 1.30 மணி இருக்கும். 5 மான்கள் மேய்ந்து கொண்டிருப்பதை இங்கு உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் ஒரு மான், அந்த கம்பிக்கு இடையில் தலையை வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. இந்த காட்சி, 'மான் என்னை விசாரிப்பது மாதிரி இருந்தது' 'நானும் அந்த மானுடன் பேசுவது மாதிரி' இருந்தது. ஒரு 'கற்பனை பேச்சுவார்த்தை' எனக்குள் உதயமாகியது.

மான்: எந்தக் கண்டத்தைச் சேர்ந்தவர் நீங்கள்?

மனிதன்: ஆசியாக் கண்டம்.

மான்: நாடு பெயர் என்ன?

மனிதன்: இந்தியா.

மான்: புத்தர் பிறந்த இந்தியாவா? மகாத்மா காந்தி பிறந்த இந்தியாவா? விவேகானந்தர் பிறந்த இந்தியாவா? அன்னை தெரசா அயல்நாட்டில் பிறந்து சமூக சேவை செய்து இறைவனடி சேர்ந்ததும் இந்தியாவில்தானே? இந்தியாவில் எந்த மாநிலம்?

மனிதன்: தமிழ்நாடு.

மான்: கிருபானந்த வாரியார் பிறந்த மாநிலம் தானே அது?

மனிதன்: ஆம்.

மான்: பெருந்தலைவர் காமராஜர் பிறந்ததும் அங்குதானே?

மனிதன்: ஆம்.

மான்: அப்துல்கலாம் பிறந்ததும் அங்குதானே?

மனிதன்: ஆம்.

மான்: இலக்கிய வளம் பொருந்திய, தமிழ்மொழி பேசும் மாநிலம் தமிழ்நாடுதானே. அதில் எட்டுத் தொகை நூல்கள் எல்லாவற்றிலும் எங்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள் அல்லவா?

மனிதன்: ஆம்.

மான்: சூரியன் உதயமாவது, அடைவது கன்னியாகுமரியில் தானே. அங்கு கடலுக்குள் உள்ள பாறையில்தானே விவேகானந்தர் மண்டபமும், திருவள்ளுவர் மண்டபமும் இருக்கிறது. அவற்றைப் பார்த்திருக்கிறாயா?

மனிதன்: ஆம்.

மான்: அப்படியென்றால் திருவள்ளுவர், செய்குத்தம்பிப் பாவலரைப் பற்றி அறிந்துள்ளாயா? கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பற்றி அறிந்திருக்கிறாயா? அவர்கள் எழுதிய பாடல்களைப் பற்றி படித்திருக்கிறாயா?

மனிதன்: நன்றாகப் படித்திருக்கிறேன். கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்கள் "மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று பெண்களைப் புகழ்ந்து பாடிய முதல் கவிஞர் ஆவார்.

மான்: "ஸ்லம் டாக் மில்லியனர்" படத்திற்காக இரண்டு ஆஸ்கார் விருதுகள் பெற்ற A.R.இரகுமான் தமிழ்நாடுதானே?

மனிதன்: ஆம்.

மான்: தமிழ்நாட்டுக்குப் பக்கத்தில் உள்ள கேரள மாநிலத்தில்தான் உலகப்புகழ் பெற்ற ஓவியர் ரவிவர்மா பிறந்துள்ளார். அவரது ஓவியங்களைப் பார்த்திருக்கிறாயா? முல்லைப் பெரியாறு பிரச்சனை தீர்ந்துவிட்டதா?

மனிதன்: பார்த்திருக்கிறேன். முல்லைப் பெரியாறு பிரச்சனை இன்னும் தீரவில்லை. ஆமாம்! இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?

மான்: உலகம் முழுவதும் நாங்கள் வசித்து வருகிறோம். நண்பர்கள் மூலம் செய்திகள் வரும்.

மனிதன்: உனக்கு உண்ண, உறங்க, இனவிருத்தி செய்யமட்டும் தெரியும் என்றுதானே நினைத்தேன்.

மான்: எனக்கு இது மட்டும் தெரிந்தால் போதும். மானிடனை மாதிரி திருடத் தெரியாது. போலி மாத்திரை செய்து விற்கத் தெரியாது. லஞ்சம் வாங்கத் தெரியாது. போலி கையெழுத்துப் போட்டு, டாக்குமெண்ட் தயாரித்து, அடுத்தவன் சொத்தை, தன் பெயரில் பதிவு செய்ய தெரியாது. போலி முத்திரை செய்து மார்க் சீட் கொடுக்கத் தெரியாது. அடுத்தவன் பொருளைக் கொள்ளையடிக்கத் தெரியாது. கலப்படம் செய்து, பொருளை விற்கத் தெரியாது. கடனை வாங்கி வீட்டைக் கட்டி, படாதபாடு படுபவர்கள் நாங்கள் இல்லை. உணவு எங்கு கிடைக்கிறதோ அங்கு உண்போம். ஓரிடத்தில் இல்லை என்றால் மற்றோரிடத்தில். நாங்கள் எல்லோரும் உறவினர்கள். எந்தக் கவலையுமில்லை. சந்தோஷமாக வாழ்கிறோம். என்னைப் போன்று உன்னால் அசைபோட முடியாது. ஒருவன் செய்த தீமையை நினைத்து நினைத்து பழிவாங்கத் துடிப்பவர்கள் நீங்கள்.

மனிதன்: நோய் வந்தால் நீ மானிட டாக்டரிடம்தானே வரவேண்டும்?

மான்: நான் மானிடத்தில் வரவேண்டிய தேவையில்லை. நோய் வந்தால்தானே. உங்கள் திருக்குறளில் சொல்வது போன்று.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி யுனின்".

எங்களுக்கு நோய் வந்தால் தானே மானிடனிடம் வருவதற்கு. வந்தாலும், போலி மருந்து, போலி டாக்டர்கள். எங்களுக்குத் தெரியாதா? நீங்கள் உயிரோடு விளையாடுகிறீர்கள். குறைந்த மார்க்குகள் வாங்கி லஞ்சம் கொடுத்து, டாக்டர் சீட் வாங்கி, லஞ்சம் கொடுத்து, பாஸ் பண்ணி, டாக்டர் போர்வையில் சிலர் வைத்தியம் செய்கிறார்களே, அவர்களை நம்பி நாங்கள் எப்படி வைத்தியம் செய்ய வர முடியும்? இந்தக் காலக்கட்டத்திலும் தியாக சீலர்கள் பலர் டாக்டராக பணிபுரிகின்றனர். அவர்களை எங்களால் பாராட்டாமல் இருக்க முடியவில்லையே.

மனிதன்: உங்களைப் புலியிடமிருந்து காப்பாற்ற யார் இருக்கிறார்கள்? ஆனால் எங்களுக்குத் திருடர்களிடம் இருந்து எங்களைக் காப்பாற்ற காவல்துறையினர் இருக்கின்றனர்.

மான்: உண்மைதான். காவல்துறையிடமிருந்து எந்த குற்றவாளியும் தப்பிக்க முடியாது. பாலியல் பலாத்காரம் பண்ணியவர்களை தண்டிக்கிறது. லஞ்சம் வாங்கிய பெரும்புள்ளிகளைக் கையும், களவுமாகப் பிடித்துள்ளது. எங்களுக்குத் தெரியும். இந்திய காவல்துறை உலகப் புகழ் பெற்றதுதான்.

- தொடரும்.................

நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்! நல்லதே நடக்கும்!

# நியூ நிதில் & கோ

117/401, டி.எச்.ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-21. போன்:044-25962323, 044-42165485







# NEW NITHIL & CO



**Whole Sale & Retail**
**Steel & Wood Furniture Show Room**
**No:1171, T.H.Road, Old Washermanpet, Chennai-600 021.**

# கிறிஸ்தவ நாடார்கள்

**நெல்லை, தூத்துக்குடி, குமரிமாவட்டம் கிறிஸ்தவ நாடார் வரன்கள் ஏராளம் உள்ளது.**

**இமயம் சென்னை. செல்:7299556592, 7299556591.**

**உங்கள் இல்லத்தில் உடனே திருமணம் நடைபெற வேண்டுமா?**

Prop.K.A.Raman Nadar

# Sri.R.M.T.திருமண தகவல் மையம்



கைராசியான ஸ்தாபனம் மற்றும் இந்து, R.C, C.S.I. நாடார் வரன்கள் அமைத்து தரப்படும். MD, MBBS, M.E, M.SC, M.C.A மற்றும் IAS, IPS, VIP வரன்களுக்கு மில் தொழில் அதிபர் வரன்களுக்கு அணுகவும்.
106, ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை-26.போன்:45588957, செல்:9380791999, 9841329471. E-mail:ramannadar2004@yahoo.co.in Web:www.srirmt.com



# சித்ரா வாட்ச் கம்பெனி

## CHITHRA WATCH COMPANY



SALES & SERVICE TITAN. SONATA, AJANTA
Expert repairers of world Famous Rolex, Rado, Omega Seiko, Citizen and other Indian Watches, Til
Shanthi Complex, No:63/26, Ranganathan Street, (Very Near Mambalam Railway Station (opp.to Rameswaram Road), T.Nagar, Chennai-17. Ph:24348524.



# தங்கக் கடற்கரை தோட்டத்திலே

எங்கள் தங்கக் கடற்கரையில்
எழிலாய் வளரும் ஆடுகளாம்!
பொங்கும் இன்பம் பெருகிடுமே
பார்க்கும் போது உள்ளமெலாம்!
தங்கக் கடற்கரை தோட்டத்திலே
களிப்புடன் துள்ளி விளையாடும்
அங்கோர் குட்டி ஆடுதனை
அழகாய் இருப்பதைப் பார்த்தேன்நான்
வாரி தூக்கி எடுத்தேனே
மார்பில் அணைத்து மகிழ்ந்தேனே!

- டாக்டர் வி.ஜி.சந்தோசம்.

# யோக நிலையில் வீற்றிருக்கும் நரசிம்மமூர்த்தி

-அருட்பணிசெம்மல் S.V.சிவசம்பந்த நாடார்,
தஞ்சை(வ) மாவட்ட அவைத்தலைவர்,
பெருந்தலைவர் மக்கள் கட்சி,
கும்பகோணம், 9245344808.

பக்தன் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து அருள் பாலிக்கும் நாராயணன், தனது பக்தன் பிரகலாதனுக்கு இனிமேல் ஒரு நொடி பொறுத்தாலும் துன்பம் நேர்ந்துவிடும் என்ற காரணத்தால் தூணைப்பிளந்து அவதரித்து இரணியகசிபுவை சம்ஹாராம் செய்து பக்தனை காப்பாற்றி அருளிய அற்புதக் கடவுளே நரசிம்மர் ஆவார். நாளை என்பதே கிடையாது நரசிம்ம பகவானிடம். தன்னை சரணடைந்தவர்களை உடனே காத்தருளும் பகவானின் உருவம் தான் உக்கிரமே தவிர குழந்தை உள்ளம் கொண்டவர் அவர். இந்த யோக நரசிம்மர் இரணியனின் வதத்திற்குப்பிறகு கோபம் தணிய அமர்ந்த தலங்களில் நரசிங்கன்பேட்டை என்ற இத்தலமும் முக்கியமானதாகும். இங்கு பகவான் யோகநிலையில் அமர்ந்து அருள்மழை பொழிகின்றார். யோகநிலை நரசிம்ம பகவான் மற்ற நரசிம்மரை விட சக்தி வாய்ந்தவர் என்பது ஐதீகம். மறைமுகமான எதிர்ப்புகளால் ஏற்படும் ஏவல், பில்லி, சூனியம் போன்றவற்றை நொடியில் நசித்துவிடுவார். இப்பெருமான் இத்தல கருவறையில் சதுர்புஜத்துடன் சேவை சாதிக்கிறார். இரு கரங்களில் சங்கு, சக்கரம் ஏந்தியும் இருகரங்களை யோக முத்திரையில் இருத்தி அமர்ந்த நிலையில் சேவை சாதிக்கும் இவரது அருள் அசாத்தியமானது. யோக நரசிம்மருக்கு ஏற்றப்படும் நெய்தீபம் மோசமான உடல்நலக் கோளாறு உள்ள நபர்களை உடனடியாக காப்பாற்றும் சக்தி உண்டு. இவருக்கு பிடித்த நிவேத்யம் வெல்லபானகமாகும். இவரை தரிசிக்க உகந்த நாட்களாக பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, சனிக்கிழமை மற்றும்



சுவாதி நட்சத்திரம் கூடிய நாட்கள் என கருதப்படுகிறது. இவரது சன்னதிக்கு எதிரே பெரிய திருவடி கருடனும் பிரகாரத்தில் தனி சன்னதியில் ஆஞ்சநேயரும் சேவை சாதிக்கின்றனர். இத்தல ஆஞ்சநேயருக்கு பக்தர்கள் மட்டை தேங்காயை எடுத்து வந்து தனது வேண்டுதலை ஒரு பேப்பரில் எழுதிக் கொடுத்தால் பேப்பரில் நம்பர் குறிப்பிட்டு, அந்த நம்பரை தேங்காயில் குறித்து பட்டாச்சாரியர் தேங்காயை நம்மிடம் கொடுத்து விடுவார். குறிப்பிட்ட காலத்திற்குள் வேண்டுதல் நிறைவேறிய உடன் மீண்டும் தேங்காயை கொண்டுவந்து கோயிலில் சமர்ப்பித்துவிட வேண்டும். அவ்வாறு பக்தர்கள் கொண்டு வந்து சமர்ப்பிக்கும் மட்டை தேங்காய் இத்தலத்தில் மலைபோல் குவிந்து இருப்பது ஆச்சரியமாக உள்ளது. தேங்காயை கொண்டுவந்து செலுத்தி பக்தர்கள் இக்கோயிலை மூன்று முறை வலம் வந்தும், ஆஞ்சநேயரை பதினொரு முறை வலம் வந்தும் சேவிப்பது எனும் ஐதீகமும் பக்தர்களிடையே நிலவி வருகிறது. இத்தலம் கும்பகோணம், மயிலாடுதுறை பேருந்து வழித்தடத்தில் நரசிங்கன் பேட்டை எனும் ஊரில் உள்ளது.




பல்லாண்டு பல்லாண்டு
வாழ்வாங்கு வாழ்க!

என்னருமை அண்ணாச்சி
எழில் பன்னீர்தாஸ் அவர்களின்
அன்பு மைந்தன் இளைய புதல்வன்!

அருமை மகன் ராஜாதாஸ்
பிறந்த நன்நாளிதுவே!

அண்ணாச்சி போலவே - இவர்
இரவு பகல் பாராது
உழைக்கும் உழைப்பாளி!

பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு - பலகோடி
நூறாயிரம் ஆண்டு வாழ்வாங்கு
வாழ வாழ்த்துகிறேன்!

அன்பு சித்தப்பா
வி.ஜி.சந்தோசம்

# ஜூன் மாதம் மறக்கமுடியாத பிரபலமானவர்கள்

- தொகுத்து வழங்கியவர். காமராஜர் தொண்டர் சூளைமேடு த.ராமச்சந்திரன் செல்:9384533221.

❖ 1961 ஜூன் 1ல் தமிழிசை சவுந்தரராஜன் 63வது பிறந்த நாள்..
❖ 1964 ஜூன் 2ல் லால்பகதூர் சாஸ்திரியை பிரதமராக்கினார் காமராஜர்.
❖ 1924 ஜூன் 3ல் டாக்டர் கலைஞர் கருணாநிதி 100வது பிறந்த நாள்.
❖ 1946 ஜூன் 4ல் பின்னணி பாடகர் நடிகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பிறந்த நாள்.
❖ 1896 ஜூன் 5ல் காயிதே மல்லர் பிறந்த நாள்.
❖ 1936 ஜூன் 6ல் 150 படங்களை தயாரித்த டி.ராமாநாயுடு பிறந்த நாள்.
❖ 1993 ஜூன் 7ல் காந்திஜி தபால் தலை தென்னாப்பிரிக்காவில் வெளியிடப்பட்டது.
❖ 1943 ஜூன் 8ல் திருச்செந்தூர் மூலக்கரையில் பிறந்து 1968ல் சென்னை வந்து ஜவுளிகடை ஆரம்பித்த எஸ்.ஜெயச்சந்திரன் பல நிறுவனங்களை ஆரம்பித்து 8ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கிய வள்ளல் 81வது பிறந்த நாள் விழா நல்வாழ்த்துக்கள்.
❖ 1980ஜூன் 10ல் எம்.ஜி.ஆர் 2வது முறை தமிழக முதல்வராக பதவி ஏற்றார்.
❖ 1964 ஜூன் 11ல் நேருஜி அஸ்தி இந்திய கடலில் பல பகுதியில் கரைக்கப்பட்டது.
❖ 1977ஜூன் 12ல் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்.தமிழக முதல்வர் ஆனார்.
❖ 1912 ஜூன் 12ல் தியாகி மார்ஷல் நேசமணி பிறந்த நாள்.
❖ 2011 ஜூன் 13ல் 104 வருடத்திற்கு பிறகு வ.உ.சி.நினைவாக தூத்துக்குடி கொழும்பு தலைமன்னார் துறைமுகத்துக்கு பயணிகள் கப்பலை துவக்கி வைத்தார். தலைவர் ஜி.கே.வாசன்.
❖ 2013 ஜூன் 15ல் மறக்கமுடியாத நடிகர் மணிவண்ணன் நினைவு நாள்.
❖ 1948 ஜூன் 15ல் கல்வி தந்தை அண்ணாமலை செட்டியார் நினைவு நாள்.
❖ 1995 ஜூன் 16ல் மூலக்கரையில் பிறந்து நாலுமாவடியில் வாழ்ந்து சென்னை சூளைமேடு வீட்டில் 80வயதில் என் தாய் கண்ணம்மாள் காலமானார்.
❖ 1911 ஜூன் 17ல் மணியாச்சி ரயிலில் ஆஸ்துரையை சுட்டு கொன்று தன் உயிரையும் மாய்த்து கொண்ட மாவீரர் வாஞ்சிநாத ஐயர்.
❖ 1980 ஜூன் 18ல் என் இனிய நண்பர் சிவாஜி ரசிகர் மன்ற தலைவர் சின்ன அண்ணாமலை மணிவிழா அன்று காலமாகிவிட்டார்.
❖ 1909 ஜூன் 18ல் ஏழை தலைவர் மறைந்த கக்கன்ஜி 115வது பிறந்த நாள்.
❖ 1970 ஜூன் 19ல் நேருஜி பேரன் ஆர்.ராகுல் B.A.,MBL 54வது பிறந்த நாள்.
❖ ஜூன் 20 நடிகர் எஸ்.ஏ.எஸ் விஜய் 50வது பிறந்த நாள்விழா.
❖ 2010 ஜூன் 23ல் பெருந்தலைவர் உதவியாளர் வைரவன் நினைவு நாள்.
❖ 1927 ஜூன் 24ல் கவியரசர் கண்ணதாசன் 97வது பிறந்த நாள்.
❖ 1980 ஜூன் 23ல் சஞ்சய் காந்தி விமான விபத்தில் கொல்லப்பட்டார்.
❖ 2015 ஜூன் 23ல் எனது லண்டன் மருமகன் ராஜசேகர் நினைவு நாள்.
❖ 2002 ஜூன் 23ல் பிரியங்கா மகன் ரேகன் 22வது பிறந்தநாள்
.❖ 1991 ஜூன் 24ல் ராஜீவ் காந்தி அனுதாப அலையால் ஜெயலலிதா தமிழக முதல்வர் ஆனார்.
❖ ஜூன் 26ல் மா.பொ.சி 117வது பிறந்த நாள்.
❖ 1919ஜூன் 26ல் அன்னை ஜி.கே.கஸ்தூரி பாய் 85வயதில் காலமானார்.
❖ 1998 ஜூன் 23ல் சூளைமேடு அரசினர் மகளிர் மேல்நிலை பள்ளி வெள்ளி விழா ஆண்டு மலர் புக் தயாரித்து வழங்கி நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வெளியிட நான் பெற்று கொண்டேன் பின் அட்டையில் என் கடை விளம்பரம் உண்டு அந்த ஆண்டுவிழா மலர் இன்னும் பாதுகாப்பாக வைத்துள்ளேன்.

# மனமாற்றமும் மன்னிப்பும்

D.M.ஜேம்ஸ்மார்டின்
9488129050

சாமுவேல் மருத்துவமனை வளாகம்.
திங்கள்நகர், நெய்யூர்-629802,க.குமரி மாவட்டம்

மனிதனின் மாசற்ற வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகள் மனமாற்றமும் மன்னிப்பும். மனித வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்கும் இரண்டு கண்கள் போன்றவை. நமது மனமாற்றம் எப்படி இருக்க வேண்டும்? வீரத்துறவி திருமுழுக்கு யோவான் கூறுவது போல் நாம் மன மாறியதை நமது நற்செயல்களால் செய்து காட்ட வேண்டும். காகிதப்பூ மணக்குமா? தேன் என்று காகிதத்தில் எழுதி சுவைத்தால் இனிக்குமா? என்னை நோக்கி "ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்பவர்களெல்லாம் விண்ணரசில் சேரமாட்டான். கடவுளின் கட்டளைகள் படி நடப்பவனே சேருவான்." "இந்த மக்கள் உதட்டளவிலே என்னை போற்றுகின்றனர். இவர்கள் உள்ளமோ என்னைவிட்டு தொலைவில் இருக்கிறது." என்கிறார், ஏசு. எனவே நமது மன்றாட்டுகள் உதட்டளவிலே நின்று விடாமல் நமது இதயத்திலிருந்து வரும் உண்மையான மன்றாட்டுகளாகவும், மனமாற்றமுமாக இருக்க வேண்டும். சோதனைகளை வென்று சாதனைகள் புரிவது தான் மனமாற்றம். தீமைகளை நம் இதயத்திலிருந்து அகற்றி மனம்மாறி திருந்தி, நல்லவனாக இறைவனிடம் திரும்பி வருவதே உண்மையான மனமாற்றமாகும். மனம்மாறினால்தான், நமக்கு எதிராக குற்றம் செய்தவர்களை நாம் மன்னிக்க முடியும். மன்னித்தால்தான் மனச்சமாதானமும் மன அமைதியும் நம்மில் குடிகொள்ளும்.

**கொடும் பாவச்செயல்கள் செய்து, முழுமையாக மனமாறிய 4வரின் வாசகங்கள்:**

1.மன்னர் தாவீதின் பாவச்செயல்களும் மனமாற்றமும்:

குற்ற மற்ற தளபதி உரியாவின் இரத்தம் இறைவன் முன் விழுந்து கதறியது. தாவீதின் பாவச்செயல்களால் கடும் சினமுற்ற கடவுள் இறைவாக்கினர் நாத்தானை தாவீதிடம் அனுப்பினார். நாத்தான் தாவீதிடம் வந்து ஒரு கதை சொன்னார்." ஒரு ஊரில் ஒரு செல்வந்தனும் ஒரு ஏழையுமிருந்தனர். செல்வந்தரிடம் பல ஆடுகள் இருந்தன. அந்த ஏழையிடமோ ஒரே ஒரு ஆட்டுக்குட்டி மட்டும் இருந்தது. அதை தன் பிள்ளைகளை போல் அவன் வளர்த்து வந்தான். ஒரு நாள் அந்த செல்வந்தன் வீட்டிற்கு நண்பன் ஒருவன் வந்தான். அவனுக்கு விருந்து வைக்க தனது அனைத்து ஆடுகளையும் விட்டு விட்டு அந்த ஏழையிடமிருந்த ஒரே ஆட்டுக்குட்டியை அபகரித்து நண்பனுடன் விருந்துண்டான் என்றார்.

"இதைகேட்டதும் தாவீது," ஆண்டவர் மேல் ஆணை இதைச் செய்தவன் உடனே சாக வேண்டும். இரக்கமின்றி இப்படி செய்ததால் நான்கு மடங்கு திருப்பி கொடுக்க வேண்டுமென்று கோபாமாக கத்தினார்". நாத்தான் அமைதியாக "நீயே அந்த மனிதன்", என்றார். இதைக்கேட்டதும் மன்னர் தாவீது, தனது தளபதி உரியாவின் மனைவியின் அழகில் மயங்கி, அவளை தனது 3வது மனைவியாக்கி கொண்டதையும், உரியாவை போர்க்களத்திலே, வஞ்சகமாக, முன்னிற்க செய்து, அவனை படுகொலை செய்து பாவச் செயல்களையும் எண்ணி மனம் வெதும்பி அழுதார். தனது இதயத்தோலை கிழித்தார். இறை ஞானத்தை பெற்றார். மனம் மாறினார். மன்னிப்பு கேட்டார், இறைவனிடம். மன்னிக்கப்பட்டார்.

2.நல்ல கள்வனின் மனமாற்றம்:

சிலுவை மரணம் அக்காலத்தில் கொள்ளையர்களும், கொலையாளிகளுக்கும் மரண தண்டனையாக கொடுக்கப்படும் அவமான சின்னமாக இருந்தது. ஏசுவின் சிலுவை மரணத்திற்கு பின் மீட்பின் சின்னமாக மாறியது. ஏனெனில் இப்புனித சிலுவை மரணத்தால் தான் இறைமகன் ஏசு உலகத்தை பாவ இருளிலிருந்து மீட்டார். கள்ளமற்ற ஏசுவை யூதர்கள் சிலுவையில் அறைந்த போது கொலை, கொள்ளைகளுக்காக மரணதண்டனை அடைந்த இரு கள்வர்களையும் சிலுவையில் அறைந்து, ஒருவனை அவரது இடது பக்கத்திலும், ஒருவனை வலது பக்கத்திலும் வைத்தார்கள். இடது பக்கத்தில் இருந்தவன் ஏசுவை, "நீ மெசியாவானால் உன்னையும் எங்களையும் காப்பாற்று" என்று பரிகசித்து பழித்துரைத்தான். வலது பக்கம் இருந்த கள்வன், "நமது தண்டனை நியாயமானது. ஆனால் இவரோ குற்றமற்றவர்," எனக்கூறி அவனை கடிந்து கொண்டபின் மனம் மாறியவன் "ஏசுவே நீர் அரசுரிமையோடு வரும் வேளை என்னை நினைவு கூறும்," என்று பணிவுடன் மன்றாடினான். மன்னிப்பு கேட்டான். அவனது மன்னிப்பை ஏற்றுக் கொண்ட ஏசு, "இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய்," என்று கூறி அவனை விண்ணுலகில் ஏற்றுக்கொண்டார்.

- தொடரும்......

## 12th படித்தால் போதும் இந்திய இராணுவ தொழில் நுட்ப பிரிவில் இலவச பயிற்சி பெற்று அதிகாரி ஆகலாம் (ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்)

M. ஞானசேகர், விவசாய ஆலோசகர், 9566253929.

12th படித்து B.E, B.Tech படிக்க அரசின் JEE தேர்வு எழுதிய மாணவர்கள் மட்டுமே தகுதி உடையவர்.

பயிற்சி: 10, +2, Technical Entry Scheme, Course-46. காலி இடம்-90, வயது-16.5 to 19.5 க்குள் அதாவது 2.1.2003 to 1.1.2006 க்குள் (இரண்டு தேதியும் சேர்த்து பிறந்திருக்க வேண்டும்).

கல்வி: Physics, Maths, Chemistry 60% +2 தேர்ச்சி JEE தேர்வு பாஸ் செய்திருப்பது அவசியம்.

சம்பளம்: ரூ.56100 - 177500.

உடல் தகுதி: 1.5 நிமிடத்தில் 2.4 கி.மீ ஓட வேண்டும். ஸ்கிப்பிங் ஆட வேண்டும். புல் அப்-20. சிட்அப் - 20. சின்அப் - 8 எடுக்க வேண்டும். 3.4மீ கயிறு ஏற வேண்டும்.

+2 மார்க், JEE மார்க், SSB நேர்முக தேர்வு மார்க் அடிப்படையில் தேர்வு செய்யப்படும்.

நேர்முக தேர்வு: பெங்களூர், அலஹாபாத், போபால், பஞ்சாப் ஆகிய 4 ஊர்களில் நடக்கும்.

5 ஆண்டு பயிற்சி, நேர்முக தேர்வு.

5 வருட பயிற்சிக்கு பின் லெப்டினன்ட் ஆபிஸராக பணியாற்றலாம்.

www.joinindianarmy.nic.in இணையம் மூலம் படிவம் எடுத்து, ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்த விண்ணப்பம் நகல் எடுத்து கொள்ள வேண்டும். 23.2.2022க்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விபரம், படிப்பு, பயிற்சி போன்ற விபரங்களை மேற்கண்ட வலைத்தளத்தில் அறியலாம்.

# தமிழக நாடார் மேட்ரிமொனி

SINCE 2007

சென்னை, தமிழக மெங்கும் மற்றும் வெளிநாடு வரன்கள்.

தங்களின் வீட்டிலுள்ள வரன்களுக்கு மணமகன், மணமகள் விபரங்கள், ஜாதகத்துடன் தங்கள் வீட்டிலிருந்து, எங்களின் வெப்சைட் மூலமாக நேரில் பார்த்து வெகு சுலபமாக தேர்ந்தெடுக்கலாம். வரன் பதிவு இலவசம்.

## visit our website
## www.tamilaganadarmatrimony.com

நம்ம தமிழகத்தின் சென்னை, நெல்லை, தூத்துக்குடி, குமரி, விருதுநகர் உட்பட அனைத்து மாவட்டம்.

இந்தியாவின் சென்னை, மும்பை, கர்நாடாகா, ஆந்திரா மற்றும் அனைத்து மாநில நாடார்கள்.

USA, UK, Canada, Singapore, Malaysia, Australia, Germany போன்ற வெளி நாடுகளிலுள்ள இந்து நாடார், கிறிஸ்தவ நாடார் (RC, CSI, Pentecost) Engineer: BE, ME, MBA, IT, CA, Govt, VIP தொழில் அதிபர்கள் சிறிய, பெரிய வியாபாரிகள் முதல் மணம், மறுமணம் ஏராளம் உள்ளனர்.

டாக்டர்களுக்கென தனி வெப்சைட் உள்ளது MBBS, MD,MS,DGo, MDS, ORTHO, ANEASTHISIA, SIDDHA, HOMEO, NURSE etc..

**TAMILAGADOCTORSMATRIMONY.COM**

எங்களுக் கென்று தனி வெப்சைட் இருப்பதால் எங்களிடம் மிக சுலபமாக திருமணம் முடிகிறது.

உங்கள் வரன்களுக்காக பேச

## நெல்லை T.ராஜன் நாடார்

தாம்பரம், சென்னை-73.

செல்:7338812126, வாட்சப்: 7397776595.

# வா....வியாபாரி ஆகலாம்

## அமுதா B.பாலகிருஷ்ணன்



### 3.சம்பளம் மட்டும் தானா........?

சம்பளமே வேண்டாம் என்று சொல்லி உள்ளே நுழைந்துவிட்டீர்கள்.... சபாஷ்.

என்ன வேலை செய்ய வேண்டும், எப்படி உழைக்க வேண்டும் என்று எதுவுமே தெரியாது பரவாயில்லை - கவலையே வேண்டாம்.

கண்ணக் கட்டி காட்ல விட்ட மாதிரி இருக்கா...? - மிரண்டுடாதீங்க.

எல்லாரும் ஆரம்பத்துல உங்கள மாதிரிதான்... உருண்டு புரண்டுதான் எழும்பியிருப்பாங்க..

"ஐயோ, நமக்கு ஒண்ணுமே தெரியலியே... தாக்குப் பிடிப்போமா... கரை சேருவோமா..." இப்படியெல்லாம் கூட ஒரு பயம் கலந்த தயக்கம் வரும். வரத்தான் செய்யும் - அதனால் தப்பில்லை.

தாக்குப் பிடிக்கணும்

தொழிலைப் படிக்கணும், சொந்தத் தொழில் தொடங்கணும்ங்கிற வேகம் இருக்கும் போது இந்தப் பயமும் தயக்கமும் தானாகப் போய்விடும்.

தாகமுள்ளவன் தண்ணீர் குடிப்பான்.

முன்னேறத் துடிப்பவன் முயற்சி செய்வான்.

முயற்சி செய்பவன் வெற்றி பெறுவான்!

வேலையில் சேர்ந்தவனெல்லாம், எல்லா விஷயங்களையும் கற்றுக் கொள்வானா?

இல்லை........!

"கூர்ந்து கவனிக்காதவன் காடு முழுவதும் சுற்றினாலும் அவன் கண்ணுக்கு விறகே தென்படாது" - என்பது ஸ்பானீஷ் பழமொழி.

அக்கறை இல்லாத மாட்டுக்கு எக்கரையிலும் புல்லு கிடைக்காது.

ஒரு நிறுவனத்தில் பல பேர் வேலை செய்யலாம், பல வருஷங்களாக வேலை செய்யலாம்.

ஆனாலும், அநேகப் பேருக்கு அங்கே என்ன நடக்கிறது, தொழிலை எப்படி நடத்துகிறார்கள் என்கிற விஷயமே தெரியாது.

"இது என்னுடைய "கவுண்டர் (Counter), இங்கவ்ற கஸ்டமரை நான் கவனிச்சுக்கிறேன். என் டூட்டிய நான் கரெக்டா பண்றேன் -"னு ரொம்ப ரிசர்வடா சொல்லுவாங்க.

இவங்க காலமெல்லாம் அந்தக் "கவுண்டரையே" கட்டி மாரடிக்க வேண்டியதுதான்.

இவர்களுக்கும் செக்கு மாட்டுக்கும் எந்த வித்தியாசமும் கிடையாது.

ஒன்றைச் செய்யும்போதே, அக்கம் பக்கத்துல என்ன நடக்குது எப்படி நடக்குது.. அது எப்படி... இது எப்படின்னு தெரிஞ்சுக்கணும்.

சில பையன்களை, சாமான் டெலிவரி கொண்டு போக அனுப்பினாலோ அல்லது, ஒருத்தரைப் பார்த்து "இதைக் கொடுத்துட்டு வா" என்று அனுப்பினாலோ (நாமதான், எப்படிப் போய், எங்க திரும்பி, எங்க வரணும்னு படமும் போட்டு ரூட்டை விளக்கி விவரம் சொல்லி அனுப்பியிருப்போம்) அவன் எப்படியோ கண்டுபிடித்துக் கொடுத்துவிட்டு வந்துருவான்.

இரண்டு மூன்று நாள் கழித்து, அதே இடத்துக்குப் பக்கத்துல ஒரு இடத்தை, அதுவும் பிரபல்யமான, ஒரு இடத்தைச் சொல்லி போயிட்டுவா" -ன்னு சொன்னால் "அது எங்கேயிருக்கு" -ன்னு நம்மகிட்டேயே கேட்பான்.

"அடப்பாவி... முந்தா நாளுதான, இந்த இடத்துக்குப் பக்கத்துல உள்ள அந்த வீட்டுக்குச் சரக்கு கொண்டு போய் கொடுத்தே, போற வழியில, என்னென்ன இருக்கு, அந்த இடத்துக்கு அக்கம் பக்கத்துல என்னென்ன இருக்குன்னு ஒண்ணுமே பாக்கலியா"-ன்னு கேட்டால், அவன் பேய் முழி முழிப்பான்.

அவன் காலமெல்லாம் முழித்துக் கொண்டிருக்கவேண்டியவன்தான்.

இவனைப் போன்ற ஊழியர்களால், முதலாளிக்கு இலாபமும் உண்டு நஷ்டமும் உண்டு.

வேற எங்கேயும் இவன் வேலை தேடிப் போக மாட்டான், சொந்தத் தொழில் பண்ணணுங்கிற எண்ணமும் இவனுக்கு வரவே வராது. அதனால இவன் அந்த நிறுவனத்திலேயே நிலைத்திருப்பான் - முதலாளி வேலைக்கு ஆள் தேடி அலைய வேண்டியதில்லை, அதிகச் சம்பளமும் அவனுக்கு இன்க்ரிமென்ட் கொடுக்கணுங்கிறதில்லை.

அதே சமயத்தில் இவனோடு போராடுறதே பெரிய பொழப்பாப் போயிடும்.

"அத அப்படிச் செய், இத இப்படிச் செய்-யின்னு ஒவ்வொருநாளும் அவனுக்குப் பாடம் நடத்துறதே போதும் போதும்னு ஆயிடும்.

ஒரு மளிகைக் கடையில வியாபாரம் நல்லா நடந்துகிட்டிருந்தது, கூட்டம் அதிகமாயிருந்தது.

"என்னங்க... 200 பட்டாணி கேட்டு எவ்வளவு நேரமாச்சு... கொஞ்சம் சீக்கிரமா குடுங்களேன் -னு வாங்க வந்த அம்மா அவசரப்பட்டாங்க.

"டேய்...ராமசாமி... அங்க என்னடா பண்றே... 200 பட்டாணி கொடுக்க இவ்வளவு நேரமா.....?" ன்னு முதலாளி கத்தினார்.

"அண்ணாச்சி..148 எண்ணியிருக்கேன், மீதியையும் எண்ணிட்டு சீக்கிரமா கொடுத்துர்றேன்" னானன் அவன்.

இவனுக்கும் சம்பளம் கொடுத்துதான் ஆகணும்

சம்பளமே வேண்டாம் என்று வேலையில் சேர்ந்தாயே... உன் நிலை என்ன..?


EAGLE PRESS

"DIARY HOUSE"
Ph : 25952694

35, M.S. Koil Street, Chennai-13.
Tamil Nadu
email: eagle@giamd01.vsnl.net.in
Website : www.eaglepressgroup.com



Owned at Published by K.M.JULIAN from 21, Krishnappa Naickan Street, Mettupalayam, Chennai-33 and Printed by K.M.JULIAN at "NEW MERIT PRINTERS" No: 14/51, Reddykuppam Road, Saidapet, Chennai-15. Editor K.M.JULIAN.



WE'RE BIG ON FUN
Reach levels of fun and fantasy never before experienced. Regale in a holiday experience filled with high energy entertainment at one of India's largest amusement park.
THRILLING INTERNATIONAL RIDES
WATER RIDES, WAVE POOL & WATER FALLS
MARYWORLD FOR KIDS
AMPHITHEATRE AND ENTERTAINMENTS
AMPLE CAR PARKING, RESTAURANTS AND POWER BACK-UP
MGM
Dizzee World
East Coast Road, Muttukadu
M.G. Muthu Group
FOR DETAILS CALL
+91-44-27472129 / 27472131
9790955554 / 9500063716 / 17
www.mgmdizzeeworld.com

Regd.No.TN/CC(S) DN/112/2021-2023
Registered Newspaper RNI 55354/1992
Posted at Egmore RMS-1, Partrika Channal Posted on 7.6.2023
PUBLISHED ON FIRST OF EVERY MONTH WPP Licence No.TN/PMG(CCR)/WPP 315/21-23

If underlivered please return to INDIAN NADARMURASU
21,Krishnappa Naiyakan Street,
Mettupalayam, Chennai-600 033.

Best Wishes from

# SCHOOL VOICE LEGAL TEAM

## EXPERTISE LAWYERS IN EDUCATION LEGAL SOLUTIONS



**ADV. M.J. MARTIN KENNEDY**
M.A.(Eng.) M.A., (His.) M.A., (Jour) M.Phil., B.Ed.,B.L.,
Phone : 99413 34341



**ADV. M.J. JOHN AROKIA PRABHU**
M.A., M.Ed., M.LIS., M.Phil., B.L.,
Phone : 99400 51234

## Expert Guidance given by School Voice Team

- Opening New CBSE School
- CBSE Affiliations & NOC
- New Matric or upgradation of Matric Schools
- Opening Arts & Science College
- Fee Committee Matters
- ESI & PF Issues
- Building Approvals for Schools and Colleges

School Voice, YMCA Campus, 6/74, Ritherdon Road,
Vepery, Chennai - 600 007.
E-mail : schoolvoice22@gmail.com